Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு+II விலை ரூபா 7.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

Dream Solutions Pvt Ltd
The Solutions People
நிலவு.com வெளியீடுகள்
The King Of Multimedia
சுயகற்றலுக்கான தமிழில் பல்லூடக குறுவட்டுக்கள்
Ms-Word-xp Pagemaker Java
Ms-Excel-xp PhotoShop TCP/IP
PowerPoint-xp CorelDraw SQL
Ms-Access-xp Macromedia Flash Thirukkural
Ms-FrontPage-xp Computer Hardware Thamizha
Ms-Visual Basic 3D-Studio Max. இன்னும் பல...!
275, யாழ்வீதி, மானிப்பாய். தொ.இல. 0777 740413

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு: 2036 பங்குனி – 15 ஆம் நாள் ஹிஜ்ரி 1428 ஸபர் 17 (28.03.2005) திங்கட்கிழமை இதழ்:180

# ஆயுதக்குழுவினரின் சூட்டில் இரண்டு பொதுமக்கள் பலி!

## மட்டக்களப்பு – சந்தனமடுவில் சம்பவம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான சந்தனமடுப் பகுதிக்குள் ஊடுருவிய ஆயுதக் குழுவினரால் இரண்டு அப்பாவிப் பொதுமக்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் மாவடிவேம்பைச் சேர்ந்த ஆறுமுகம் நாகலிங்கம் (வயது 41), சித்தாண்டியைச் சேர்ந்த சிவலிங்கம் பாஸ்கரலிங்கம் (வயது 16) ஆகியோரே சுட்டுக்கொல்லப்பட்டவர்களாவர்.

செங்கல் சூளையில் பணிபுரியும் இவர்கள், மீன் பிடிப்பதற்காக குளத்துக்குச் சென்றபோது – மறைந்திருந்த ஆயுதக்குழுவினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (12 ஆம் பக்கம் பார்க்க)

விண்ணாணம் விநாசியர்



பிளேன் கிலி இப்ப வயித்தில புளியைக் கரைக்கப்போகுது...!

# பொதுமக்களின் கொலைக்கு இராணுவ அணியே காரணம்!

## விடுதலைப் புலிகள் குற்றச்சாட்டு

(மட்டக்களப்பு)

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசமான சந்தனமடுப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு அப்பாவிப் பொதுமக்கள் இருவர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்திற்கு, இராணுவத்தின் சிறப்புப் படையணியே பொறுப்பென விடுதலைப் புலிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இது தொடர்பாக விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட அரசியற்துறைஅறிக்கையொன்றை நேற்று வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் – இந்தப் பிரதேசத்தில் நீண்டகாலமாக இயற்கை வளங்களான மணல், மரம் ஆகியன இரவு வேளைகளில் களவாடப்பட்டு வருவதாக விடுதலைப் புலிகளிடம் மக்கள் முறையிட்டிருந்தார்கள். இதனையடுத்து விடுதலைப் புலிகளும் மக்களும் இணைந்து காவல் (12 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் வசமுள்ள விமானங்களை 'ராடர்' மூலம் கண்காணிக்க முடியாது!

## ஜேன்ஸ் பாதுகாப்பு சஞ்சிகை தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் விமானங்களை அழிப்பதற்கான நவீனவான் பாதுகாப்புச் சாதனங்களைக் கொள்வனவு செய்யும் முயற்சியில் அரசாங்கம் இறங்கியுள்ள நிலையில் –

புலிகளிடமுள்ள விமானங்கள், ராடர் சாதனங்களால் இனங்காணக்கூடியளவு உலோகக் கலவையைக் கொண்டிருக்கவில்லையென்றும் – இதனால் இவற்றின் மூலம் அந்தவிமானங்களைக் கண்டுபிடிக்க முடியாது என்றும். சர்வதேச பாதுகாப்புச் சஞ்சிகையான ஜேன்ஸ் அதிர்ச்சித் தகவல் ஒன்றை வெளியிட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் கடற்படை, வான்படை, தரைப்படை குறித்து ஜேன்ஸ் பாதுகாப்பு சஞ்சிகை மேலும் குறிப்பிட்டிருப்பதாவது –

விடுதலைப்புலிகள் தம்மிடமுள்ள விமானங்களை அரசியல், இராணுவ அல்லது பொருளாதார இலக்குகளை புவிநிலைக்காட்டியின் உதவியுடன் (Gps)தாக்குவதற்கு ஏற்றவகையில் தயார்படுத்தி வருகின்றனர். விடுதலைப் புலிகள் ஐந்து மைக்றோ லைட் விமானங்களையும், ஐந்து கிளைடர் விமானங்களையும் வைத்துள்ளனர்

அத்துடன், அல்ட்றா லைட் விமானங்களைச் செலுத்துவதற்கு புலிகளின் உறுப்பினர்கள் பிரான்ஸ் மற்றும் இங்கிலாந்து ஆகிய நாடுகளில் பயிற்சிகளை மேற்கொண்டுள்ளனர். இதிலும் இங்கிலாந்தில் பயிற்சி பெற்ற விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் அவர்களின் தற்கொலைப்படையணியைச் சேர்ந்தவர்களென அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

உறுதிப்படுத்தப்படாத தகவல்களின்படி சுவிற்சர்லாந்து, அவுஸ்ரேலியா போன்ற நாடுகளிலும் இந்த விமானப் பயிற்சியை விடுதலைப்புலி உறுப்பினர்கள் பெற்றுள்ளனர். (12 ஆம்பக்கம் பார்க்க)



# புலிகளுடன் பொதுக் கட்டமைப்பை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் முடிவு!

## ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தால் பாதிப்படைந்த மக்களுக்கு நிவாரண உதவிகள் மற்றும் புனரமைப்புப் பணிகளை முன்னெடுப்பதற்கு விடுதலைப்புலிகளுடன் இணைந்து பொதுக் கட்டமைப்பை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்திருப்பதாக ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்தார்.

நேற்றிரவு தொலைக்காட்சியில் நாட்டு மக்களுக்கு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்குவதற்கும், சேதமடைந்த பிரதேசங்களில் மீள்கட்டுமானங் (12 ஆம் பக்கம் பார்க்க)

# ஏறாவூரில் நேற்று மாலை இளைஞர் சுட்டுக் கொலை!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஏறாவூரில் நேற்று மாலை இளைஞர் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார். கொல்லப்பட்டவரின் சடலத்திலிருந்து மீட்கப்பட்ட அடையாள அட்டையியிலிருந்து – இவர் கன்னங்குடாவைச் சேர்ந்த நடராசா தவேந்திரன் (வயது 26) என்பவரென இனங்காணப்பட்டிருப்பதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

செங்கலடிப் பகுதியில் சென்றுகொண்டிருந்தபோது, மோட்டார் சைக்கிளில் வந்த நபர்கள், இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. உயிரிழந்தவரின் சடலம் மட்டக்களப்பு வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

# சர்வஜன வாக்கெடுப்பு யோசனைக்கு சிறுபான்மைக் கட்சிகள் கடும் எதிர்ப்பு

(கொழும்பு)

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழித்தல் மற்றும் வடக்கு – கிழக்கில் சமஷ்டி நிர்வாக அலகை ஏற்படுத்துதல் ஆகிய விடயங்களை உள்ளடக்கி – சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட்டால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு – சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கப் போவதாக அறிவித்துள்ளன.

இதுகுறித்து தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் தெரிவிக்கையில் –

சந்திரிகா நடத்தும் வாக்கெடுப்பில் வடக்கு – கிழக்கில் வாழும் தமிழ்மக்கள் பங்கேற்கமாட்டார்கள். இந்த வாக்கெடுப்பானது அரசியல் விளையாட்டு வேலை. அரசியல் அதிகாரத்தை தக்கவைத்துக்கொள்ளுகின்ற நடவடிக்கை.

இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வை உருவாக்காத வரை – தமிழ்மக்கள் இதுபோன்ற எந்தவொரு சர்வஜன வாக்கெடுப்பிலும் பங்கேற்கமாட்டார்கள்.

20 ஆண்டுகால யுத்தத்தாலும் கடந்த டிசெம்பர் மாதம் 26 இல் ஏற்பட்ட சுனாமியாலும் பாதிப்புக்குள்ளாகி சுமைகளோடு வாழும் தமிழ்மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்காத நிலையில் எப்படி வாக்கெடுப்பில் பங்கேற்க முடியும்.

சுனாமி மீள்கட்டமைப்புக்கு உரிய நிதி ஒதுக் (12 ஆம் பக்கம் பார்க்க)

# அமைச்சரவை கூட்டத்தின் பின் ஜே.வி.பி முக்கிய முடிவெடுக்கும்!

(கொழும்பு)

இன்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை மின்சாரசபை ஆகியவற்றில் மூன்றில் ஒரு பங்குகளை தனியாருக்கு விற்பதற்கு முடிவெடுக்கப்படுமானால், ஆளும்கூட்டணியில் அங்கம் வகிக்கும்ஜே.வி.பிமிகமுக்கியமான முடிவொன்றை எடுக்குமென்று ஜே.வி.பியின் உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தனியார் மயமாக்கல் முயற்சிகள் தொடர்பாக – ஜே.வி.பியின் உயர்மட்ட அரசியல் குழு நேற்றுமுன்தினம் நீண்ட நேரம் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தது.

கடந்த புதன்கிழமை நடைபெற்ற கடைசி அமைச்சரவைக் கூட்டத்தின்போது – பெற்றோலியக் கூட்டுத்தாபனம், இலங்கை மின்சார சபை ஆகியவற்றை தனியார் மயப்படுத்துவது குறித்து விவாதிக்கப்பட்டிருந்தது.

அதன்போது ஜே.வி.பியைச் சேர்ந்த அமைச்சர்கள் தமது கடும் எதிர்ப்பை தெரிவித்திருந்தனர். எனினும், இந்த எதிர்ப்பையும் மீறி இன்று மாலை 6 மணிக்கு நடைபெறவிருக்கும் அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த இரு நிறுவனங்களையும் தனியார் மயப்படுத்துவதற்கான பிரேரணையை அங்கீகரிக்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

தமது எதிர்ப்பையம் மீறி அரசாங்கம் செயற் (12 ஆம் பக்கம் பார்க்க)

# தேசிய கல்வியியற் கல்லூரி நடாத்திய
# கிளி. மாவட்ட ஓவியப் போட்டி முடிவுகள்!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி நுண்கலைத்துறை கிளிநொச்சி மாவட்ட மாணவர்களிடையே நடத்திய ஓவியப் போட்டி முடிவுகளை வெளியிட்டுள்ளது.

இந்தப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களுக்கான பணப்பரிசிலும் வெற்றியீட்டியவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் எதிர்வரும் மே மாதம் 7 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விபரம் வருமாறு -

தரம் 4, 5 பிரிவுகள்

1 ஆம் இடம் : செ.ஜேம்ஸ் கலையரசன் (கிளி. தம்பிராசபுரம் மகா வித்தியாலயம்), 2 ஆம் இடம் : இராசரத்தினம் சாளினி (கிளி.அ.த.க.பாடசாலை), 3 ஆம் இடம் : பிரதீபன் கீர்த்தனா (கிளிநொச்சி மகா வித்தியாலயம்),

### அழகெழல் சிறப்புக் கேடயத்துக்குரியவர்கள்

ப.நிந்தினி (கிளிநொச்சி மத்திய கல்லூரி), இராசரத்தினம் தனஞ்சயன் (உருத்திரபுரம் மகா வித்தியாலயம்) இராசேந்திரம் மதுஷனன் (கிளிநொச்சி மகா வித்தியாலயம்)

தரம் 6,7, 8 பிரிவுகள்

1 ஆம் இடம் : நாகராசா ஜெயசிறி (கிளிநொச்சி மகா வித்தியாலயம்), 2 ஆம் இடம் : கருணாகரன் ரோஜிதன் (முழங்காவில் மகா வித்தியாலயம்), 3 ஆம் இடம் : கஜேந்திரன் சுதர்சன் (கிளிநொச்சி மத்திய கல்லூரி)

### அழகெழல் சிறப்புக் கேடயத்துக்குரியவர்கள்

அனுராசா தங்கராஜ் (கிளி. அக்கராயன் அ.த.க. பாடசாலை), சோபிதா இரவீந்திரநாதன் (கிளி. மத்திய மகா வித்தியாலயம்), அடைக்கலன் நிசாந்தன் (கிளிநொச்சி பாரதி வித்தியாலயம்)

தரம் 09, 10, 11 பிரிவுகள்

1 ஆம் இடம்: உதயசூரியன் அனுராஜ் (பூநகரி நல்லூர் மகா வித்தியாலயம்), 2 ஆம் இடம் : எட்வின் குலராசா லக்ஸன் (கிளிநொச்சி மகா வித்தியாலயம்), 3 ஆம் இடம் நகுலேஸ்வரன் தினோஜன் (திருவையாறு மகா வித்தியாலயம்)

### அழகெழல் சிறப்புக் கிண்ணம் பெறுவோர்

ஆறுமுகநாதன் லோகன் (பூநகரி மகா வித்தியாலயம்), செல்வரட்ணம் சிவகணேசா (கிளி.மத்திய கல்லூரி), எஸ்.ராகுலன் (வட்டக்கச்சி மகா வித்தியாலயம்),

உயர்தரப் பிரிவு

1 ஆம் இடம் : மரியதாஸ் விஜிதரன் (உருத்திரபுரம் மகா வித்தியாலயம்), 2 ஆம் இடம் : துரைராஜசிங்கம் மோகனசிறி (பரந்தன் இந்து மகா வித்தியாலயம்), 3 ஆம் இடம் : வி.திலீபன் (கிளிநொச்சி மத்திய கல்லூரி), கிருஸ்ணானந்தம் ஐங்கரன் (உருத்திரபுரம் மகா வித்தியாலயம்),

### அழகெழல் சிறப்புக் கேடயத்துக்குரியவர்கள்

வரதேவதாஸ் கவிதாஸ் (உருத்திரபுரம் மகா வித்தியாலயம்), சி. சுரேஸ் (கிளிநொச்சி இந்துக் கல்லூரி),

ஆசிரியர் தரம்

1 ஆம் இடம் : நாகராஜா ஜெகதீஸ்வரன் (பூநகரி மகா வித்தியாலயம்), 2 ஆம் இடம் : ஆரோக்கியநாதன் டிரோசினி (கிளிநொச்சி மத்திய கல்லூரி), 3 ஆம் இடம் : துரைச்சாமி நவரட்ணஜோதி (அக்கராயன் மகா வித்தியாலயம்)

### அழகெழல் சிறப்புக் கேடயத்துக்குரியவர்கள்

திருமதி செ.தெய்வேந்திரமூர்த்தி (கிளிநொச்சி மகா வித்தியாலயம்),சரவணமுத்து சந்திரவதனி (சிவநகர் அ.த.க. பாடசாலை உருத்திரபுரம்), கருப்பையா கமலாதேவி (பாரதி வித்தியாலயம்).

## மகா கும்பாபிஷேகம்

ஆறுகால்மடம் அறிவொளி சனசமூக நிலையத்தின் கீழ் பரிபாலிக்கப்பட்டுவரும் அரசடி ஞான வைரவர் தேவஸ்தான மகா கும்பாபிஷேக பெருவிழா இன்று ஆரம்பமாகி 10 நாட்கள் தொடர்ந்து நடைபெறவுள்ளது.

## இறுதியாட்டமும் பரிசில் வழங்கலும்

வலிகாம வலயப் பாடசாலைகளுக்கிடையிலான கரப்பந்தாட்டமும் வலைப்பந்தாட்ட இறுதியாட்டமும் நாளை மறுதினம் பிற்பகல் 10 மணிக்கு சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

சுந்தரசிவம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். (72)

# வாசகர் நோக்கு

## சரசாலை பகுதிக்கு எப்போது மின்சாரம்?

சாவகச்சேரி பிரதேசத்தில் பகுதி பகுதிகளுக்கும் இலங்கை மின்சார சபையால் மின் வழங்கப்பட்டுள்ளபோதும் சரசாலைப் பகுதி தொடர்ந்தும் புறக்கணிக்கப்பட்டபடியே இருக்கிறது. கடந்த பல வருடங்களாக இந்த நிலைமை தொடர்ந்தவண்ணமே உள்ளது.

சரசாலைப் பகுதிக்கு மின் விநியோகம் மேற்கொள்ளும் பொருட்டு இலங்கை மின்சாரசபையால் வீதிகளில் மின்கம்பங்கள் நிறுத்தப்பட்டதே தவிர ஏனைய பணிகள் எதுவும் நடைபெறாமல் இருக்கிறது.

மின்சாரம் வரும் என எதிர்பார்த்திருக்கும் எமக்கு ஏமாற்றமே மிஞ்சியுள்ளது.

எமது பகுதியில் மின்சாரம் இன்மையால் இருட்டுக்கும் மத்தியிலேயே எமது வாழ்வை நடத்திவருகிறோம். மாணவர்களாகிய நாம் விளக்கின் ஒளியிலேயே கல்வி கற்கின்றோம். அத்துடன் வீதிகளும் ஒளியின்றி இருளிலேயே மூழ்கிக்கிடக்கின்றன. இதனால் விபத்துச் சம்பவங்களும் ஏற்படுகின்றன. எனவே எமது பகுதிக்கு மாணவர்கள் மற்றும் மக்கள் நலன்கருதி மின்சாரம் வழங்க இலங்கை மின்சார சபை துரித நடவடிக்கை எடுக்குமா?

- எஸ்.பிரபா (சரசாலை)

# பெற்றோர்களிடையே மோதல் நால்வர் வைத்தியசாலையில்!

### காரைநகரில் சம்பவம்

(காரைநகர்)

காரைநகரில் நேற்றுமுன்தினமிரவு வீட்டினுள் புகுந்த சிலர், உறக்கத்திலிருந்தவர்களை கத்தி மற்றும் பொல்லுகள் கொண்டு தாக்கியதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பேர் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இரு சிறுவர்களிடையே முன்னர் நடைபெற்ற தகராறையடுத்து அந்த சிறுவர்களின் பெற்றோர்களிடையே வாய்த் தர்க்கம் ஏற்பட்டிருந்தது.

இதன்பின்னர் நேற்றுமுன்தினம் இரவு 10.30 மணியளவில் வீட்டினுள் புகுந்த சிறுவர் ஒருவரின் பெற்றோருடன் வந்த சிலர் உறக்கத்திலிருந்தவர்ளைத் தாக்கியுள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் காரைநகரைச் சேர்ந்த முருகேசு (வயது 60), முருகேசு இலட்சுமி (வயது 55), முருகேசு கணேஷ் (வயது 40), முருகேசு சந்திரன் (வயது 34) ஆகியோரே காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

## பிள்ளையார் ஆலய மகாகும்பாபிஷேகம்

(வேலணை)

வேலணை மேற்கு பெரியபுலம் மகா கணபதி பிள்ளையார் (முடிப் பிள்ளையார்) ஆலய மகா கும்பாபிஷேகம் நாளை மறு தினம் புதன் கிழமை நடைபெறவுள்ளது.

## மோட்டார் சைக்கிள் - ஓட்டோ விபத்து; இருவர் படுகாயம்!

(சாவகச்சேரி)

மோட்டார் சைக்கிள் ஓட்டோவுடன் மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் படுகாயமடைந்தநிலையில் யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் மீசாலைச் சந்தியில் மாலை 6 மணிக்கு இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் கொடிகாமத்தைச் சேர்ந்த என்.நடேசு (வயது 24) எஸ்.கரன் (வயது 22) ஆகிய இருவருமே படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

கொடிகாமத்திலிருந்து சாவகச்சேரி நோக்கி மோட்டார் சைக்கிளில் வேகமாக வந்து கொண்டிருந்தவேளை மீசாலை புத்தூர் சந்திக்கு அண்மையில் முன் சென்றுக்கொண்டிருந்த ஓட்டோவுடன் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டது.

## நிர்வாகிகள் தெரிவும் பொதுக்கூட்டமும்

ஊர்காவற்துறை தம்பாட்டி நுணிபுர ஸ்ரீ முத்துமாரி அம்மன்ஆலய நிர்வாகத்தின் பொதுக்கூட்டமும் நடப்பாண்டுக்கான புதிய நிர்வாகத் தெரிவும் இடம்பெற்றது.

இதன்போது தலைவராக மு.கிருஷ்ணபகவானும், உப தலைவராக த.விக்னேஸ்வரனும், செயலாளராக மு.செல்வராசாவும், பொருளாளராக ம.ஞானசேகரமும், ஏழு நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர். (51)

## சனசமூக நிலையங்களின் பிரதிநிதிகளுக்கான கூட்டம்

சாவகச்சேரி நகரசபைக்குட்பட்ட சனசமூக நிலையங்களின் பிரதிநிதிகளுக்கான கூட்டம் இன்று காலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ளதாக நகரசபைச் செயலாளர் குணமணி தேவி ஆறுமுகம் தெரிவித்துள்ளார்.

சனசமூக நிலையங்களின் அபிவிருத்தி தொடர்பாக ஆராயப்படவுள்ளதால் சகல சனசமூக நிலைய நிர்வாகிகளையும் கலந்துகொள்ளுமாறும் தெரிவிக்கப்படுகிறது. இந்தக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் எம்.பியும் கலந்து கொள்ளவுள்ளார். (25)


நாகம்ஸ் சுன்னாகம்
சில தினங்கள் மட்டும்
சூர்யா, ஜோதிகா நடித்த

மாயாவி
கா.நே. 11.00, 3.00, 7.00, 10.00

மனோகரா திரையரங்கு யாழ்ப்பாணம்
பார்த்தீபன், காவேரி, மாஸ்ரர், அஸ்வின் மற்றும் பலர் நடித்த

(சிறந்த குடும்ப காவியம்)
கா.நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30, (பு.நே)

ராஜா யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
பிரசாந், வடிவேல், மும்தாஜ்
லண்டன்
இயக்கம்: சுந்தர்.C
ரிக்கெற்முற்பதிவு செய்துகொள்ளலாம்
கா.நே: 10.30, 2.30, 6.30 மட்டும்
(சி-3859)

நிறைஞ்சனாஸ்
சிம்பு (இருவேடம்)
ஜோதிகா நடித்த
மன்மதன்
கா.நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)

நாதன்ஸ் யாழ்ப்பாணம் குளிரூட்டப்பட்டது
இன்று மட்டும்
குளிரூட்டப்பட்டது
THE PASSION OF THE CHRIST (இயேசுநாதரின் இறுதி 12 மணி நேரக் கதை)
26.3.2005 முதல் விஜயகாந் செந்தில் நடித்த நிறைஞ்ச மனசு
கா.நே(பு.நே) 10.30, 2.30, 6.30, 9.30
(சி-3857)

YAMAHA Touching Your Heart
யமஹா இலவச மெக்கானிக் சேவிஸ்;
இடம்- யமஹா பிளாஸா
காலம்- ஏப்ரல் 1ஆம் 2ஆம் திகதி
நேரம்- காலை9.00-மாலை5.00
யமஹா மோட்டார் கம்பனியும் யாழ்.ஏக விநியோகஸ்தர்கள் யமஹா பிளாஸாவும் இணைந்து நடாத்தும் அனைத்து ரக யமஹா மோட்டார் சைக்கிள்களுக்கான இலவச மெக்கானிக் சேவிஸ்
யமஹா கம்பனியின் விசேட தொழில்நுட்பவியலாளர்கள் கலந்துகொள்கின்றனர்
இந்நிகழ்வில் அனைத்து யமஹா உரிமையாளர்களையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்

YAMAHA PLAZA யமஹா பிளாஸா
298 KKS Road, Jaffna.
021 4590 200
0777 563 803

எங்கள் அன்புக்குரிய வாடிக்கையாளர்களுக்கு

ஒரு நற்செய்தி

எங்கள் தலைமைக் காரியாலயம் சில தவிர்க்கமுடியாத காரணங்களால் மூடவேண்டி ஏற்பட்டுவிட்டது. அதன் நிமித்தம் அங்கிருந்து கொண்டுவரப்பட்ட ஒரு தொகை (ஒதுக்கப்பட்ட குறிப்பிட்ட புத்தகங்கள்) பாவனையாளர்களின் நன்மைகருதி கடந்த 01.04.2004 தொடக்கம் இன்றுவரை எம்மிடம் பொருள்கள் கொள்வனவு செய்த சிட்டை (Bill) வைத்திருப்பவர்களுக்கு 250.00 ரூபாவுக்குக் குறையாத புத்தகங்கள் அன்பளிப்பாக வழங்கப்படும். நேரில் வரவும்.
அநேகரின் வேண்டுகோளுக்கு இணங்க இன்றில் இருந்து மேலும் ஒரு வாரத்துக்கு (03.04.2005 வரை) நீடிக்கப்படவுள்ளது.
ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்
என்.212-214, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
நிர்வாகி - ACD.
(C/3928)

# செங்கடலில் சுற்றிவளைக்கப்பட்ட 137 பேரும் இலங்கையர்களே!

## வெளிவிவகார அமைச்சு ஊர்ஜிதம்

(கொழும்பு)

எகிப்திய கடலோரக் காவற்படையினரால் செங்கடலில் சுற்றிவளைக்கப்பட்டுள்ள 137 அகதிகளும் இலங்கையர்களே என்று உறுதிப்படுத்தப்பட்டிருப்பதாக, வெளிவிவகார அமைச்சின் கடல்கடந்த நாடுகளுக்கான விவகார நிர்வாக ஆலோசகர் அன்சார் தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது -

தலைநகர் கெய்ரோவி லிருந்து 500 கிலோமீற்றர் தொலை வில் செங்கடல் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை 137 பேர் எகிப்திய கடலோரக் காவற்படையினரால் சுற்றிவளைக்கப்பட்டனர்.

இவர்கள் தாம் இலங்கையர் என்று தெரிவித்ததையடுத்து, எகிப்திய அதிகாரிகள் கெய்ரோவில் உள்ள இலங்கைத் தூதரக அதிகாரிகளிடம் இது தொடர்பாக தகவல் கொடுத்தனர்.

இதையடுத்தே சம்பந்தப்பட்ட நபர்கள் இலங்கையர்கள்தான் என்பதை உறுதிப்படுத்த இரண்டு தூதரக அதிகாரிகள் அங்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

இவர்கள் சென்று விசாரணை நடத்தியதையடுத்தே- 137 அகதிகளும் இலங்கையர்தான் என்று ஊர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது.

சுற்றிவளைக்கப்பட்டிருக்கும் 137 இலங்கையரில் 3 தமிழர்களும், 1 முஸ்லிமும், எஞ்சிய 133 சிங்களவர்களும் அடங்குகின்றனர். இவர்கள் நீர் கொழும்பில் இருந்து புறப்பட்டதாகத் தெரிவித்துள்ளனர்.

இஸ்ரேலில் வேலைவாய்ப்புப் பெற்றுத் தருவதாகக் கூறியே முகவர் ஒருவர் இவர்களை அழைத்துச் சென்றதாகவும் கூறப்படுகிறது.

இவர்களின் படகு செங்கடல் பகுதியில் சென்றுகொண்டிருந்த போது- எகிப்திய கடலோரக் காவற் படை அதிகாரிகளால் சுற்றிவளைக்கப்பட்டனர்.

இவர்கள் அனைவரும் தேகாரோக்கியத்துடன் இருப்பதாகவும், இவர்களை மீளவும் இலங்கைக்கு அழைத்துவருவது பற்றிய முடிவு இன்னமும் எடுக்கப்படவில்லை என்றும் தெரியவருகிறது.

# இராணுவ சிரேஷ்ட அதிகாரிகளுக்கு பதவி உயர்வுகள் அறிவிப்பு!

இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த சிரேஷ்ட அதிகாரிகளைப் பதவி உயர்த்துவதற்கான வர்த்தமானி அறிவித்தலை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வெளியிட்டிருக்கிறார்.

பிரிகேடியர் பதவியில் இருந்து தற்காலிக மேஜர் ஜெனரலாகப் பதவி உயர்வு பெற்றிருந்த மூன்று அதிகாரிகளும், பிரிகேடியராக இருந்த ஒரு அதிகாரி -தற்காலிக மேஜர் ஜெனரலாகவும், மேலும் தற்காலிகப் பிரிகேடியர்களாக இருந்த மூவர்- நிரந்தர பிரிகேடியர்களாகவும் நியமனம் பெற்றுள்ளனர்.

பிரிகேடியர் காமினி ஹெட்டியாராச்சி, பிரிகேடியர் சாமன் யாபா குலதுங்க, பிரிகேடியர் துரைரத்தினம் இரத்தினசபாபதி ஆகியோரே, தற்காலிக மேஜர் ஜெனரலாக பதவியில் இருந்து நிரந்தர மேஜர் ஜெனரலாக நியமிக்கப்பட்டிருக்கின் றனர்.

இந்த நிரந்தர நியமனம் 2003 டிசம்பர் 11 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும்.

இதேவேளை, பிரிகேடியர் கபில காமினி ஹெந்த விதாரன தற்காலிக மேஜர் ஜெனரலாக 2004 - ஒகஸ்ட் 25ஆம் திகதி நடைமுறைக்கு வரும் வகையில் பதவி உயர்த்தப்பட்டிருக்கின்றார்.

அத்துடன் கேணல் லெஸ்லி மைத்திரிபால தென்னக்கோன், கேணல் யதுப சுனில் அமரவன்ச டி சில்வா, கேணல் கெமுனு சூரியாராச்சி ஆகியோர் தற்காலிக பிரிகேடியர் தரத்திலிருந்து 2003 டிசம்பர் 31 ஆம் திகதிமுதல் நடைமுறைக்கு வரும் வகையில் நிரந்தர பிரிகேடியராக நியமிக்கப்பட்டுள்ளனர்.

# 100 மீற்றர் தடை வலயத்துக்கு எதிராக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் புகார்!

(கொழும்பு)

கடற்கரையில் 100 மீற்றர் தடை வல்யப் பிரகடனத்துக்கு எதிராக பொது அமைப்பு ஒன்று மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்திருக்கிறது. இந்த முறைப்பாடு கடந்த வெள்ளியன்று கையளிக்கப்பட்டது.

இலங்கை அபிவிருத்தி நிறுவனம் என்ற சிவில் சமூக அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர், திமுது புஞ்சிஹேவ- உள்ளூராட்சி அபிவிருத்தி அதிகாரசபைத் தலைவருக்கு எதிரான இந்த முறைப்பாட்டைச் செய்துள்ளார்.

100 மீற்றர் தடை வலயத்தில் பெருமளவு மக்கள் தமது சொந்த நிலங்களில் குடியிருக்கவோ, வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ளவோ முடியாத நிலைக்குள்ளாகியுள்ளனர் என்றும், இதனால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள்மீது மனித உரிமைகள் ஆணைக்குழு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் இந்த முறைப்பாட்டில் கோரப்பட்டுள்ளது.

அத்துடன் புஞ்சிஹேவா- இந்த 100 மிற்றர் தடை வலயத்துக்கு எதிராக நீதிமன்றத்தில் சட்ட நட வடிக்கை எடுக்கவிருப்பதாகவும், மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சுனாமி அனர்த்தத்தை அடுத்து தெற்கில் 100 மீற்றர் பிரதேசத்தையும், கிழக்கில் 200 மீற்றர் பிரதேசத்தையும் தடை வலயமாகப் பிரகடனப்படுத்த அரசு முடிவுசெய்தமை குறிப்பிடத்தக்கது.

# வடக்கு - கிழக்கில் 1034 பாடசாலைகளை கஷ்ட, அதிகஷ்டப் பாடசாலைகளாக பிரகடனப்படுத்துவதற்குத் தீர்மானம்!

(திருகோணமலை)

வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் கீழ் செயற்படும் 1,034 அரசாங்க பாடசாலைகள் கஷ்ட, அதிகஷ்டப் பிரதேச பாடசாலைகளாகப் பிரகடனப்படுத்தப்படவுள்ளன.

இது தொடர்பான கூட்டம் ஒன்று வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சில் கடந்த வாரம் இடம் பெற்றது. இந்தக் கூட்டத்திலேயே இது தொடர்பான தீர்மானம் எடுக்கப்பட்டது. வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள 24 கல்வி வலயங்களையும் சேர்ந்த வலயக்கல்விப் பணிப்பாளர்கள், திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், மாகாண கல்வித் திணைக்கள் அதிகாரிகள் ஆகியோர் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

குறித்த பாடசாலை அமைந்துள்ள பிரதேசத்தின் உட்கட்டமைப்பு வசதிகள், அந்தப் பாடசாலைக்குச் செல்வதற்கான போக்குவரத்து வசதிகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டே இந்த 1034 பாடசாலைகளும் கஷ்டப்பிரதேச, அதிகஷ்டப் பிரதேச பாடசாலைகளாகப் பிரகடனம் செய்யப்படவுள்ளன.

வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள 24 கல்விவலய பிரிவுகளிலும் தற்போது 2003 பாடசாலைகள் செயற்படுகின்றன. இவற்றில் 278 பாடசாலைகள் கஷ்டப் பிரதேச பாடசாலைகளாகவும், 756 பாடசாலைகள் அதிகஷ்டப் பிரதேச பாடசாலைகளாகவும் தீர்மானிக்கப்பட்டுள்ளன.

இதன் அடிப்படையில் அதிகஷ்டப் பிரதேசத்தில் கடமையாற்றும் ஆசிரியர்கள் மாதாந்தம் 2500 ரூபாவையும், கஷ்டப்பிரதேசத்தில் கடமையாற்றும் ஆசிரியர்கள் மாதாந்தம் 1500 ரூபாவையும் விசேட ஊக்குவிப்பு கொடுப்பனவாகப் பெறவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# க.பொ.த.சாதாரணதரத்துக்கு வெகுஜன ஊடகத்துறை!

## புதிய பாடம் அறிமுகம்

(கொழும்பு)

அரசாங்க பாடசாலைகளில் அடுத்த ஆண்டுமுதல் கல்விப் பொதுத்தராதரப் பத்திர சாதாரணதர மாணவர்களுக்கு "வெகுஜன ஊடகத் துறை" எனும் பாடத்தைப் புதிதாக நடைமுறைப்படுத்த கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. இளந்த நடைமுறை ஊடகத்துறை அமைச்சின் அனுசரணையுடன் இடம்பெறவுள்ளது.

ஊடகத்துறை தொடர்பான ஆசிரிய பயிற்சியை ஏற்கனவே பெற்றுள்ள ஆசிரியர்கள் மூலம் தெரிவு செய்யப்படும் பாடசாலைகளில், இந்தப் புதிய பாடம் கற்பிக்கப்படவுள்ளது.

இதன் அடிப்படையில் 2007 ஆம் ஆண்டு நடைபெறும் கல்விப் பொதுத்தராதர பத்திர சாதாரணதர பரீட்சையில் வெகுஜன ஊடகத்துறை எனும் பாடத்தையும் மாணவர்கள் தோற்ற அனுமதிக்கப்படுவர். இதனைத் தொடர்ந்து க.பொ.த.சாதாரணதர வகுப்புகளைக்கொண்ட அனைத்துப் பாடசாலைகளிலும் இந்தப் புதிய பாடத்தைக் கற்பிக்கும் முகமாக, ஊடகத்துறை அமைச்சின் நெறிப்படுத்தலில் ஆசிரியர்களுக்கு ஊடகத்துறை சார்ந்த பயிற்சிகளும் வழங்க ஏற்பாடு செய்யப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அரச சார்பற்ற நிறுவனங்களை கண்காணிக்க நிர்வாகசபை தேவை

(கொழும்பு)

வெளிநாட்டு உதவிகளைப் பெறும் அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகளைக் கண்காணிக்க நிர்வாக சபையொன்றை நியமிக்கு மாறு ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப் பினர் நந்தன குணதிலக சபாநாயகருக்கு ஆலோசனை சமர்ப்பித்துள்ளார்.

இந்த ஆலோசனையில் ஒப்பமிட்டவர்களுள் அரசின் பிரதான அமைப்பாளர் ஜெயராஜ் பெர்ணான்டோ புள்ளேயும் அடங்குகிறார். (தே)

# தமிழீழ தொலைக்காட்சி ஒளிபரப்புக்கு திருச்சி மாநாட்டில் மக்கள் வாழ்த்து

(சென்னை)

தமிழீழ தேசிய தொலைக்காட்சி ஒளிபரப்புக்கு தமிழ்நாட்டு மக்கள் தங்களது வாழ்த்துகளைத் தெரிவித்தனர்.

திருச்சியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற 3 ஆம் மொழிப்போர் மாநாட்டில் உரையாற்றிய எழுச்சிக்கவிஞர் அறிவுமதி, தொலைக்காட்சி ஒளிபரப்புசேவை குறித்த தகவலைத் தெரிவித்தார்.

அத்துடன், தமிழ்நாட்டுத் தமிழர்கள் தங்களது ஆதரவைத் தெரிவிக்கும் வகையில் கரவொலி எழுப்பி வாழ்த்துத் தெரிவிக்குமாறும் அறிவுமதி வேண்டுகோள் விடுத்தார்.

மாநாட்டில் பெருந்திரளாகக் கூடியிருந்த தமிழர்கள், தமிழீழ தொலைக்காட்சி சேவைக்குத் தங்களது வாழ்த்துக்களைத் தெரிவித்து, கரகோசம் செய்தனர்.

# கியூபாவுக்கு எதிரான பிரேரணையை இலங்கை ஆதரிக்கக்கூடாது!

## ஜே.வி.பி. வேண்டுகோள்

(கொழும்பு)

கியூபாவில் மனித உரிமைகள் மீறப்படுவதாகக் குற்றம்சாட்டி ஐ.நா. சபையில் அமெரிக்கா நிறைவேற்றவுள்ள பிரேரணைக்கு இலங்கை அரசு ஆதரவு வழங்கக் கூடாதெனவும், அந்தப் பிரேரணையை எதிர்த்து வாக்களிக்க வேண்டுமெனவும் ஜே.வி.பி. வேண்டுகோள் விடுத்துள்ளது.

கடந்த வியாழக்கிழமை நாடாளுமன்றில் இடம்பெற்ற அமர்வின் போது சபாநாயகரது அனுமதியுடன் ஆற்றிய விசேட உரையிலேயே ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளரும், நாடாளுமன்ற குழுத்தலைவருமான விமல் வீரவன்ச இவ்வாறு தெரிவித்தார்.

விமல் வீரவன்ச தொடர்ந்து உரையாற்றுகையில் -

அமெரிக்கா தொடர்ந்து கியூபாவுக்கு எதிராகப் பொருளாதாரத் தடைகளை விதித்து வரும் நிலையில் கியூபாவில் மனித உரிமைகள் மீறப்படுவதாகப் பிரேரணையை நிறைவேற்றுவதன் மூலம் தனது அதிகாரப்போக்கை நியாயப்படுத்த அமெரிக்கா முனைகிறது.

ஆனால் எமது நாட்டுடன் வரலாற்று உறவுகளையும் மற்றும் எமது விருப்புக்களில் நெருங்கிய உறவுகளையும் கொண்டுள்ள கியூபாவில், அமெரிக்கா கூறுமளவுக்கு மனித உரிமைகள் மீறல் இடம்பெறவில்லை.

கியூபாவில் கடந்த காலங்களில் காணாமற்போன சம்பவங்களோ, சித்திரவதைகளோ இடம் பெறவில்லை. சர்வதேசம் அதற்கு எதிராகப் பொருளாதாரத் தடைகளை விதித்த போதும் - கல்வி, சுகாதார, கலாசாரத்தை கியூபா உயர்ந்தளவில் பேணி வருகிறது.

உலக வல்லரசுகளின் சுரண்டல்களுக்கு உள்ளாகியுள்ள எம்மைப் போன்ற பல நாடுகளால் பகிரங்கமாகக்கூற முடியாதவற்றை, இந்தக் கியூபா நாட்டின் தலைவரே கூறி வருகிறார்.

பகிரங்கமாக எதேச்ச அதிகாரத்துக்கு எதிராகக் குரல்கொடுத்து வருகிறார். நவீன காலனித்துவத்துக்கு எதிராகத் துணிவுடன் சர்வதேச மாநாடுகளில் கியூபாவின் தலைவர் பேசி வருகிறார். எம்மைப் போன்ற நாடுகளின் உரிமைகளுக்காகக் குரல் கொடுக்கும் கியூபா தலைவரின் பணிகள் அளப்பரியது.

இலங்கை ஐ.நா.அங்கத்துவ நாடாகும். ஐ.நா.மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 61 ஆவது கூட்டத் தொடரில் இலங்கைக்கு வாக்களிக்கும் உரிமை உண்டு. எனவே கியூபாவுக்கு ஆதரவாக வாக்களிக்க இலங்கை முன்வர வேண்டும் என அவர் தெரிவித்தார்.

# வாயுக்காப்பு முகமூடி குச்சவெளியில் கண்டுபிடிப்பு

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்திலுள்ள குச்சவெளி இராணுவ முகாம் பகுதியில் இருந்து வாயுத்தாக்குதலில் இருந்து பாதுகாக்கக்கூடிய நவீனரக முகமூடி ஒன்று கைப்பற்றப்பட்டிருப்பதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.


இந்த வாயுக்காப்பு முகமூடி விடுதலைப் புலிகளால் பயன்படுத்தப்படுவதாகத் தகவல் வெளியிட்டிருக்கும் இராணுவ வட்டாரங்கள் - இது எப்படி குச்சவெளி முகாம் பகுதிக்குக் கொண்டுவரப்பட்டது என்பது குறித்து விசாரணைகளை ஆரம்பித்துள்ளன.

இது குறித்து போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடமும் முறைப்பாடு செய்யப்பட்டது. (01)



அளவெட்டி மகாஜனசபை மாதர் சம்மேளனம் மகளிர் தின விழா ஈஸ்வரன் முன்பள்ளி மாணவர்களின் கலை நிகழ்வு.

# பெங்களூர் டெஸ்டில் வெற்றிபெறுவதற்கு இந்திய அணிக்கு 383 ஓட்டங்கள் இலக்கு!



பெங்களூரில் நடைபெற்றுவரும் இறுதி டெஸ்ட் போட்டியின் ஐந்தாவது நாளான இன்று இந்திய அணி வெற்றிபெற பாகிஸ்தான் 383 ஓட்டங்களை இலக்கு நிர்ணயித்துள்ளது.

இந்தியா 3ஆவதுநாள் ஆட்ட நேரமுடிவில் 6 விக்கெட் இழப்புக்கு 379 ஓட்டங்களை எடுத்திருந்தது. லக்ஷ்மன் 51 ஓட்டங்களுடனும், பதான் ஓட்டமெதையும் எடுக்காமலும் ஆடிக் கொண்டிருந்தனர்.

4ஆவது நாள் ஆட்டம் நேற்று தொடர்ந்து நடந்தது. கனேரியா, சமியின் அபாரமான பந்துவீச்சால் இந்திய அணியின் விக்கெட்டுக்கள் சரிந்தன. மேலும் 17 ஓட்டங்கள் எடுப்பதற்குள் பதான் (5), ஹர்பஜன் (1), எல்.பாலாஜி (2) ஆகியோர் ஆட்டமிழந்தனர்.

இதனால் இந்தியா 9 விக்கெட்டுக்கு 396 ஓட்டங்கள் என்ற நிலையில் இருந்தது. 400 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுக்களையும் இழந்துவிடுமென எதிர்பார்க்கப்



பட்டது.


ஆனால் கடைசி விக்கெட் ஜோடியான லக்ஷ்மன்-கும்ளே ஜோடி பொறுமையுடன் எதிர்கொண்டு பாகிஸ்தான் பந்தை விளையாடியது. இந்திய அணி 111.3ஆவது ஓவரில் 400 ஓட்டங்களைத் தொட்டது.

லக்ஷ்மன் மிகவும் பொறுப்புடன் ஆடி ஓட்டங்களைக் குவித்தார். அவருக்கு கும்ளே உறுதுணையாக இருந்தார். இருவரும் ஒரு முறை ஆட்டமிழக்கவேண்டியேற்பட்டது. லக்ஷ்மன் அடித்த பந்தை யுனுஸ்கானும், கும்ளே அடித்த பந்தை கம்ரன் அக்மலும் பிடியெடுக்கத் தவறினார்கள்.

மதிய உணவு இடைவேளையின் போது இந்தியா 125 ஓவர்களில் 9 விக்கெட் இழப்புக்கு 446 ஓட்டங்களை எடுத்திருந்தது. லக்ஷ்மன் 79 ஓட்டங்களுடனும், கும்ளே 19 ஓட்டங்களுடனும் இருந்தனர்.

காலையில் இருந்து மதிய உணவு இடைவேளை வரை இந்தியா 3 விக்கெட்டை இழந்து மேலும் 67 ஓட்டங்களை எடுத்தது.

மதிய உணவு இடைவேளைக்குப் பின்பு ஆட்டம் தொடங்கிய சிறிது



நேரத்தில் கும்ளே ஆட்டமிழந்தார். 22 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது அவரது விக்கெட்டைஅப்ரிடி கைப் பற்றினார்.

இந்திய அணி 128.4 ஓவர்களில் 449 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. இது பாகிஸ்தான் அணியின் ஸ்கோரை விட 121 ஓட்டங்கள் குறைவாகும். லக்ஷ்மன் கடைசிவரை ஆட்டமிழக்காமல் 79 ஓட்டங்கள் எடுத்தார். 183 பந்துகளில் 11 பவுண்டரிகளுடன் இந்த ஓட்டங்களை எடுத்தார். லக்ஷ்மன் - கும்ளே ஜோடி கடைசி விக்கெட்டுக்கு 53 ஓட்டங்களை எடுத்தது ஆட்டத்தின் முக்கிய அம்சமாகும்.

கனேரியா 127 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களைச் சாய்த்தார். சமி 3 விக்கெட்டுக்களையும், அப்ரிடி 2 விக்கெட்டுக்களையும் எடுத்தனர்.

பின்னர் பாகிஸ்தான் அணி 2ஆவது இனிங்ஸை ஆடியது. அப்ரிடியும், யசீர் ஹமீட்டும் தொடக்க வீரர்களாகக் களமிறங்கினர். அப்ரிடி அதிரடி ஆட்டத்தில் ஈடுபட்டார். இதனால் பாகிஸ்தான் 6.5ஆவது ஓவரில் 50 ஓட்டங்களைத் தொட்டது.

அடித்து விளையாடிய அப்ரிடி 26 பந்துகளில் 50 ஓட்டங்களைக் குவித்த அவர், 58 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அதனைத் தொடர்ந்து யுனுஸ்கான் களமிறங்கினார். இவர் முதல் இனிங்ஸில் சிறப்பாக



விளையாடியதுபோல் இரண்டாவது இனிங்ஸிலும் சிறப்பாக விளையாடினார். மறுமுனையில் விளையாடிய யசீர் ஹமீட் 110 பந்துகளில் 5 பவுண்டரிகளுடன் அரைச் சதமடித்தார்.

பாகிஸ்தான் அணி 183 ஓட்டங்கள் இருக்கும்போது ஹமீட் 76 ஓட்டங்களில் கும்ளேயின் பந்தில் ஆட்டமிழந்தார். அதனைத் தொடர்ந்து யுனுஸ்கானுடன், இன்சமாம் களமிறங்கினார். இருவரும் அடித்து ஆடினார்கள்.

பாகிஸ்தான் அணி 261 ஓட்டங்கள் எடுத்திருக்கும்போது, தனது அணி டிக்ளேர் என இன்சமாம் அறிவித்தார். முதல் இனிங்ஸில் 121 ஓட்டங்களுடனும், இரண்டாவது இனிங்ஸில் 261 ஓட்டங்களும் சேர்த்து 383 ஓட்டங்களை இந்தியாவுக்கு இலக்காக நிர்ணயித்தது.



யுனுஸ்கான் 84 ஓட்டங்களுடனும், இன்சமாம் 31 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

அடுத்து 4ஆவதுநாள் ஆட்டம் முடிய 6 ஓவர் மீதமிருக்கையில், இந்திய வீரர்கள் கம்பீர், ஷேவாக் களமிறங்கினார்கள். இருவரும் நிதானமாக ஆடினர்.

ஆட்டநேரமுடிவில் இந்தியா விக்கெட் இழப்பின்றி 25 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கம்பீர் 19 ஓட்டங்களுடனும், ஷேவாக் 6 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர்.

# 292 ஓட்டங்களுக்குள் நியூஸிலாந்து சுருண்டது!



(ஒக்லாந்து)

ஒக்லாந்தில் நடைபெறும் கடைசி டெஸ்ட் போட்டியில்- நியூஸிலாந்து அணியை 292 ஓட்டங்களுக்குள் ஆட்டமிழக்கச்செய்த அவுஸ்ரேலிய அணி முதல் இனிங்ஸில் 4 விக்கெட் இழப்புக்கு 219 ஓட்டங்களை எடுத்தது.

முதல்நாள் ஆட்டநேரமுடிவில் 5 விக்கெட் இழப்புக்கு 195 ஓட்டங்கள் என்றநிலையில் இருந்த நியூஸிலாந்து அணி- நேற்று தொடர்ந்து ஆடி யது.

நேற்றைய ஆட்டத்தில் 97 ஓட்டங்களை மட்டுமே நியூஸிலாந்து அணியால் எடுக்கமுடிந்தது. அஸ்ரில் -19, மக்கலம்-25, பிராங்ளின்-3, வைஸ்மன்-8, விற்றோரி ஆட்டமிழக்காமல் 41 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் மக்ராவும், வோனும் தலா 3 விக்கெட்டுக்களையும், ஜிலெஸ்பி, கஸ்பரோவிச் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இதையடுத்து அவுஸ்ரேலிய அணி துடுப்பெடுத்தாட ஆரம்பித்தது. ஸ்கோர் 8ஆக இருந்தபோது-லாங்



கரின் விக்கெட் வீழ்த்தப்பட்டது. இவர் 6 ஓட்டங்களை மட்டுமே எடுத்தார்.

ஸ்கோர் 84ஆக உயர்ந்தபோது, ஹைடனும் 38 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இந்தநிலையில் பொண்டிங்கும் மார்ட்டினும் இணைந்து ஆடி ஓட்டங்களைக் குவித்தனர்.

ஸ்கோர் 187ஆக உயர்ந்த போது- பொண்டிங்கின் விக்கெட் வீழ்த்தப்பட்டது. இவர் 110பந்துகளில் 13 பவுண்டரிகள், 4 சிக்சர்களுடன் 105 ஓட்டங்களை எடுத்தார்.

அடுத்து ஸ்கோர் 215ஆக இருந்த போது மார்ட்டினும் 38 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து சென்றார்.

அணியின் ஸ்கோர் 219ஆக இருந்தபோது இரண்டாம்நாள் ஆட்டம் முடிவுக்கு வந்தது. கிளார்க் 18 ஓட்டங்களுடனும், ஜிலெஸ்பி ஒரு ஓட்டத்துடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

# இந்தியப் பெண்ணை மணக்கிறார் மலிக்!



(புதுடெல்கி)

பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர் சொகைப் மலிக், இந்தியப் பெண்ணைத் திருமணம் செய்யவுள்ளார்.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் இளம் ஆட்டக்காரரான சொகைப் மலிக் (23 வயது), இதுவரை 93 ஒருநாள் போட்டிகளிலும், 8 டெஸ்ட்களிலும் ஆடியுள்ளார். இவர் இந்தியப் பெண்ணைத் திருமணம் செய்யவிருக்கிறார்.

கடந்த 2003ஆம் ஆண்டு மே மாதம் இவர்களின் திருமணம் தொலைபேசி வழியாக நிச்சயிக்கப்பட்டது. மலிக்கைத் திருமணம் செய்யவுள்ள அந்தப் பெண் தற்போது சவுதியில் உள்ள ஜெடா நகரில் மேற்படிப்பு படித்து வருகிறார். கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு துபாயில் வைத்து முதல் முறையாக என் மனதைப் பறிகொடுத்தேன். அவரைத் திருமணம் செய்ய இருக்கிறேன் என்று மலிக் கூறினார்.

# இரண்டாம் சுற்றுக்கான உதைபந்தாட்டப் போட்டிகள்

எல்லைப்படை மாவீரர் நினைவாகவும், சுனாமி தாக்கத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் கல்வி வளர்ச்சிக்காகவும் தமிழீழ விளையாட்டுத்துறையின் யாழ்.மாவட்ட பிரிவின் ஆதரவுடன் வலிகாமம் உதைபந்தாட்ட லீக் நடத்தும் உதைபந்தாட்ட போட்டி சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்றுவருகின்றது.

முதலாம் சுற்றில் வெற்றிபெற்ற அணிகளுக்கிடையிலான இரண்டாம் சுற்றுப் போட்டியில் இன்று மாலை 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில், வட்டக்கச்சி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வலிகாமம் லீக் சில்வஸ்ரார் விளையாட்டுக் கழகமும், மாலை 4.30 மணிக்கு நடைபெறும் மற்றைய ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து, அளவெட்டி கலைவாணி விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன.

# வடக்கின் பெரும் போர் ஒருநாள் மோதல் இன்று!

(யாழ்ப்பாணம்)

வடக்கின் கிரிக்கெட் பெரும்போரில் கலந்துகொள்ளும் யாழ்.மத்திய கல்லூரி அணிக்கும், யாழ்.சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும் இடையிலான வருடாந்த ஒருநாள் கிரிக்கெட் போட்டி இன்று காலை 9.00 மணி முதல் யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கடந்த 1904ஆம் ஆண்டு முதல் இந்த இரு கல்லூரி அணிகளும் பெரும் போட்டியில் கலந்துகொண்டு வருகின்ற பொழுதிலும், கடந்த 2003ஆம் ஆண்டு முதல் 50 ஓவர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட ஒருநாள் கிரிக்கெட் போட்டியிலும், பெரும் போட்டி முடிவடைந்து, அடுத்த வாரம் விளையாடி வருகின்றன. கடந்த இரு வருடங்களிலும் நடைபெற்ற ஒருநாள் போட்டிகளிலும் யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியே வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது.

யாழ்.மத்திய கல்லூரி அணி றொகான் தலைமையிலும், சென். ஜோன்ஸ் கல்லூரி அணி மதன்ராஜ் தலைமையிலும் ஒருநாள் போட்டியில் கலந்துகொள்வதற்காக களமிறங்குகின்றன. எனினும் 3நாள் பெரும்போட்டியில் கலந்துகொண்ட வீரர்களில் ஒருநாள் போட்டிக்குத் தகுந்த வகையில் சில மாற்றங்களுடன் இரு அணிகளும் இன்று மோதவுள்ளது. (58)

# விளையாட்டு

## மகளிர் உலகக் கிண்ணம்

# இந்திய-இங்கிலாந்து அணிகள் தொடர்ந்தும் வெற்றி பெற்றன!



(பிரிட்டோரியா)

உலகக்கிண்ண மகளிர் கிரிக்கெட் போட்டியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டங்களில் இந்திய, நியூஸிலாந்து, இங்கிலாந்து அணிகள் வெற்றிபெற்றன.

உலகக்கிண்ண மகளிர் கிரிக்கெட் போட்டிகள் தென்னாபிரிக்காவில் நடைபெற்றுவருகின்றன. இதில் நேற்று முன்தினம் நடந்த ஆட்டம் ஒன்றில் இந்திய-தென்னாபிரிக்க அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்கா முதலில் துடுப்பெடுத்தாடியது.

இந்திய அணியினரின் சிறப்பான பந்துவீச்சுக்கு ஈடுகொடுக்கமுடியாமல் தென்னாபிரிக்க அணி 34.3 ஓவர்களில் 80 ஓட்டங்களில் சுருண்டது. இந்திய வீராங்கனை மராதே மொத்தம் 6 ஓவர்கள் பந்துவீசி ஒரு ஓட்டத்தை மட்டும் விட்டுக்கொடுத்து 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

WOMEN'S CRICKET WORLD CUP 2005 SOUTH AFRICA

81 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற எளிதான இலக்குடன் பின்னர் ஆடிய இந்திய அணியின் முக்கிய விக்கெட்டுக்கள் அடுத்தடுத்து சரிந்தன. அஞ்சு ஜெயின், ஜெயாசர்மா ஆகியோர் தலா 2 ஓட்டங்களிலும், கலா ஒரு ஓட்டத்திலும், அஞ்சும் சொப்ரா 7 ஓட்டங்களிலும், மிதாலி ராஜ் 11 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர்.

இதனால் ஆட்டத்தில் பரபரப்பு ஏற்பட்டது. எனினும் 6ஆவது விக்கெட்டுக்கு களமிறங்கிய ஆர்.தார் பொறுப்புடன் ஆடி அணியை வெற்றிப்பாதைக்கு அழைத்துச் சென்றார். இந்தியா 25.5 ஓவர்களில் 6 விக்கெட் இழப்புக்கு 81 ஓட்டங்கள் எடுத்து 4 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. ஆர்.தார் 41 பந்துகளைச் சந்தித்து 1 பவுண்டரி, 2 சிக்ஸர்களுடன் 33 ஓட்டங்களை எடுத்து இறுதி வரை ஆட்டமிழக்காமல் களத்தில் நின்றார்.

மற்றொரு ஆட்டத்தில் நியூஸிலாந்து. அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் இலங்கை அணியைத் தோற்கடித்தது.



இதேவேளை இங்கிலாந்து - அயர்லாந்து அணிகளுக்கிடையிலான இன்னொரு போட்டியில்- இங்கிலாந்து அணி 128 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 50 ஓவர்களில் 6 விக்கெட் இழப்புக்கு 221 ஓட்டங்களை எடுத்தது.

இந்த அணியின் கப்டன் கோனர் ஆட்டமிழக்காமல்-82, பிறின்டிங்-51, நியூட்டன்-23, எட்வேட்ஸ்-21 ஓட்டங்களை எடுத்தனர்.

இதையடுத்துப் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய அயர்லாந்து அணி 50 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 93 ஓட்டங்களையே பெற்றது.

இந்த அணியில் அதிகபட்சமாக ஷலிங்ரன் 17 ஓட்டங்களை எடுத்தார்.

பந்துவீச்சில் றெய்லர்-2, சோஸ்-2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

## யாழ்.பல்கலையில் இடைநிறுத்தப்பட்ட

# பதிவாளரை மீண்டும் சேர்க்க முடிவு: எதிர்த்து ஊழியர் சங்கம் போராட்டம்



யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினர் – இடைநிறுத்தப்பட்ட பதிவாளரை மீண்டும் நியமிக்கப் பல்கலைக்கழக பேரவை எடுத்த தீர்மானத்தை ஆட்சேபித்து நேற்று முன்தினம் காலை 9 மணிக்கு தமது பகிஷ்கரிப்புக் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

பல்கலைக்கழக பிரதான வாயிலின் முன்னால் போராட்டம் ஆரம்பிக்கப் பட்டது. கறுப்புத்துணிகளால் வாய்களைக் கட்டியும், தமது கோரிக்கைகளுக்கு நியாயம் வேண்டிப் பல்வேறு சுலோகங்கள் அடங்கிய பதாகைகளையும் கைகளில் தாங்கியிருந்தனர்.

துணைவேந்தர் தமது கோரிக்கைக்கு எந்தவிதமான உறுதிமொழியையும் வழங்காததால் எமது போராட்டம் தொடரும் என்று பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

பல்கலைக்கழக பதிவாளரை மீண்டும் வேலைக்கு அமர்த்த பல்கலைக்கழக பேரவை எடுத்த முடிவைக் கண்டித்தே – பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் வேலைநிறுத்தப் போராட்டத்தை ஆரம்பித்திருப்பதாக, பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர் சங்கத்தின் முக்கியஸ்தர் ஒருவர் இவ்வாறு தெரிவிக்கப் பட்டது.

பல்கலைக்கழக மூத்த கல்விமான்கள், சர்வதேச மாணவர் பேரவை ஆகியோர் அடங்கிய குழுவோடு துணைவேந்தர் சந்தித்து அதில் எடுக்கின்ற முடிவைத்தான் பேரவை அமுல்படுத்த வேண்டு மென்பதே எங்களது நிலைப்பாடாகும்.

அந்தக் கூட்டத்துக்கு துணைவேந்தர் ஏற்பாடு செய்யும்வரை எங்கள் போராட்டம் தொடரும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# பாதிக்கப்பட்ட மாணவருக்கு சைக்கிள்கள் அன்பளிப்பு!

சுவிஸ் வாழ் தமிழரான செல்லையா பகீரதனின் உதவியுடன் தமிழர் சமூக பொருளாதார அபிவிருத்தி நிறுவனத்தால் சுனாமியால் பாதிக்கப்பட்ட உயர்கல்வி கற்கும் மாணவர்கள் 23 பேருக்கு சைக்கிள்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு நேற்றுமுன்தினம் காலை 10.30 மணிக்கு யாழ்.பரமேஸ்வரா சந்தியில் அமைந்துள்ள சர்வதேச மாணவர் பேரவை அலுவலகத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பொதுச்சுடரை சர்வதேச தொடர்பாடல் யாழ்.மாவட்ட இணைப்பாளர் இளங்கோ ஏற்றிவைத்தார். தமிழீழ தேசியக் கொடியை யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி. இளம்பரிதி ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி மற்றும் சர்வதேச தொடர்பாடல் யாழ்.மாவட்ட இணைப்பாளர் இளங்கோ ஆகியோர் மாணவர்களுக்கு சைக்கிள்களை வழங்கினர்.

# சிறப்புற நடைபெற்ற மகளிர்தின வைபவம்

அளவெட்டி மகாஜன சபை மாதர் சம்மேளனத்தின் மகளிர்தின விழா அண்மையில் சம்மேளனத் தலைவி இ.பத்மராணி தலைமையில் அளவெட்டி சிவாயஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிகள் கலையரங்கில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

இந்த விழாவில் யாழ்.மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் சோ.கலைவிழி, ஆசிரியர் ஈஸ்வரி தர்மலிங்கம், சமாதான நீதிவான் எஸ்.செல்வலஷ்மி, கிராம சேவையாளர் எம்.மாலாதேவி, வலி.வடக்கு.பிரதேச செயலக நிதியாளர் எஸ்.சிவயோகம் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர்.

இந்த விழாவில் உரையாற்றிய பலரும் – பெண்கள் தன்னம்பிக்கை மிக்கவர்களாகவும், சமுதாயப் பொறுப்புணர்வு மிக்கவர்களாகவும் தமது வாழ்வை மாற்றவேண்டுமெனவும், கிராமிய ரீதியிலான சமூக சமய கலாசார முன்னேற்றங்களிலே அதிகமான பங்கை அளித்துச் செயற்பட வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டனர்.

நிகழ்வின் நிறைவாக அளவெட்டி கும்பழாவளை பாலர் கல்விச் சோலை, மகாஜன சபை ஈஸ்வரன் முன்பள்ளி ஆகியவற்றைச் சேர்ந்த மாணவர்களின் கலை நிகழ்வுகளுடன், மாதர் சம்மேளன உறுப்பினர்கள் பங்கு பற்றிய பட்டிமன்ற நிகழ்வொன்றும் இடம்பெற்றது. (94)

## நெடுந்தீவில்

# சாரதி அனுமதிப்பத்திர நடமாடும் சேவை!

(நெடுந்தீவு)

நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்டோருக்கான மோட்டார் சைக்கிள் சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கும் நடமாடும் சேவை, கடந்த புதன், வியாழன் ஆகிய இருதினங்களிலும் இடம்பெற்றன.

இந்த நடமாடும் சேவையின் மூலம் சுமார் 155 பேர் சாரதி அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக் கொண்டனர். இதேவேளை –எழுத்துப் பரீட்சையில் நால்வரும், செய்முறைப் பரீட்சையில் இருவரும் சித்தியெய்தவில்லையென்பதும் குறிப்பிடத்தக்கது.

மோட்டார்போக்குவரத்துத் திணைக்கள யாழ். மாவட்ட உதவி ஆணையாளர் என்.பத்மநாதன், மோட்டார் வாகன பரிசோதகர் எஸ்.குலாஸ் மற்றும் யாழ்.செயலக மோட்டார் திணைக்கள ஊழியர்களும் இந்த நடமாடும் சேவையினை மேற்கொண்டனர். இவர்களுக்கு நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனை ஊழியர்களும் முழு அளவில் ஒத்துழைப்பு வழங்கினர். நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபரின் ஏற்பாட்டிலேயே இந்த நடமாடும் சேவை இடம்பெற்றது.

இந்த நடமாடும் சேவையின் போது உரிய ஆவணங்கள் இருந்தும் நீண்டகாலமாகப் பதிவுசெய்யப்படாத வாகனங்களை பதிவுசெயதல் தொடர்பான விளக்கங்களும், மோட்டார் வாகன பரிசோதனைச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. (113)

# வடமராட்சி கடற்தொழிலாளரிடம் படையினர் மீண்டும் பாஸ் கெடுபடி

(வடமராட்சி)

வடமராட்சியில் சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு மீண்டும் கடற்தொழிலில் ஈடுபட்டுள்ள கடற்தொழிலாளர்கள் மீது இராணுவத்தினரால் மீண்டும் பாஸ் நடைமுறைக் கெடுபிடிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அந்தப்பகுதி கடற்தொழிலாளர்கள் விசனம் தெரிவித்தனர்.

வடமராட்சிக் கரையோரங்களில் அதிகளவில் காவலரண்களை அமைத்துள்ள இராணுவத்தினர் – பாதிக்கப்பட்டுள்ள கடற்தொழிலாளர்களிடம் மீண்டும் பாஸ் நடைமுறையைத் திணிப்பது மனிதாபிமானமற்ற செயல் என வடமராட்சி பொதுமக்கள் ஒன்றியம் கண்டனம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (14)

## குருபூசை தினம்

யோகர் சுவாமிகளின் குருபூசைத் தினம் அளவெட்டி சிவாயஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிகள் கலாசார நிலையத்திலே நினைவுகூரப்பட்டது. கலையரங்கில் அமைக்கப்பட்டுள்ள ஆறடி உயரமான யோகர் சுவாமியின் உருவப்படத்துக்கு பூசைகள் இடம்பெற்றதுடன், யோகர் சுவாமியின் நற்சிந்தனை, பஜனை வழிபாடு என்பனவும் நடைபெற்றன.

அளவெட்டி மகாஜனசபை மாதர் சம்மேளன ஏற்பாட்டிலேயே இந்த நிகழ்வு நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (94)

## வருடாந்த மஹோற்சவம்

வடமராட்சி – துன்னாலை வடக்கு ஆயில் நின்றெல்லாப் பிள்ளையார் ஆலயத்தின் (வல்லியானந்தப் பிள்ளையார் ஆலயம்) வருடாந்த மகோற்சவம் நாளை மறுதினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 10 நாட்கள் நடைபெறவுள்ள உற்சவத்தில் எதிர்வரும் 7 ஆம் திகதி தேர்த் திருவிழாவும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. (14)

# படகு திருத்தும் நிலையம் தும்பளையில் திறக்கப்படவுள்ளது

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மீன்பிடிப் படகுகளின் இயந்திரங்களைத் திருத்துவதற்கான நிலையம் ஒன்று தும்பளையில் திறந்துவைக்கப்படவுள்ளது.

நோர்வே நாட்டைச் சேர்ந்த 'நோர்வேயியன்' எனும் நிறுவனமே இதற்கான உதவிகளை வழங்கவுள்ளது. இது தொடர்பாக மேற்படி நிறுவன அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில் –

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மீனவர்களின் தொழில் நடவடிக்கைகளை மேம்படுத்துவதே எமது நோக்கமாகும். மிகவிரைவில் பருத்தித்துறை – தும்பளையில் இதற்கான நிலையம் திறந்துவைக்கப்படவுள்ளது. இதற்காக 25 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளோம் எனத் தெரிவித்தார். (14)


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

இரண்டாவது அகவையில்



பெயர் : மே.கீர்த்திகன்
முகவரி : கிளிநொச்சி



# வான் தோண்டும் பணிகள் வடமராட்சியில் ஆரம்பம்!

(பருத்தித்துறை)

வடமராட்சி பிரதேசத்தில் கரையோரத்தில் மீண்டும் வான்தோண்டும் நடவடிக்கைகள் கனகர வாகனங்களின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தற்போது இன்பருட்டிப் பிரதேசத்தில் ஏறத்தாழ 500 மீற்றர் நீளமான பிரதேசம்வரை வான்தோண்டல் மற்றும் கல்வேலி அமைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தொடர்ந்தும் அந்தப்பகுதி மக்களின் மனித வளமும், கனரக வாகனங்களின் உதவியுடன் புனரமைப்பு வேலைகள் நடைபெற்றுவருகின்றன. (14)





சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கத்தின் 'சிவஜோதி' நூல் வெளியீட்டு விழா நேற்று யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெற்ற வேளை – முதற்பிரதியை யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்திச்சபைத் தலைவர் பெ.கனகசபாபதி பெற்றுக்கொள்வதை முதற்படத்திலும், பிரமுகர்கள் மேடையில் அமர்ந்திருப்பதை இரண்டாவது படத்திலும் காணலம்.

# கரையோர அரண் அமைப்புக்கு தென்பகுதி கருங்கற்கள் தேவை

(பருத்தித்துறை)

வடமராட்சி பிரதேசத்தில் தொண்டைமானாறு முதல் பொற்பதி வரை கடலோரப் பாதுகாப்புக்காக தென்பகுதியிலிருந்து கருங்கற்கள் எடுத்துவரப்பட்டாலே கடல் அனர்த்தங்களிலிருந்து பாதுகாக்கபலமான அணையை நிறுவமுடியுமென – யாழ்.மாவட்ட கடற்தொழிலாளர் சங்க சமாச செயலாளர் க.சூரியகுமார் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –


பலமாக இந்த அணை நிறுவப்பட வேண்டும். எமது தற்காலிக திட்டத்தின் அடிப்படையில் 240 கோடி ரூபா தேவைப்படுவதாகவும் –

தென்பகுதியிலிருந்து பாரிய கருங்கற்கள் கொண்டுவரப்பட்டு அணை நிறுவுதல் அவசியமெனவும் தெரிவித்தார். (14)


வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் : ............
முகவரி : ............
பிறந்த ஆண்டு: ............
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.




# சிறுகதை

# இடம்மாறும் உணர்வுகள்...

எஸ்-விஜி

நேற்றையப் போலவே இண்டைக்கும் நேரத்தோடேயே முழிப்பு வந்திட்டுது. அம்மாவும் தம்பியும் பக்கத்திலேயே நல்ல நித்திரை. பாய்த்தொங்கலில அண்ணா அப்பாட நெஞ்சுக்கு மேல காலப்போட்டு சுருண்டு கிடக்கிறான். பெற்சீற்ற இழுத்துப் போர்த்துக்கொண்டு அப்பாவும் நல்ல நித்திரை. குளிர்தானே. எனக்கும் குளிருது தான். ஆனா இழுத்துப் போர்க்க எனக்கு விருப்பம் வருகுதில்ல. நித்திரையும் வருகுதில்ல. சரியா நித்திரைகொள்ள ஏலாமக் கிடக்கு. கண்ணை மூடினா பளளிக்கூட வகுப்பும், டீச்சரும்தான் நினைவுக்கு வருகுது. நேசரி மாதிரி சின்னனா இல்லாம நல்ல பெரிய பெரிய கட்டடங்களோட, கனக்கப் பிள்ளையள் வெள்ளச் சட்டையும், நீல ரையும் கட்டிக்கொண்டு வரிசை வரிசையா வந்து போகுதுகள், வெள்ளக் கொக்குப்போல வடிவான பிள்ளையள். என்ர வகுப்பிலையும் கோமதி, அனுபாமா மற்றது ரத்தி, எல்லாரும் நல்லா சிரிச்சி, சிரிச்சி ஓடிப்பிடிச்சி விளையாட நல்ல விருப்பம். ஆனா அந்த குச்சி மாதிரி இருக்கிற, சிவப்பு மூக்குத்தி போடட டீச்சர நினைச்சாத்தான் ஒரே பயமாக இருக்குது. என்ன மாதிரி கோபத்தோட முறைச்சிப் பார்ப்பா... அந்தக் கண்ரெண்டும் கோயிலில முன்னுக்கு நிக்கிற பூதத்தோட கண் மாதிரி பெரிசா உருண்டையா இருக்கும். அந்தக் கண் ரெண்டையும் பார்தத உடனேயே எனக்கு பாத்ரூம் போக வேணும் போல இருக்கும் முறைச்சிப் பார்ததுக்கொண்டு, கையை நீட்டச்சொல்லி ஒரு அடிதான் அடிப்பா. அந்த ஒரு அடி யோடையே லைற் ஒரு தரம் பத்தி நூந்த மாதிரி இருக்கும். அவ அடிச்சா நாங்க சத்தம் போட்டு அழக்கூடாது. அப்பிடி அழுதா இன்னும் அடிப்பா. நேற்றும் அப்பிடித்தான் ஒரு அடி அடிச்சா. எனக்கு நோ தெரியல்ல. ஆனா கை நல்லா சிவந் துட்டுது. கொஞ்ச நேரம் கைய உதறு உதறு எண்டு உதறினனான்தான். அப்பிடி யும் பின்னேரம் மட்டும் பென்சில் புடிச்சி எழுத ஏலாமல் போட்டுது.

தம்பி புரண்டு படுக்கிறான். கால எனக்கு மேல தூக்கிப்போட்டுட்டு. ஆள் நல்ல நித்திரை. பாவம் அப்பிடியே படுக்கட்டும். அவன் வளர்ந்தப்புறகு இந்தப் பள்ளிக்கூடத்துக்கு வரவேணாம் எண்டு அவனுக்குச் சொல்லவேணும். என்னைப் போல அவன் அடிவாங்க மாட்டான். பாவம் அவன்.

போன கிழமை அம்மாவும் அப்பாவும் இந்தப் பள்ளிக்கூடத்தில என்னைச் சேர்த்து விடமுந்தி, நல்லா படிக்கவேணும், டீச்சர் மார் சொல்லுறதக்கேட்டு நல்ல பிள்ளையா இருக்கவேணும், பக்கத்துப் பிள்ளைகளோட சண்டை பிடிக்காம விளையாட வேணும், அவங்களுக்கு ஏதும் தேவையாயிருந்தா குடுத்து உதவவேணும், அவங்க சாப்பாடு கொண்டுவராட்டி கொடுத்து உதவ வேணும் எண்டெல்லாம் சொன்னவங்கதான். நானும் அம்மா, அப்பா சொன்னமாதிரித்தானே நடந்தனான். ஆனா நேசரி மாதிரி எழும்பி நடந்து, மற்றப்பிள்ளைகளோட கதைச்சு, சத்தம் போட்டு, சிரிக்கக் கூடாது எண்டு அம்மாவோ அப்பாவோ சொல்லித்தர இல்லைத்தானே. அதாலதான் முந்தநாள் எழும்பித் திரிஞ்ச தெண்டு அடிவாங்கினன். நேற்று கதைச்ச தெண்டு அடிவாங்கினன்.

நேற்று டீச்சர் வகுப்பில இல்ல. அனுபாமா, ரத்தி ஆக்களிட்ட என்ர புது அழியக்காட்டி, சிரிச்சு விளையாடிக் கொண்டு இருந்தம். எழும்பித்திரியல்ல. கதிரையில இருந்தபடிதான் கதைச்சி சிரிச்சனாங்க, அதுவும் மெதுவாகத்தானே சிரிச்சனாங்க. கதைச்சி சிரிச்ச முசுப்பாத்தியில டீச்சர் வந்ததக் கவனிக்கல்ல. நாங்க கதைச்சத, சிரிச்சத டீச்சர் கண்டு போட்டா. அவவுக்குக் கோபம் வந்திட்டுது போல. எங்களிட்ட ஒண்டும் கேக்கல்ல. நேராய்ப்போய் அந்த அலுமாரிக்குமேல இருந்த தடிய இழுத்து எடுத்து எங்க மூண்டு பேரையும் கையை நீட்டச்சொல்லி ஒவ்வொரு அடிதான். ஐயோ அடியா அது. ரததி பாவம். என்னைவிட கூட நொந்திட்டுது போல குதிச்சி, குதிச்சி கையை உதறி, உதறி அழுதவள். ஆனா அவளும் சத்தம் போட்டு அழல்ல. சத்தம் போட்டு அழுதா இன்னும் அடிப்பா எண்டது அவளுக்கும் தெரியும்தானே.

ம்... அம்மா முழிச்சிட்டா போல தெரியுது. இப்ப துடிச்சிப் பதைச்சி எழும்பப் போறா. எழும்பின உடனே என்னையும் எழுப்பி, பள்ளிக்கூடம் போக ரெடியாகச் சொல்லுவா. இண்டைக்கும் டீச்சர் எதுக்காகவும் அடிக்கலாம்தானே. ரெண்டுநாள் தொடர்ந்து அடிச்சவதானே. இண்டைக்கும் அடிச்சாலும் அடிப்பா. அவவுக்கு எங்களில விருப்பம் இல்லதானே... கண்ண மூடிக்கொண்டு நித்திரை மாதிரிக் கிடப்பம்...

"துளசி... துளசி... எழும்புங்கோ... நேரம் போட்டுது... ஏழு மணியாயிற்று எழும்புங்கோ..." அம்மா என்ர காலில பிடிச்சு ஆட்டிறா. நான் கண்களை இறுக்கி மூடிக்கொண்டு நித்திரைபோல் கிடக்கிறேன்.

"கள்ளி... நித்திரை மாதிரிக் கிடக்கிறீர் என்ன? எழும்புங்கோ அம்மா... எழும்புங்கோ..." அம்மா சொல்லிக்கொண்டே எழும்பி குசினிக்குள்ள போறா. அம்மா கெட்டிக்காரி. அவவிட்ட நான் எதையும் மறைக்க ஏலாது. நான் நித்திரைமாதிரிக் கிடந்ததக் கண்டு பிடிச்சிற்றாதானே.

"ம்... அம்மா..." நான் அழைக்கின்றேன்.

"என்ன குஞ்சு...?"

"இஞ்ச ஒருக்கா வாங்கோ"

"ம்... என்ன?..." அம்மா கேட்டபடி வருகிறார்.

"இண்டைக்கு லீவு நாளா?"



"ஏன் கேட்கிறீங்க?"

"இண்டைக்கு பள்ளிக்கூடம் இருக்கா?"

"ஓம் எழும்புங்கோவன்... நேரம் போட்டுதல்லா?"

"அம்மா, இண்டைக்கு நான் பள்ளிக்கூடம் போகாம நிக்கட்டா?" கேட்கும்போதே எனக்கு அழுகை வருகிறது.

"ஏன் குஞ்சு?... ஏன் பள்ளிக்கூடம் போகாம நிக்கப்போறீங்க?"

"நான் போகல்ல..." விம்மலோடு கூறுகிறேன்.

"பள்ளிக்கூடம் போகாம நிக்கக்கூடாது குஞ்சு. நீங்க நல்ல பிள்ளைதானே. நல்ல பிள்ளையள். ஒழுங்காகப் பள்ளிக்கூடம் போவினமாம். என்ர குஞ்சு எழும்புங்கோ... நான் தண்ணி வைக்கிறன்; குளிக்கவாக்க" அம்மா சொல்லிக்கொண்டே எழும்பி குசினிக்குள்ள போறா.

"ம்..... நான் பள்ளிக்கூடம் போக இல்ல..." மெதுவாக சிணுங்குகிறேன். டீச்சரது முகம் படுக்கை அறையின் சுவரில் தெரிகிறது. அதனைக்காண அழுகை வருகிறது. கண்களில இருந்து கண்ணீர் தானாகவே வழிந்து, காதுக்குள் போகிறது. அம்மா திரும்பி வருகிறார்.

"ஏன் போக ஏலாண்டுறீங்க...?"

"டீச்சர் அடிப்பா..." நான் அழுகையோடே கூறுகிறேன்.

"உங்கட டீச்சர் நல்ல டீச்சர்தானே... அவ அடிக்கமாட்டா... எழும்புங்கோ குஞ்சு நேரமாகுது." அம்மா அவசரம் காட்டுகிறார்.

"இல்ல அவ நல்ல டீச்சர் இல்ல. அடிக்கிறவ. எனக்கு நேத்தும் அடிச்சவ..."

"ஏன் அடிச்சவ?"

"சும்மா அடிச்சவ..."

"சும்மா அடிச்சிருக்கமாட்டாவே. நீங்க குழப்படிவிடாம இருந்தா டீச்சர் அடிக்க மாட்டா... நீங்க ஏதோ குழப்படி விட்டிருக்கிறீங்க என்ன...? அதுதான் டீச்சர் அடிச்சவ அப்பிடித்தானே...?"

அம்மா டீச்சரிட பக்கம்தான் நிண்டு கதைக்கிறா. அவவும் டீச்சருக்குப் பயம் போல. அதுதான் அவட பக்கம் நிண்டு கதைக்கிறாவாக்கும்.

"நேத்து என்ர புது அழியக்காட்டி ரத்தியோட கதைச்சதுக்கு அடிச்சவ. முந்தநாளும் எழும்பி நிண்டதுக்கு அடிச்சவ..."

"அந்தா, பாத்தீங்களா, நீங்க சத்தம் போட்டு கரைச்சல் குடுத்தா அவ அடிப்பாதானே?... சரி... சரி... இனி நான் டீச்சரிட்ட சொல்லுறன் அடிக்கவேணாம் எண்டு. நீங்க இண்டைக்கு வெளிக்கிடுங்க, கெதியா. சைக்கிள்கார அங்கிள் வரப்போறார். நேரமாச்சு."

அம்மா என்னப் பள்ளிக்கூடம் அனுப்பிறதிலேயே குறியாக இருக்கிறா. என்ர பயத்தப் பத்தி அவ அக்கறப்படுறதாகத் தெரியேல்ல. எனக்கோ அந்தப் பள்ளிக்கூடத்துக்குப்போக ஏலாமக் கிடக்கு. என்ன் மாதிரி அடிக்கிறா டீச்சர். பள்ளிக்கூடங்களில சின்னப் பிள்ளையளுக்கும் டீச்சர் ஆக்கள் அடிச்சித்தான் படிப்பிப்பாங்க எண்டா- நான் அங்க படிக்காமலே இருப்பம். நேசரியில படிப்பன்தானே. எனக்கு அழுகை வருகிறது. விம்மி விம்மி அழுகின்றேன். எனது அழுகைச் சத்தம் கேட்டு அப்பா, அண்ணா, தம்பி எல்லோருமே எழும்பி விடுகின்றனர்.

"இஞ்ச பாருங்கோவன். இவ இண்டைக்கு பள்ளிக்கூடம் போக ஏலாதெண்டு அடம் புடிக்கிறா... என்ன எண்டு ஒருக்காக் கேளுங்க..." அம்மா என்னை ஒருமாதிரியாகப் பார்த்துக் கொண்டே அப்பாவிடம் சொல்லிற்று குசினிக்குள் போகிறா.

"ஏனாம்...?... ஏன் துளசியம்மா பள்ளிக்கூடம் போக ஏலாதெண்டு சொல்லுறீங்க...?" அப்பா என்னிடம் கேட்கிறார்.

"அப்பா... அப்பா... ரீச்சர் அடிப்பா அப்பா... அதுதான். நான் போகல்ல..."

"பள்ளிக்கூடம் போகாம இருக்கக்கூடாது குஞ்சு. பிள்ள நல்லா படிச்சி பெரிய ஆளா வரவேணும்தானே. துளசியம்மா சொல்லுற நீங்களல்லே, நல்லாப்படிச்சி வேலைக்குப் போய் கனக்க காசு உழைக்கவேணும் எண்டு. அப்ப ஒவ்வொருநாளும் பள்ளிக்கூடம் போகத்தானே வேணும்..." அப்பாவும் என்னைப் பள்ளிக்கூடம் அனுப்பிவைக்கவே பார்க்கிறார். அவர் பெரிய ஆள். டீச்சருக்குப் பயப்படத் தேவையில்லை. ஆனா நாங்க சின்னப்பிள்ளையள்தானே. அதுதான் அந்த டீச்சர் எங்களுக்கு தடியாலயே அடிக்கிறா... டீச்சரின் நினைப்புவர அந்தப் பள்ளிக்கூடம் போறதில்லை என்ற எண்ணமே வருகிறது. அந்த நினைப்போட நான் அப்பாவைப் பார்க்கிறேன். அப்பா ஏதோ ஒரு யோசனையோடு என்னையே பார்த்துக்கொண்டிருக்கின்றார்.

" என்ன வேற பள்ளிக்கூடத் தில சேர்த்து விடுங்கோ அப்பா. இந்தப் பள்ளிக்கூடத்துக்கு நான் போகேல்ல." மெல்ல மெல்லவா அப்பாவிடம் கூறுகின்றேன்.

"இது என்னவாம் மணி... துளசி கதைக்கிற கதையைப் பாருங்கோவன்." அப்பா அம்மாவைக் கூப்பிடுகிறார்.

"ஓம்... ஓம்... அவவுக்கு விளையாட்டாக் கிடக்கு. பிள்ளையளுக்குக் கஷ்டம் தெரியாம வளர்க்க வெளிக்கிட்டா, பிள்ளையளைப் பாருங்கோவன். இவவச் சேர்க்கக் கொஞ்சக் காசா அந்தப் பள்ளிக்கூடத்துக்குக் கட்டினது? எவ்வளவு கஷ்டப்பட்டு, கேட்ட காசைக்கட்டி சேர்த்துவிட, புள்ளை இப்ப வேற பள்ளிக்கூடத்துல சேர்த்துவிடட்டாம்... அவட கெஞ்சல் கதையைக் கேட்டுட்டு இருக்காம எழுப்பிவிடுங்க குளிக்கவாக்க..."

அம்மாவுக்குக் கோபம் வந்துட்டுதுபோல. அவவுக்குக் கோபம் வந்தா இப்படித்தான் படபடவெண்டு பேசுவா. நான் இந்தப் பள்ளிக்கூடத்துலதான் சேர்ந்து படிக்கப்போறன் எண்டு சொன்னனானா? அவவும் அப்பாவும் சேர்ந்து கதைச்சிச் சேர்த்துப்போட்டு, இப்ப என்ன அடிபடச் சொல்லினம். அவவுக்கென்ன டீச்சர் அவவுக்கா அடிக்கிறா? இல்லைத்தானே. அம்மா வந்து கதைக்கக்குள்ள டீச்சரும் நல்லாத்தான் கதைப்பா. சில நேரங்களில எங்களோடையும் சிரிச்சி சிரிச்சிக் கதைப்பாதான். சிரிச்சி சிரிச்சி பாட்டும் சொல்லித்தாரவதான். ஆனா இருந்துபோட்டு, முழுசிக்கொண்டு ஒரு மாதிரியா நிண்டு அடிக்கிறதத்தான் தாங்க ஏலாமல் கிடக்கு. அப்ப கிடந்து அழுறது நான்தானே. அண்டைக்கும் முதுகில அடிச்ச அடியால சிவப்புக் கோடுமாதிரி அடையாளம் இருந்தத சித்தியும் பார்த்தவதானே. வேலை விட்டு அம்மா பின்னேரம்தான் வர்றதால இதுகள் அவவுக்குத் தெரியாது. என்ன இருந்தாலும் இனி அந்தப் பள்ளிக்கூடம் போறது ஏலாது தான். இண்டைக்குப் போறதில்ல. பாப்பம் என்ன நடக்குது எண்டு. நான் எழும்பாது படுத்துக்கிடக்கிறேன்.

"மணி, அவள் எழும்புறாள் இல்ல..." அப்பா மெல்ல எழுந்து போகின்றார். அண்ணாவும், தம்பியும் அவரோடேயே எழுந்து செல்கின்றனர். அண்ணா கெட்டிக்காரன். அவனுக்கும் நந்தன் சேர் அடிக்கடி அடிக்கிறதெண்டு சொல்லுறவன். அவன் நல்லாப் படிக்கிறவன்தான். சொல்லுற வீட்டுவேலையள அப்ப அப்ப செய்து கொண்டுபோய் சில நாளில பரிசும் வாங்கிறவன்தான். ஆனாலும் எங்கள சைக்கிளில ஏத்திப்போற அந்த மாமா சில நாளில நேரம் பிந்திவந்திட்டா அண்டைக்கு பள்ளிக்கூடம் போகப் பிந்திடும். அவனும் பிறிபெக்ட்டாம். அதால நேரத்தோட பள்ளிக்கூடம் போகாட்டி, நந்தன்சேர் அடிக்கிறவராம். அண்டைக்கு அவனும் அம்மாட்ட சொல்லி அழுதவன்தான். ஆனா பள்ளிக்கூடம் போகமாட்டன் எண்டு ஒருநாளும் சொல்லல்ல. விடிய தானே எழும்பி வெளிக்கிட்டுட்டு பள்ளிக்கூடம் போயிடுவான். அவனுக்கென்ன, அவன் ஆம்புளப்புள்ளதானே... அதுதான் அடி வாங்கினாலும் தாங்கிக் கொள்ளுறான் போல. என்னால அடிவாங்க ஏலாமல் கிடக்கு. நான் சின்ன பொம்பிளப்புள்ள தானே. அதுதான் அடிவாங்க ஏலாமக் கிடக்கு போல. கெட்ட ஆக்கள சாமி தண்டிப்பார் எண்டு அப்பா சொல்லுறவர். அப்படி எண்டா, நந்தன் சேர, எங்கட டீச்சர ஏன் இன்னும் சாமி தண்டிக்கல்ல...?

"துளசி எழும்புங்கோ... விளையாடாம. நேரம் ஏழரையாயிற்றுது." அதட்டிக்கொண்டே வந்த அம்மாவைக்கண்டு எனக்குப் பயம் வருகிறது. இவவும் அடிக்கப் போறாவோ...?

"அம்மா... அம்மா... பிளீஸ் அம்மா... நான் இண்டைக்கு பள்ளிக்கூடம் போகல்ல அம்மா... பிளீஸ்... அம்மா... பிளீஸ்..." நான் கெஞ்சுகிறேன்.

"பகிடிவிடாம எழும்புங்கோ... நல்ல பழக்கம் இது. உலகத்தில நீங்க ஒரு ஆள்தான் இப்படியானதுகளுக்கு அடம்பிடிக்கிற ஆளா இருப்பீங்க... நேரமாச்சு எழும்புங்க..."

அம்மா அதட்டிக்கொண்டே பெற்சீற்றை இழுத்து மடிக்கிறா. குரலில் வித்தியாசம் தெரிகின்றது. அவவுக்குக் கோபம் வந்துவிட்டது நல்லா விளங்குது. இருந்தும் நான் என்ன செய்ய? கண்ணை மூடினால் டீச்சரின்ட முகம்தான் தெரியுது. குப்புறப் புரண்டு படுக்கிறேன்.

"துளசி... எழும்புங்க... நானும் விடிஞ்சி எழும்பினதில இருந்து சொல்லுறன். ஆனா அவ தன்ர புடிவாதக் குணத்தைக் காட்டிக் கொண்டுதான் விளையாடுறா..."

அம்மா எனது வலது கையைப் பிடித்துத் தூக்குகின்றார்.

"அம்மா... அம்மா... கை நோகுதம்மா... விடுங்க, கை நோகுது... ஆ..." நான் சத்தமிட்டு அழுகின்றேன்.

"நேரமல்லா போகுது. உங்களோட இஞ்ச இப்பிடி இழுபட்டுக்கொண்டிருந்தா நான் சாப்பாடு செய்யிறதில்லையா...? அம்மா வேலைக்கு வெளிக்கிடுறதில்லையா...? அதுக்குமுதல் எவ்வளவு வேலை கிடக்குது செய்து முடிக்க... நீங்க என்னடா எண்டா விளையாடிக்கொண்டு இருக்கிறீங்க..." அம்மா அழுவதைப் போல சொல்லி முடிக்கின்றார்.

"நான் பள்ளிக்கூடம் போக இல்ல... எனக்கு அந்தப் பள்ளிக்கூடம் போகப் பயமா இருக்கு... இஞ்ச டீச்சர் அடிச்ச கை நோகுது." சொல்லிக்கொண்டே நேற்று டீச்சர் அடிச்ச கையை நீட்டிக் காட்டுகின்றேன்.

"நானும் சொல்லச் சொல்ல என்ன பகிடி விட்டுக்கொண்டு நிக்கிறீங்க..." அம்மா சொல்லிக்கொண்டே நான் நீட்டிய கையைப் பிடித்து இழுத்து முதுகில் தொம்... தொம்... என அடிக்கின்றார். திடீரெண்டு இப்பிடி அம்மா செய்ததால எனக்கு எதுவுமே விளங்காதமாதிரிப் போட்டுது. அழுகை வரல்ல. நான் அப்பிடியே அம்மாவையே பார்த்துக் கொண்டு நிக்கிறன்.

இது என்ன பார்வ? ஆரை முறைக்கிறீங்க? அவவுக்கு சேட்டையாகக்கிடக்கு... பிள்ளையள் சொன்னாக் கேக்க வேணும்... எவ்வளவு நேரமா நானும் சொல்லுறன்... அவ கேட்டாத்தானே... சொல்லிக்கொண்டே எனது

(தொடர்ச்சி 7 ஆம் பக்கம்)

முதுகில் திரும்பியும் அடித்த அம்மா, அப்பிடியே பிடித்துத் தள்ளிவிடுகிறார். நான் கதவுக்கு வெளியே தள்ளுப்பட்டு விழப் போனவன் தடுமாறி சுவரைப் பிடித்தபடி நிற்கிறேன். திரும்பி அம்மாவைப் பார்க்கிறேன். அவ எனது படுக்கை விரிப்பை அவசர அவசரமாக மடித்துக்கொண்டிருக்கிறா. பாவம் அவ. வேலைக்குப்போக முதல் கன வேலையள் செய்யத்தானே வேண்டி இருக்கு... எனக்கு இப்பதான் அழுகை வருகிறது. என்ர கஷ்டத்தைப் புரிஞ்சுகொள்ளாது, என்ர தேவைகளை விளங்கிக்கொள்ளாது. அம்மாவும் அடித்தது, ஆத்திரமாக, வெறுப்பாக... கோபமாக சேர்ந்து எனக்குள் ஏதோ செய்ய நான் சுவரை அடித்துக் கொண்டு அழுகின்றேன். சத்தமிட்டு அழுகின்றேன். கால்களை மாறி மாறி உதைத்து அழுகின்றேன். இப்பிடி அழ வேணும்போல இருக்கிறது. அழுகிறேன். சத்தமிட்டு அழுகிறேன்.

தம்பி ஓடிவருகின்றான். வந்தவன் அம்மாவையும் என்னையும் மாறி மாறிப் பார்த்துவிட்டு, அம்மாவுக்குப் போய் அடிக்கின்றான். அவன்ர அடி அம்மாவுக்கு நோகாதுதான். அவ அவன் அடிக்கிறதப் பத்தியே கவனிக்காது தன்ர அலுவலையே பார்க்கிறா.

அம்மாட அடி எனக்கு நொந்ததப்போல, தம்பி அடிக்கிற அடி அம்மாவுக்கு நோவைத் தராதுதான். இருந்தும் எனக்குக் கொஞ்சம் ஆறுதலாக இருக்குது. நான் செய்ய இயலாதத அவன் செய்யுறான்தானே.

தம்பி திரும்பி என்னருகில் வந்து, எனது முகத்தைத் துடைத்துவிடுகின்றான். நான் எனது புறங்கையால் முகத்தைத் துடைத்துக் கொள்கிறேன். தம்பியும் அழுகிற மாதிரிக் கிடக்கு. அவன் இப்பிடித்தான் அண்ணாவுக்கோ, எனக்கோ யார் அடித்தாலும் அவங்களுக்குத் திருப்பி அடிப்பான். நாங்க அழுதா எங்கட கண்ணத் துடைச்சிப்போட்டு, பக்கத்திலேயே இருந்து எங்களையே உற்றுப் பார்த்துக்கொண்டு யோசிப்பான். சிலநேரம் அவனும் அழுதுபோடுவான். நான் அழுற சில நேரங்களில அவன் எங்களுக்குக்கிட்ட வந்து, என்னோட இருந்து தடவி விடுறதிலேயே நான் சில நேரங்களில் அழாம விட்டுட்டு அவனோட விளையாடத் தொடங்கியிருக்கின்றேன். ஆனா இண்டைக்கு அப்பிடி விளையாட ஏலாமக் கிடக்கு. இவன் வளர்ந்து என்னோட பள்ளிக்கூடம் வருவானெண்டா எவ்வளவு நல்லா இருக்கும்? இந்த நினைவுகள் வர, நான் அழுவதைக் குறைத்துத் தம்பியையே பார்த்துக் கொண்டிருக்கின்றேன். அம்மா வெளியே வாரா.


"துளசி... உரிச்சுப்போடுவன்... நடங்க, போய்ப் பல்லைத்தீட்டிப்போட்டு டொய்லற் போய் வாங்க. குளிக்க... நேரம் போட்டுது... தெரியும்தானே. அப்பா வந்தா இதவிடக்கூடத் தருவார்..." அம்மா அதட்டியபடி குசினிக்குள் போகிறார். "அக்கா... வா... வாக்கா... வா..." தம்பி கையைப் பிடித்து இழுக்கிறான். ஓம்... ஓம்... அப்பா அடுத்த அறைக்குள் எங்கட யூனிபோர்ம் அயன்பண்ணுறாராக்கும். முடிச்சிற்று வந்தார் எண்டா நேரம் போனதப் பார்த்து அவருக்கும் கோபம் வரும். சில நேரம் இதவிடக்கூட அடி கிடைக்கலாம்தான். அம்மாட குத்து இப்பிடி நோகுது; அப்பா அடிச்சா கைவிரல் பதியும். நினைப்பே பயத்தைத்தர, விருப்பம் இல்லாமலேயே எழும்பி பாத்ரூம் போய்ப் பல்லுத்தீட்டத் தொடங்குகிறேன். முடியவில்லை. அழுகை அழுகையாக வருகிறது. அழுகையை நிப்பாட்ட பல்லைக் கடித்தபடி, கண்களை மூடுகிறேன். இப்ப கண்களுக்குள்ள டீச்சர் தெரியல்ல. அம்மாவும் அப்பாவுமே ஒன்றாகத் தெரிகின்றனர். தலையை உதறியபடி கண்களைத் திறக்கிறேன். டீச்சர் கையில மட்டும்தான் அடிப்பா. ஒரே ஒருநாள் மட்டும்தான் முதுகில அடிச்சவ. ஆனா வீட்டில கையில, காலில, முதுகில, அகப்படுகிற இடத்தில அடி விழும். நினைக்கக்குள்ளே உடம்பு நடுங்குது. கெட்டவங்களுக்கு சாமி தண்டனை குடுப்பார் தானே. குளிச்சிற்று சாமி கும்பிடக்குள்ள சாமிட்ட எனக்கு அடிக்கிறவங்களுக்கு தண்டனை குடுக்கச் சொல்லிக் கேப்பம்... ம்... சீச்சீ... அது வேணாம். பாவம். டீச்சரிட்டயும், அம்மா, அப்பாட்டையும் கனவில வந்து எனக்கு அடிக்கவேணாம் எண்டு சொல்லச் சொல்லிக் கேப்பம். சாமி வந்து கனவில சொன்னா, இவையள் கேப்பினம் தானே. நினைப்பு சிறிது சந்தோஷத்தைத் தருகிறது.

"அம்மா என்னைக் குளிக்கவாத்து விடுங்கோ..." சொல்லும்போது விம்மலை அடக்க முடியவில்லை. பள்ளிக்கூடம் போனாலும் அடிதான். போகாம நிண்டாலும் அடிதான். நாங்கள் சின்னப்பிள்ளையள் தானே. பெரியவங்க சொல்லுறமாதிரி, விரும்புறமாதிரி, நடக்காட்டி அவங்களுக்குக் கோபம் வருமாம். அதால அவங்க எங்களுக்கு அடிப்பாங்களாம். அது சரி, அப்ப நாங்க விரும்புறமாதிரி அவங்க நடக்காட்டி, எங்களுக்கும் கோபம் வரும்தானே. அந்த நேரம் நாங்க அழுறம். அடம்பிடிக்கிறம். அதுக்கும் போய் அடிக்கிறாங்க, கோபப்படுறாங்க. அப்ப சாமிட்ட சொல்லுவம், அவங்கட கனவில வந்து சொல்லுறதோட கோபம் வர்ற நேரத்தில எங்களுக்கு அடிக்காம இருக்கச் சொல்லச் சொல்லிக் கேப்பம்... நினைக்க நினைக்க அழுகை போய்விட்டது. நேரம் போனது வேறு பயத்தைத்தர, நான் அம்மாவை அழைக்கிறேன்.

"அம்மா கெதியா என்னைக் குளிக்கவாத்து விடுங்கோ. நேரம் போட்டுது பள்ளிக்கூடம் போக..."

"எந்தக் குழந்தையும் நல்ல குழந்தை தான் மண்ணில் பிறக்கையிலே. அவர் நல்லவராவதும்..." அப்பா பாடியபடி டொய்லெற்றுக்குள் போய் கதவை மூடிக்கொள்கிறார்.

# நூல்அகம்



நூலின் பெயர் – FACES (குறுங்கதைத் தொகுப்பு)
எழுதியவர் – சசிபாரதி (சு.சபாரத்தினம்)
ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்பு – பார்வதி வாசுதேவ்
வெளியீடு – மித்திரா பதிப்பகம், சென்னை.

முன்னாள் ஈழநாடு மற்றும் முரசொலி ஆகிய பத்திரிகைகளில் வாரமலர் ஆசிரியரும், மூத்த பத்திரிகையாளருமான சசிபாரதி (சு.சபாரத்தினம்) எழுதிய குறுங்கதைகள் அடங்கிய "மனிதர்கள்" என்ற தலைப்பில் அமைந்த தொகுப்பு ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்யப்பட்டு வெளிவந்திருக்கிறது.

கலை நிலா பதிப்பகத்தின் ஏற்பாட்டில் நூல் வெளி யீட்டு விழா – திருச்சியில் நடைபெற்றது. விழாவில் நல்லம்மாள் சசிபாரதி நூலை வெளியிட, திருமதி ஈஸ்பரம், எஸ்.பொ பெற்றுக்கொண்டார்.

மனித நேய உணர்வுகளைச் சிந்திக்கத் தூண்ட வேண்டும் என்ற அக்கறையில் இந்தக் குட்டிக் கதைகள் எழுதப்பட்டுள்ளன. இதன் மொழி பெயர்ப்பு என்பது சுலபமல்ல என்று, சிறப்புரை ஆற்றிய எஸ்.பொ மேலும் தொடர்ந்தார்.

40 ஆண்டுகளாகத் திராவிடக் கட்சிகள் தமிழை வளர்ப்பதாகக் கூறிக் கொண்டுள்ளன. உண்மையில் இக்கால கட்டத்தில் தான் தமிழ்மொழி செத்துக் கொண்டிருக் கிறது. அரசியல்வாதிகளால் மேடைகளில் பேசப்படும் தமிழ்மொழி பொய்யானது. அதில் உயிர் இல்லை. உண்மை இல்லை. திராவிடக் கவிஞர்களால் எழுதப்படும் போலியான கவிதைகளில் தமிழ் இலக்கியம் வளராது.

தமிழர்களின் உயிராகவும், சுவாசமாகவும் தமிழ் மொழி இருக்க வேண்டும். சமுதாயத்துக்கு உணவு, நீர், காற்றைப் போல் எழுத்தாளனும் முக்கியம்.

இலக்கியவாதியால் தான் மொழி வாழ்விக்கப்படுகிறது. புதிய சொற்களை மொழிக்குக் கொண்டு வந்து ஆட்சிப்படுத்தும் உரிமை எழுத்தாளனுக்கு மட்டுமே உண்டு. வாழ்வியல் நடைமுறைக்கு ஏற்றாற்போல் சொற்களை மக்களிடையே திணிக்கும் உரிமை எழுத்தாளனுக்கு உண்டு. அதில், மனித நேயத்தைத் தேடிப் பயணம் செய்பவன் இலக்கியவாதி.



திருச்சியில் நடைபெற்ற சு.சபாரத்தினத்தின் மனிதர்கள் சிறுகதைகளின் ஆங்கில மொழியாக்க நூல்வெளியீட்டு விழாவில் திருமதி நல்லம்மாள் சசிபாரதி நூலை வெளியிடப்பெறுகிறார் திருமதி ஈஸ்பரம் எஸ்.போ. (இடமிருந்து 2 ஆவது) உடன் (இடமிருந்து) எஸ்.பொ.வீ.ந. சோமசுந்தரம் பெ.மணியரசன் சசிபாரதி சு.சபாரத்தினம்.

தனக்கு அதிக சமூகப் பொறுப்புகள் உள்ளதை ஒவ்வோர் எழுத்தாளனும் உணர வேண்டும். மனித நேய உச்சப் பண்புகளை இனம் கண்டு, மனம் நெகிழச் செய்வதுதான் இலக்கியம். தமிழ் மொழியின் படைப்புக் கூறு என்பது – 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு மேல் நிலைத்து வரும் சொத்து. அதை நாளைய சந்ததியினருக்கு இலக்கியம் மூலம் கொண்டுசெல்லும் பொறுப்பு இலக்கியவாதிக்கும், எழுத்தாளனுக்கும் இருக்க வேண்டும் என்றார்.




நூலின் பெயர் – 'தவிர' (கவிதைகளுக்கான இரு திங்களிதழ்)
ஆசிரியர் – தானா விஷ்ணு
இதழ் – 02 (பங்குனி – சித்திரை)
விலை – 10/-

இதில் கவிதைகளான 'இருப்பின் நகரம்', 'ஞானம் கலைந்த இரவு' என்ற தலைப்புகளில் கோகுலராகவன் சித்தாந்தன் எழுதியிருக்க – 'நட்சத்திரம்', 'வன்னியன் மழைக் காட்சி 2004' என்ற தலைப்புக்களில் கருணாகரன் எழுதிய இரண்டு கவிதைகளும் மொழி பெயர்ப்பு கவிதைகளான 'குலைந்த அழகு, நிலவாக இருக்காதே' என்ற தலைப்புக்களில் சங்கரன், இந்திரன் – எழுதியிருக்க க்ருணை ரவியின் கவிதையும் கடைசி அட்டையை அழகுபடுத்துகிறது.

மேலும் – கவிதை தேடும் பயணம் – 02 ரஷ்மியின் கவிதை மொழி பற்றி.... பிரியசகியின் ஆய்வுக் கட்டுரையும் 'ரஜீபனின் வலிகளைத் தாங்கி' என்ற தலைப் பில் அமைந்த கவிதைத் தொகுப்புக் குறித்து சாதுளன் எழுதிய நூல் விமர் சனமும், அக்கரைக்காற்று ஜப்பானிய 'ஹைக்கூ' கவிதைகள் என்ற தலைப்பில் ச.பூரணச் சந்திரன் அலையில் எழுதிய ஆய்வுக் கட்டுரையும் அடங்கி, கைக்கு அடங்கினாலும் வானம் அகப்பட்டு விட்ட பெருமை 'தவிர'வுக்கு இருக்கிறது.

# பழநிபாரதி கவிதைகள்!



ஆணுக்குப் பெண்ணும், பெண்ணுக்கு
ஆணும் போதாது காதலுக்கு
நிலா வேண்டும்; மழை வேண்டும்;
மீன் வேண்டும்; காடு வேண்டும்;
தும்பி வேண்டும்; மழலை வேண்டும்;
மண் புழு வேண்டும்;
கவிதை வேண்டும்.

காதல் கவிதைகள் எழுதுவதில் தமிழ் நாட்டில் தனி இடத்தைப் பிடித்திருக்கும் பழநிபாரதியின் கவிதைகள் அனைத்தும் காதலிக் காதவர்களை காதலிக்கத் தூண்டுகிறது. திரைப்படப் பாடல்களிலும் – காதல் பாடல்கள் இவர் பெயரை வெளி உலகத்திற்கு கொண்டு வந்துள்ளது. ஆயிரத்திற்கு மேற்பட்ட திரைப்படப் பாடல்களை எழுதியிருக்கின்றார். தமிழ்நாடு சிறந்த பாடலாசிரியர் விருது, கலை மாமணி விருது என்று நிறைய விருது களைப் பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவரைப் பற்றி இவரை வளர்த்தெடுத்த தமிழ் நாட்டு கவிஞர் அறிவுமதி சொல்லும்போது....

மரபின் பரிசிவன். நகரெனும் பெரும் பாறை நசுக்கிய வாழ்வை முட்டி மேலெழுந்த கவிதைச் செடி.

குழந்தை மை எடையில் கூச்சம்... குறுந்தொகை அளவில் குறும்பு... சமநிலைக் கலவையன்... பழநிபாரதி.

வலிந்து ஏறி... கிளைபற்றி உலுக்கி... மண் ஊதிப் பழங்கள் பொறுக்குகிற மனசில்லை இவனுக்கு. இயல்பாய்... காற்றுக்கு உதிரும் பழங்களையே இருகரம் குவித்து ஏந்தும் எளிமையன்.

அடிவரை வாழ்க்கை... நுனி வரை கவிதை... இறங்கி... ஏறி புத்தியையும்... உத்தியையும் உள்ளுக்குள் கவிழ்த்து ஊற்றிக் கொண்டவன். எனினும்... தனக்கென தனி நடை எழுதிக் கண்டவன்.

இருண்மை இருட்டில் தொலைந்து விடாமல்... எளிமைச் சரிவில் விழுங்கி விடாமல்... இடைப்பட்ட அழகில் தடம் கண்டு தமிழ் செய்பவன்.

விரைவுத் தொடர் வண்டியில் பயணஞ் செய் யும் மழலையர்தம் கைக்குழிகளில் மழைக்காற்றை எதிர்வாங்கும் அனுபவச் சிலிர்ப்புகள் இந்தக் காதல் கவிதைகள் என்றார்.

பேச்சின் போது
உன் தலையில் சறுக்கிய ஊசலைத்
தட்டிவிட்டேன்
மழை வரும் போலிருந்தது
என் மனது

விடை பெறும் போது
நீ கையசைத்தாய்
உன் புறங்கையில் விழுந்தது
சூரியன்

உனது குளியலறை
என் கவிதை
ரகசியமற்ற
உன் பிம்பத்தின் மேல்
விழுந்து
சரிந்து
உன் காலடியில்
வழிகின்றன
சொற்கள்

சொற்கள் சொட்டச் சொட்ட
நீ சென்ற பிறகும்
அறை முழுக்கப் பெருகியது
ஈரமான அர்த்தம்
நீ எப்படித் துவட்டினாலும்
எங்காவது ஒட்டிய
ஒரு சொல் அல்லது ஓர் எழுத்து
சொல்லிக் கொண்டே இருக்கும்
நீ குளித்த சுகத்தை.

இலக்கியன்.

# முன்பள்ளி இணைப்பாளர்களுக்கான மாதாந்த ஒன்றுகூடல் நிகழ்வு!

(வவுனியா)

தமிழர் புனர்வாழ்வுக்கழகம் மாவட்ட ரீதியாக நடத்திவரும் முன்பள்ளி இணைப்பாளர்களுக்கான பயிற்சிப் பட்டறையும், மாதாந்த ஒன்றுகூடல் நிகழ்வும் நேற்றுமுன்தினம் காலை 9 மணிக்கு உள்ளூராட்சி ஆணையாளர் திணைக்கள உள்ளரங்கில் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வு வவுனியா தெற்கு வலய முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலைய இணைப்பாளர் அருள்நாயகி தலைமையில் நடைபெற்றது.

வவுனியா மாவட்ட முன்பள்ளிக் கல்விக் மேம்பாட்டு நிலையத்தின் அனுசரணையுடன் நடத்தப்பட்டு வருகின்ற இந்தப் பயிற்சிப்பட்டறை நிகழ்வில் பிரதம விருந்தினராக தமிழர் புனர்வாழ்வுக்கழக உதவி நிறைவேற்றுப் பணிப்பாளர் வ.றீகன் கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வின் பொதுச்சுடரை தமிழர் புனர்வாழ்வுக்கழக உதவி நிறைவேற்றுப் பணிப்பாளர் றீகன் ஏற்றிவைத்தார். தொடர்ந்து ஆசியுரை, சிறப்புரை, நன்றியுரை என்பன இடம்பெற்றன.

முன்பள்ளி முதன்மை ஆசிரியர்கள், இணைப்பாளர்களுக்கான சிறப்பு நிபுணத்துவம் வாய்ந்த வளவாளர்களினால் மேலதிக பயிற்சிகள் வவுனியா மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழக அனுசரணையுடன் வழங்கப்பட்டுவருகின்றன.

இந்த நிகழ்வில் வவுனியா மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளர் மூர்த்தி, தமிழர் புனர்வாழ்வுக்கழக ஆரம்பப் பிள்ளைப் பருவ, கல்வி அபிவிருத்திப் பணிப்பாளர் பாண்டியன், வலய உதவிக்கல்விப் பணிப்பாளர் கணேசபாதம், வடக்கு - கிழக்கு மாகாண முன்பள்ளிக்கழக மேம்பாட்டு நிலையத்திட்ட முகாமையாளர் கணேசலிங்கம், வவுனியா மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியத் தலைவர் சுப்பிரமணியம், வவுனியா நகர பிரதேச முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையத் தலைவர் சேனாதிராசா மற்றும் 8 மாவட்டங்களின் முதன்மை ஆசிரியர்கள், பிரதேச, வலய இணைப்பாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# இன்றைய நாளில்... அன்று நிகழ்ந்தவை...

## மார்ச் - 28

1910 : உலகின் முதலாவது கடல் விமானம், மார்க்ஸெயீல்லஸ் அருகே மார்டிக்யூஸ் என்னும் இடத்தில் கடலில் இருந்து மேலெழுந்து பறந்து சென்றது. இதனை ஹென்றி பேபர் என்பவர் வடிவமைத்திருந்தார்.

1919 : ஹங்கேரி - செக்கோஸ்லாவாகியாவுக்கு எதிராகப் போர்ப்பிரகடனம் செய்ததோடு, ஸ்லோவாகியா மீது படை எடுத்தது.

1920 : சிக்காக்கோவில் முட்டை அளவு பெரிதாக ஆலங்கட்டி மழை பெய்தது. தொடர்ந்து வீசிய புயல்காற்றினால் ஏராளமான கார்கள் சருகுகள் போல அடித்துச் செல்லப்பட்டன. மாடி வீடுகள் தரைமட்டமாகின.

1930 : துருக்கியில் புதிய தேசியவாதிகள், தலைநகரான கொன்ஸ்தான்திநோபிளின் பெயரை இஸ்தான்புல் என மாற்றி அறிவித்தனர்.

1939 : ஸ்பெயினில், உள்நாட்டுப் போரில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்தது. ஆயிரக் கணக்கானவர்கள் கைது செய்யப்பட்டு தூக்கிலிடப்பட்டனர். இந்தப் போரில் 7,00,000 இற்கும் அதிகமான வர்கள் கொல்லப்பட்டனர்.

1957 : செய்சல்லெஸ் தீவில் தடுத்து வைக்கப்பட்டு தண்டனை அனுபவித்து வந்த ஆர்ச்பிஷப் மக்காரியோஸ் - பிரிட்டிஷ் அரசால் விடுதலை செய்யப்பட்டார்.

1979 : அமெரிக்காவில் முதல் அணு உலை விபத்து ஏற்பட்டது. இங்கு ஹாரிஸ்பார்க் அருகில் திரீ மைல் ஐலண்டில் அமைந்துள்ள அணுமின் நிலையத்திலேயே இந்த விபத்து ஏற்பட்டது.

1981 : இந்தியாவின் ரோகினி - 560 என்ற செயற்கைக்கோள் ஸ்ரீஹரி கோட்டாவில் இருந்து செலுத்தப்பட்டது.

தொகுப்பு - சந்துரு

# பாண்டியன்குளம் - அம்பாள்புரம் கிராமத்தில் அரசியற்துறை வலயச் செயலகம் திறப்பு

(கிளிநொச்சி)

பாண்டியன்குள பிரதேசத்தில் அம்பாள்புரம் கிராமத்தில் அரசியற்துறை வலய செயலகம் திறப்பு விழா நிகழ்வு அண்மையில் தேசிய எழுச்சிப் பேரவை செயலர் கிருஸ்ணமூர்த்தி தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பொதுச்சுடரை வன்னிவிளாங்குள மாவீரர் துயிலும் இல்லப் பொறுப்பாளர் வளவன் ஏற்றி வைத்தார். தமிழீழத் தேசியக்கொடியை வலயப் பொறுப்பாளர் இ.செந்தூரன் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து அன்னை பூபதியின் திருவுருவப் படத்துக்கான ஈகச் சுடரை கப்டன் முத்தமிழனின் தந்தை ஏற்றிவைக்க, மலர்மாலையை வீர வேங்கை முகிலனின் தாயார் அணிவித்தார். அரசியற்துறை வலய செயலக பெயர்ப்பலகையை நியாப்திட்ட இணைப்பாளர் மதனமோகன் திரை நீக்கம் செய்துவைத்தார்.

வலய செயலகக் கட்டடத்தை நன்னீர் மீன்பிடிச்சங்கத் தலைவர் பன்னீர்ச்செல்வம் நாடாவை வெட்டித் திறந்துவைத்தார். இந்த நிகழ்வின் சிறப்புரைகளை வன்னி விளாங்குள மாவீரர் துயிலும் இல்லப் பொறுப்பாளர் வளவன், நியாப்திட்ட இணைப்பாளர் மதனமோகன், வலயப் பொறுப்பாளர் இ.செந்தூரன் ஆகியோர் நிகழ்த்தினர். தொடர்ந்து மாவீரர்களின் பெற்றோர்களால் இரு மரக்கன்றுகள் நாட்டப்பட்டன.




# மன்னார் பிரதேச சபையை தரமுயர்த்துமாறு கோரிக்கை

(மன்னார்)

மன்னார் பிரதேசசபையை நகர சபையாகத் தரமுயர்த்துமாறு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்த மாவட்டம் சகல தேவைகளும் பூர்த்திசெய்யக்கூடிய வகையில் காணப்படுவதுடன், கல்வித்துறையிலும் முன்னேற்றம் கண்டு வருகிறது.

மக்களின் தொழில் வாய்ப்புகளும் கணிசமாகவுள்ளது. எனவே, மன்னார் பிரதேசசபையை நகர சபையாகத் தரமுயர்த்தவேண்டும் என மாகாண சபையிடம் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## சிறுபோக நெற்செய்கை பற்றிய கலந்துரையாடல்

முல்லைத்தீவு - உடையார்கட்டு குளத்தின் கீழ் மேற்கொள்ளப்படவுள்ள சிறுபோக நெற்செய்கை தொடர்பான கலந்துரையாடல் அண்மையில் உடையார்கட்டு மகா வித்தியாலய மண்டபத்தில் தயானந்தா தலைமையில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் உடையார்கட்டு குளத்தின் கீழுள்ள 60 வீதமான நிலப்பரப்புகளில் நெற்செய்கையை மேற்கொள்ளமுடியுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர், விவசாய அமைப்புகளைச் சேர்ந்தோர் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# முல்லைத்தீவுமாவட்ட அழககச் சங்கத்தின் பொதுக்கூட்டமும் - நிர்வாகத் தெரிவும்!

முல்லைத்தீவு மாவட்டத்துக்கான அழககச் சங்கப் பொதுக்கூட்டம் கடந்த புதன்கிழமை ஒட்டுசுட்டான் அரசியற்துறைச் செயலகத்தில் முல்லைத்தீவு மாவட்ட அழககச் சங்கத் தலைவர் சந்திரலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் தலைமையுரையைத் தொடர்ந்து - கருத்துரைகளை முல்லைத்தீவு மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைப் பொறுப்பாளர் ஈழவன், முல்லைத்தீவு மாவட்ட சுகாதாரப் பிரிவுப் பொறுப்பாளர் நாயகம், ஒட்டுசுட்டான் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழரசன் ஆகியோர் நிகழ்த்தினர்.

இதில் அழகக நிலையங்களின் கட்டண உயர்வு, கமநலச் சேவை நிலையத்தினூடாக ஓய்வூதியத்திட்டம் ஆரம்பித்தல் போன்ற தீர்மானங்களும் எடுக்கப்பட்டன.

தொடர்ந்து ஒட்டுசுட்டான் பிரதேச நிர்வாகத் தெரிவு இடம்பெற்றது. தலைவராக சிறீகாந்தன், செயலாளராக மா.இலங்கேஷ், பொருளாளராக வே.மோகனதாஸ், போஷகராக வே.லோகேந்திரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

# பாண்டியன்குள - அம்பாள்புரத்தில் பெண்கள் சமுதாய வலுவூட்டல் நிகழ்வு

பாண்டியன்குள மையக் கிராமமான அம்பாள்புரத்தில் நியாப் - 2 வேலைத்திட்டங்களுக்கான பெண்கள் சமுதாய வலுவூட்டல் நிகழ்வு - அண்மையில் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவி பரிமளா தேவி தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் சமுதாய வலுவூட்டல், சமுதாய அபிவிருத்தியும் பெண்களின் பங்கும், நியாப் - 2 வேலைத்திட்டங்கள், கிராம மாதர் சங்கத்தின் கடமைகள், தலைமைத்துவத்தின் பண்புகள், பங்களிப்புகள் என்பவற்றுக்கு ஏதுவாக சிறு குழுக்கள் அமைக்கப்பட்டு சேமிப்பு நடைமுறைகள் ஆரம்பிக்கப்பட்டன.

இந்த நிகழ்வின் கருத்துரைகளை பாண்டியன்குள பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர், வலயப் பொறுப்பாளர், பாண்டியன்குள சமூக வலுவூட்டுநர்கள் ஆகியோர் நிகழ்த்தினர். இதில் மாதர்சங்க பிரதிநிதிகள், பொது மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## மன்னார் திருமறைக் கலாமன்றம் உதவி

மன்னார் திருமறைக் கலாமன்றத்தினர் - சுனாமி கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் சென்று உதவிப் பணிகளை மேற்கொண்டுவருகின்றனர்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு, அம்பாறை ஆகிய மாவட்டங்களுக்குச் சென்ற திருமறைக் கலாமன்றத்தினர், தற்போது மாத்தறை மாவட்டத்துக்குச்சென்று - அங்கு பாதிக்கப்பட்ட பெரும்பான்மையினத்தவருக்கு உலர் உணவுப் பொருட்களையும், அத்தியாவசியப் பொருட்களையும் வழங்கியுள்ளனர்.

அத்துடன் கல்விச் செலவிற்கென குடும்பம் ஒன்றுக்கு தலா 5 ஆயிரம் ரூபாவையும் வழங்கியுள்ளனர்.

# வவுனியா தமிழர் புனர்வாழ்வுக் கழக பணிப்பாளரை சர்வதேச செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதி சந்திப்பு

(வவுனியா)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் வவுனியா மாவட்ட வதிவிடப் பிரதிநிதியாகப் புதிதாக நியமிக்கப்பட்டிருக்கும் மார்காரெஸ் - வவுனியா மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழக மாவட்டப் பணிப்பாளர் மூர்த்தியுடன் வியாழக்கிழமை அறிமுகரீதியான சந்திப்பொன்றை மேற்கொண்டார்.

இந்தச் சந்திப்பின்போது வவுனியா மாவட்டத்தில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் முன்னெடுக்கப் பட்டுவரும் வேலைத்திட்டங்கள், சமூக நல்லிணக்கச் செயற்பாடுகள், இந்த மக்களின் அத்தியாவசியத் தேவைகள், இதுவரை மேற்கொள்ளப்பட்ட திட்டங்களால் மக்களுக்குக் கிடைத்த பயன்பாடுகள் பற்றிக் கலந்துரையாடியதுடன், அவை தொடர்பான விளக்கங்களையும் கேட்டறிந்து கொண்டார்.

அறிமுக ரீதியாக நடைபெற்ற இந்தச் சந்திப்பில் தேவைப்படுகின்ற அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் தம்மால் இயன்றளவு உதவிகளைச் செய்வதாக - சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி உறுதியளித்ததுடன், பரஸ்பர ஒத்துழைப்புகளை தம்மால் வழங்க முடியுமெனவும் தெரிவித்தார்.

# சட்டவிரோத மீன்பிடித்தல் அதிகரிப்பு

மன்னார் கடற்பகுதியில் சட்டவிரோதமாக வெடிபொருள் பாவித்து மீன்பிடிக்கப்பட்டுவருகிறது.

கடலில் வெடிபொருள் பாவித்து மீன்பிடித்தல் முற்றாக தடைசெய்யப்பட்டிருந்தபோதும், கடந்த சில நாட்களாக வெடிபொருள் பாவித்து மீன்பிடித்தல் அதிகரித்துள்ளது. இந்த மாவட்டத்தில் வெடிபொருள் விபத்தில் காயமடைவோர் தொகையும் தற்சமயம் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



புனரமைக்கப்படாத நிலையில் காணப்படும் கல்மடுநகர் முன்பள்ளியைப் படத்தில் காணலாம். (படம்:- இராமநாதபுரம் செய்தியாளர்)

## அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல்

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கிராம அபிவிருத்திச் சங்கம், மாதர் சங்கங்களுக்கான அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் இன்று காலை 9 மணிக்கு துணுக்காய் பிரதேச செயலர் தலைமையில், துணுக்காய் பிரதேச செயலகத்தில் இடம்பெறவுள்ளதாக கிராம அபிவிருத்திச் சங்க உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார்.

# முல்லைத்தீவு நகரப்பகுதியில் அஞ்சல் அலுவலகம் இயங்குகிறது

முல்லைத்தீவு அஞ்சல் அலுவலகம் - கடந்த புதன்கிழமை முதல் மீண்டும் முல்லைத்தீவு நகரப்பகுதியில் இயங்கிவருகிறது.

சுனாமி கடல் அனர்த்தத்தால் அனைத்துப் பொருட்களையும் இழந்த இந்த அஞ்சல் அலுவலகம், மீண்டும் கச்சேரிக்கு அண்மையிலுள்ள விளையாட்டுத்துறைக்கான கட்டடத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் - தபால் சம்பந்தமான எந்தப் பிரச்சினையும் முல்லைத்தீவு நகரப் பகுதியில் ஏற்படாது என முல்லைத்தீவு மாவட்ட அஞ்சல் அதிபர் தெரிவித்துள்ளார்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*எவ்வது உறைவது உலகம் உலகத்தோடு*
*அவ்வது உறைவது அறிவு.*

திருக்குறள்

# நமது நோக்கு

## நம்பகத்தன்மையை இழந்துள்ள அரசு

நாட்டில் இன்றைய அரசியல் நகர்வுகளை ஆழ்ந்து அவதானிப்போர்களுக்கு இங்கு ஜனநாயக ரீதியிலான அரசாட்சிமுறையொன்று நடைமுறையிலுள்ளதா என்ற சந்தேகம் எழுவது தவிர்க்க முடியாத ஒன்றேயாகும். அந்த அளவுக்கு இலங்கையின் அதியுயர் அதிகாரபீடத்தின் நடவடிக்கைகளும், அரச இயந்திரத்தின் செயற்பாடுகளும் தேசிய நலனில் எந்தவித அக்கறையுமின்றி பொறுப்பற்ற முறையில் ஏனோதானோவென்று ஆட்சி அதிகாரக் கதிரைகளைப் பற்றியிருப்போரின் சுயநல அபிலாஷைகளுக்கேற்ப, கட்டுக்கோப்பற்ற முறையில் இயங்கி வருவதாகவே உள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு அமைக்கப்பட்டு ஓராண்டு நிறைவுறும் நிலையிலுள்ள இந்த வேளையில், இந்தப் பன்னிரண்டு மாதகாலப் பகுதிக்குள் தேசியரீதியில் அரசு எதையாவது ஆக்கபூர்வமாகவும், நாட்டின் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டும், பொறுப்புணர்வுடன் சாதித்துள்ளதா என்ற கேள்விக்கு, 'இல்லை' என்ற பதிலைத் தவிர வேறு எந்தப்பதிலும் தென்படுவதாக இல்லை.

கடந்த ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சிக்காலத்தில், அதற்கு முன்னர் பொதுசன ஐக்கிய மக்கள் முன்னணி ஆட்சியின் போது நிலவிய போர்ச்சூழ்நிலையானது மறைந்து, ஒரு யுத்த நிறுத்த அமைதிச் சூழல் நிலவ ஆரம்பித்துள்ளதுடன், அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையேயான நோர்வே அரசின் அனுசரணையுடனான சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாக முன்னோடியாக அமைந்து - இன்றுவரை தொடர்ந்துவரும் புரிந்துணர்வு உடன்பாடும் எட்டப்பட்டது. அதன்பின்னர் ரணிலின் தலைமையிலான அரசாங்கம் சட்டரீதியிலான அரசியல் சதியொன்றின் மூலம் அவர் நாட்டில் இல்லாதவேளையில், அர்த்தமற்ற காரணங்களைக் கூறி ஜனாதிபதி அரசைக் கலைத்ததையடுத்து ஏற்பட்ட தேர்தலின் பின்னரான ஆட்சிமாற்றம் சந்திரிகா - சோமவன்ஸ கூட்டணியை அதிகாரக் கதிரைகளில் அமரவைத்தது.

தேர்தலுக்கு முன்னர் சந்திரிகாவுக்கும் சோமவன்ஸவுக்கும் ஏற்பட்ட ரகசிய கூட்டு உடன்பாட்டின்போது, சந்திரிகா அம்மையார் ஜே.வி.பி யினருக்கு என்னென்ன வாக்குறுதிகளைக் கொடுத்தாரோ தெரியாது. ஆனால், ஜனாதிபதியை ஆட்டிப்படைக்கும் வலுவை ஏதோவொரு வகையில் ஜே.வி.பி யினர் தம்கையில் எடுத்துக் கொள்ளுமளவுக்கு அவர் பிடியை அவர்களிடம் கொடுத்துவிட்டார் என்பதே உண்மையாகும்.

அதன் விளைவு, இன்று ஆட்சியை நெறிப்படுத்தும் கடிவாளத்தை ஜனாதிபதி ஜே.வி.பியினரிடம் பறிகொடுத்துவிட்டுள்ள நிலையில், அளவற்ற அதிகாரபலத்தை வைத்துக் கொண்டுகூட ஜனாதிபதியால் சுயமாக இயங்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்றால் அது மிகையில்லை.

சோமவன்சவின் ஜே.வி.பியினருக்கு கொடுத்துள்ள வாக்குறுதிகளுக்காகவோ என்னவோ மக்களுக்கு தேர்தல் காலத்தில் வழங்கிய வாக்குறுதிகளையும் மறந்து செயற்படும் ஜனாதிபதி, மக்களின் - தேசத்தின் நலன்களைப் பாதுகாப்பதைவிடவும் தனது பதவியைப் பாதுகாப்பதிலேயே குறியாக இருப்பதனால் அவரால் ஜனநாயகத் தன்மையைப் பேணமுடியாது போய்விட்டது.

இன்று நாட்டின் அதிமுக்கிய பிரச்சினைகளாக இருப்பது தேசிய இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வொன்றினை அமைதிப் பேச்சுவார்த்தையூடாக ஏற்படுத்துவதும், சுனாமி அனர்த்தத்தால் பாதிப்புக்குள்ளான மக்களுக்கான நிவாரணப் பணிகளையும் மீள்கட்டமைப்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்கான பொதுக்கட்டமைப்பொன்றை உருவாக்குவதுமேயாகும்.

ஆனால், இவ்விரண்டு பிரச்சினைகளிலும் இன்றைய அரசு பொறுப்புணர்வுடன் சிந்தித்து விரைவாக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் விருப்பார்வத்துடன் செயற்படுவதாக இல்லை.


அரசுக்குள்ளே கூட்டணிக் கட்சிகளுக்கிடையேயான புரிந்துணர்வின்மை காரணமாக ஏற்பட்டுள்ள முரண்பாடுகள், தேசிய நலன்சார்ந்த விடயங்களில் கூட ஒருமித்துச் செயற்படும் பண்பை அரசுக்கு இல்லாமல் செய்துவிட்டது.

ஸ்திரத்தன்மையற்ற அரசு உறுதியான எந்த முடிவையும் எந்தப் பிரச்சினையிலும் எடுக்காது என்பதற்கு இன்றைய ஆட்சி ஒரு சிறந்த உதாரணமாகும். இன்றைய அரசும், ஜனாதிபதியும் எரியும் பிரச்சினைகளை மேலும் தூண்டி கொழுந்துவிட்டெரிய வைத்து குறுகிய நோக்கிலான அரசியல் ஆதாயங்களை எட்ட விரும்புவதால், நாட்டுக்கும், மக்களுக்கும் அனுகூலமான எந்த மாற்றமும் உடனடியாக ஏற்படும் சாத்தியம் இல்லையென்றே கூறவேண்டும்.

தனக்குத்தானே சீரான கட்டமைப்பொன்றை கொண்டிராத நிலையில் ஓராண்டு காலத்தை வெறும் வாய்ப்பந்தலிட்டே கடத்தியுள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கமானது -

நாட்டின் ஐக்கியத்தையோ, மக்களின் சுதந்திரத்தையோ பாதுகாக்கும் என எவரும் நம்புதல், கூடாது என்பதுடன், இதனால் இந்த மண்ணில் சமாதானத்தை வலுப்படுத்தவோ, மக்களின் வாழ்வை மேம்படுத்தவோ முடியாது என்பதை உணருதல் அவசியமாகும்.

## நாடும் நடப்பும்



*செய்தி:- தனது அனுமதியின்றி சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பாகவோ, பொதுக்கட்டமைப்புத் தொடர்பாகவோ அரசாங்கக் கட்சி உறுப்பினர்கள் எவரும் எதுவும் பேசினால் கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென ஜனாதிபதி கடும் எச்சரிக்கை.*

### 'ஊர்சுற்றி'யார் பார்வையில்...

# ஆறு லட்சம் கோடி ரூபாய்க்கு விலைபோன உலகத் தலைவர்கள், கலைஞர்கள்!



இங்கிலாந்தின் தலைநகரான லண்டனில் பிரபல மெழுகுச் சிலைகளின் அருங்காட்சியகம் ஒன்று உள்ளது. உலகத் தலைவர்கள், பிரபல சினிமா நட்சத்திரங்கள், கலைஞர்கள் ஆகியோரின் மெழுகுச் சிலைகள் தத்ரூபமாக வடிக்கப்பட்டிருக்கின்றன. இவற்றைப் பொம்மைகள் என்று சொல்லவே முடியாது. இந்தக் காட்சியகத்தைப் பார்வையிடச் செல்வோர் இச்சிலைகளில் விரும்பியவற்றுடன் நின்று புகைப்படம் பிடித்துக் கொள்வர் .

இந்தச் சிலைகளுடன் நின்று எடுத்துக்கொள்ளும் புகைப்படங்கள் அந்தத் தலைவர்கள் அல்லது கலைஞர்களுடன் நின்று எடுத்துக்கொண்ட புகைப்படங்கள் போலவே காட்சியளிக்கும். மதாமேதுசாட் காட்சியகம் என்றே இது அழைக்கப்படுகிறது. இந்தச் சிலைகளின் காட்சிமுடிவில் பழைய வரலாற்றுப் பாத்திரங்கள்போல் வேடமணித்து காட்சிதரும் பகுதியும்இருக்கிறது. இவர்கள் சில கட்டங்களில் கோரமாகவும் நடிப்பார்கள். இந்தப் பகுதிக்குச் செல்லுமுன் குழந்தைகள், இருதய நோயாளிகள் இப்பகுதிக்குச் செல்லாது தவிர்த்துக்கொள்ளும்படி எச்சரிக்கை செய்யும் அறிவிப்புக்கள் காணப்படும். இந்த அரும்பெரும் மெழுகுச் சிலைகளின் காட்சியகம் இப்பொழுது விலைபோயிருக்கிறது. இந்த மெழுகுச்சிலை காட்சியகத்தை துபாயிலுள்ள ஒரு நிறுவனம் விலைக்கு வாங்கியிருக்கிறது. எவ்வளவு கொடுத்து வாங்கியிருக்கிறது தெரியுமா? என்று கேட்டார் நண்பர் பரமசிவம்.

எனக்கென்ன தெரியும் நீரே சொல்லுமென்றேன்.

இந்த அருங்காட்சியகத்தை ஆறு லட்சம் கோடி ரூபாய்க்கு துபாய் நிறுவனம் வாங்கியிருக்கிறதாம் என்றார் பரமசிவம்.

இங்கிலாந்தின் பவுண்களைவிட துபாயின் எண்ணைக்கு அதிக மதிப்பு என்று சொல்லுகிறீர் என்றேன்.

அதுமட்டுமல்ல. இப்பொழுதே தினமும் இக்காட்சியத்தைப் பார்வையிடச் செல்லும் மக்கள் தொகை காட்சியகத்தைப் பார்ப்பதற்காக அதிக பவுண்கள் செலுத்தித்தான் பார்வையிடுகிறார்கள். உள்ளே வாங்கும் சிற்றுண்டிகள், ஐஸ்கிறீம் ஆகியவைகளுக்கும் செலவாகும். என்றாலும் காட்சியைப் பார்த்து வெளியே வருவதற்குமுன் அங்கு சிலைகளைப் பார்க்கும் போதும் ஓட்டோ போன்ற வாகனத்தில் வெளியே கொண்டு வரப்படும்போதும் எடுக்கப்பட்ட புகைப்படங்களில் விரும்பியவற்றை உடனேயே பணம்கொடுத்துக் கையில் வாங்கிக்கொண்டு வரலாம். என்னதான் செலவானாலும் வெளியே வரும்போது மனம் திருப்தியாகவே இருக்கும் என்றார் பரமசிவம்.

துபாய் நிறுவனம் இதை வாங்கியிருப்பதால், இதை வேறு இடத்துக்குக் கொண்டுசெல்லாதென்றே நம்புகிறென். ஆனால் கட்டணத்தில் மாற்றம் ஏதும் ஏற்படலாமோ என்றேன்.

இதைப்பற்றி இப்போ ஒன்றும் சொல்லமுடியாது. ஆனால் இங்கிலாந்திலும் சரி பிரான்ஸ் மற்றும் ஐரோப்பிய நாடுகளிலும் சரி வரலாற்றுப் புகழ்மிக்க இடங்களையும், பழைய சம்பவங்களை எடுத்து நினைவுகூரும் பொருள்கள், கட்டடங்கள், பலவற்றையும் மிகக்கவனமாகப் பராமரித்து வருகிறார்கள். இவற்றைப் பராமரித்து வருவது மட்டுமல்ல இவற்றைத் தமது புதிய பரம்பரையும் கண்டுகளித்து தமது பழம்பெரும் கலைகளையும் வரலாற்றையும் அறிந்து, தெரிந்து, உணர்ந்துகொள்வதற்கும் பயன்படுத்துகிறார்கள். இவை மட்டுமல்ல, வெளிநாட்டவர்களும் இவற்றைப் பார்த்து தமது நாட்டின் பாரம்பரியப் பெருமையை அறிந்து செல்வதற்கும் வழி செய்கிறார்கள் என்று பரமசிவம் மேல் நாட்டவரின் பழமையைப் பேணும் பண்பைப் பற்றிச் சொல்லிக்கொண்டே போனார்.

நம்ம நாடும் நம்ம மக்களும் நமது பழம்பெருமைகளையும் பழைய வரலாற்றுச் சின்னங்களையும் பாதுகாப்பதற்கு ஏதாவது செய்கின்றார்களா?

பரமசிவம் சிரித்தார்!

சிரிக்காதேயும் அந்தப் பரமசிவனே சிரிப்பதுபோல் தமிழ்த் திரைப்படங்களில் வந்த காட்சிகள்தான் நினைவுக்கு வருகிறது என்று சொல்லிவிட்டு இந்தப் பரமசிவம் சிரித்ததற்குக் காரணம் கேட்டேன்.

சில தினங்களுக்கு முன் நடந்த ஒரு நிகழ்ச்சியில் எங்கள் புரட்சிக் கவிஞரும், புதுமைக் கவிஞருமான புதுவைக் கவிஞர் பேசுகையில்-அருமையான பழைய கருங்காலிக் கதிரைகளை விற்றுவிட்டு அதற்குப் பதிலாக பிளாஸ்ரிக் கதிரைகளை நமது மக்கள் வாங்குவது பற்றிச் சொன்னது நினைவுக்கு வந்தது. அதுதான் சிரித்தேன் என்றார் பரமசிவம்.

வரலாற்றுப் புகழ்மிக்க கீரிமலை, மாவிட்டபுரம், திருகோணமலை, கோணேசர் கோயில், கன்னியர் நீரூற்று இப்படித் தமிழர் தாயகத்தில் எத்தனையோ இடங்கள் சின்னங்கள் இன்று நமது மக்களே சுதந்திரமாகப் போய்வரமுடியாதபடி சிறீலங்காப் படைகளால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கின்றன. இவை எப்படியெப்படியெல்லாம் மாறுதலடைகின்றனவோ, இங்கு புதிய டகோபாக்களும், விகாரைகளும் தோன்றாமலிருந்தால் போதாதோ என்று மக்கள் அங்கலாய்க்கிறார்கள் என்றேன்.

அது உண்மைதான் என்ற பரமசிவம், நாம் நமது பழைய வரலாற்றுச் சின்னங்களைப் பாதுகாக்கமுடியாதநிலையில் இருக்கிறோம். வெள்ளைக்காரன் ஆட்சியில்கூட இந்தநிலை இருந்ததில்லை. இன்று சங்கிலி மன்னன் ஆட்சிசெய்த அ[illegible]ட யாளத்துக்குரிய இடங்களைக்கூடப் பாதுகாத்துப் பரா[illegible]க முடியவில்லை. இதற்கு எமது மக்களின் அறியாமையும் அலட்சியமும்கூடப் பெரிதும் காரணம் என்று சொல்லலாம். இனியாவது நாம் எஞ்சியிருக்கும் பழைய வரலாற்றுச் சின்னங்களைப் பாதுகாக்க மக்கள் மத்தியில் புதிய உணர்ச்சியைப் பாய்[illegible]டும். இதேசமயம் நாங்கள் கடந்த இருபது வரு[illegible] படைத்துவரும் புதிய வரலாற்றுச் சின்னங் களையும் பாது[illegible] பராமரித்துப் புதிய பரம்பரைக்கு மட்டுமல்ல, வெளிநாட்டாருக்கும் எடுத்துக்காட்டவேண்டும் என்றார்.

கடிதங்கள் எழுதி அறிக்கைகளாக விட்டுத் தலைவர்கள் என்று பெயர் சொல்லிக்கொள்ள விரும்புபவர்களுக்கு இவற்றைப் பற்றிச் சிந்திக்க நேரமில்லை, இளசுகளுக்கோ தொலைக்காட்சியும், திரைப்படமும், பெண்களுக்கோ தொலைக்காட்சித் தொடர் நாடகங்களில் நாளை என்னவரும் என்ற கவலை. இந்த நிலையில் நமது வரலாறு, பாரம்பரியம், விடுதலை என்பவற்றைப் பற்றிச் சிந்திக்க நேரமேது? என்று சொல்லி பரமசிவத்தை வழியனுப்பி வைத்தேன்.

மொழிபெயர்ப்பு

வல்வையூறான்

# சமாதான முயற்சிகளில் ஜே.வி.பி தீர்க்கமான காரணியல்ல




**சமாதான முயற்சி தொடர்பாக தற்போது தோன்றியிருப்பது திருப்பு முனையான சூழல். போர் நிறுத்த ஒப்பந்தம் குறித்து அரசிற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே உள்ள உடன்பாடும் அதிர்ந்து போயுள்ளது. இது தொடர்பாகவும் சுனாமியின் பின்னர் குவிந்த வடக்கு . கிழக்கு மாகாணங்களுக்கு உதவி வழங்கல் தொடர்பாகவும் தோன்றியுள்ள நிலைவரம் குறித்தும் முன்னாள் விமானப் படைத் தளபதி ஹரிகுணதிலக "லங்கா தீப" பத்திரிகையில் எழுதிய கட்டுரையின் மொழி பெயர்ப்பு இது.**

இலங்கையின் சமாதான முயற்சி குறித்து இந்த நாட்டு மக்களின் முயற்சி இன்னமும் குறையவில்லை. சமாதானப் பேச்சுக்கள் தடைப்பட்ட இடத்திலிருந்து மீண்டும் ஆரம்பிக்கும் நோக்கங்களில் நோர்வே சமாதானப் பிரதிநிதிகள் வருவது மற்றும் போவதைத் தவிர வேறெதுவும் அதிகம் நிகழ்ந்ததாகத் தெரியவில்லை.

தற்போது பிரச்சினை சிக்குண்டு கிடப்பது இடைக்கால நிர்வாகசபை தொடர்பான திட்டவரைபினால். இடைக்கால நிர்வாகசபை தொடர்பாக தெற்கிலுள்ள சிங்கள சமூகத்திடம் அழகற்ற உருவம் போடப்பட்டுள்ளது. அதன் அர்த்தம் இதனைச் சிலர் விகாரப்படுத்தியிருப்பதாகவே நான் நினைக்கிறேன். இந்தப் பிரச்சினை குறித்து எத்தகைய கருத்து இருப்பினும், இடைக்கால நிர்வாகம் குறித்து விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்துவதற்கு சிங்கள சமூகம் தயாராக உள்ளதாகவே நான் எண்ணுகின்றேன்.

நாட்டில் சமாதானப் பேச்சைப் பற்றி நாம் நினைக்கும் அளவிற்கு எதிர்ப்பில்லை. எந்த இடத்திலிருந்தோ பேச்சுவார்த்தையை ஆரம்பித்து, அதற்கு அரசியல் தீர்வை வழங்க வேண்டு மென்று பொதுச் சமூகம் ஏற்றுக் கொள்ளும் நிலைமைக்கு வந்துள் ளது. ஜாதிக ஹெல உறுமய கூட சமாதானத்திற்கு விருப்பமெனவும், ஆனாலும் இதற்காக அரசு பயணிக்கும் பாதை பிழையாக உள்ள



தால், அதற்கு உடன்பட முடியாதெனவும் கூறுகிறது.

கடந்த காலங்களில் பல்வேறு சர்வதேச மாநாடுகளில் நான்- தமிழ்க் கல்விமான்கள், அறிஞர்கள் பலரைச் சந்தித்தேன். அவர்கள் நேரடியாக விடுதலைப் புலிகளின் அங்கத்தவர்கள் அல்ல. அவர்கள் இந்தப் பிரச்சினை பற்றி நடுநிலைமையான எண்ணத்தையே கொண்டுள்ளனர்.

பொதுவாக இதுபோன்ற சிக்கலான பிரச்சினைகள் குறித்துக் கதைக்கும்போது (Top line) மற்றும் குறைந்தளவு (bottom line) என்ற இரண்டு நிலைப்பாட்டை எம்மால் அறிந்து கொள்ள முடியும். விடுதலைப் புலிகளின் உச்சமென்பது -ஈழம் வேறொரு அரசு என்பது. ஆனால், கடந்த காலங்களில் விடுதலைப் புலிகள் மீது பிரயோகிக்கப்பட்ட பல்வேறு அழுத்தங்கள் காரணமாக, அவர்கள் தமது உச்ச வேண்டுகோளை சிறிது குறைத்து, இடைக் கால நிர்வாகத்தினூடாக சமஷ்டி முறையை ஏற்றுக் கொள்வதற்கு ஆயத்தமாக இருப்பதாகத் தெரிகிறது. ஆனால், சமஷ்டி முறையைக் கூட தரவில்லையென்றால், தாம் வேறொரு அரசு என்ற கொள்கையை நோக்கி பயணிக்கப் போவதாக புலிகள் கூறுகின்றனர்.

எனவே, அரசிற்கும் எதிர்ப்பின்றி சமஷ்டி முறையில் அதிகாரத்தைப் பகிர்வதற்கு முடியும். இது சமாதான முயற்சியின் நடுமார்க்கம் என்பதே எனது கருத்தாகும். உத்தேசிக்கப்பட்ட இடைக்கால நிர்வாகசபை செயற்படுத்தப்படுமாயின், இலங்கை சமஷ்டி அரசியலமைப்பிற்குள் பிரவேசிக்கும். இதன் அடையாளமாக ஒரு சுயாதீன அரசினுள் நிர்வாக முறை இரண்டைப் பின்பற்றுவதாகும். தற்பொழுது இந்த முறை ஹொங் ஹொங்கில் செயற்படுத்தப்படுவதாக நான் கருதுகின்றேன்.

ஹொங்ஹொங் சீனாவிற்கு கிடைத்த பின்னர், அந்த அரசியலமைப்பு அதற்குப் பயனுள்ள விதமாக அதற்குச் செயற்படுத்தப்பட்டது. எனவே, தற்போதைய நிலைமைக்கு அமைய உத்தேசிக்கப்பட்ட இடைக்கால நிர்வாகசபை குறித்து, கலந்துரையாட எவ்வித தடையுமில்லை. ஆனால், ஜே.வி.பி.போன்ற கட்சிகள் இது குறித்து புலிகளுடன் பேசுவதற்கும் எதிர்ப்புத் தெரிவிக்கின்றன. அது நீதியான தல்ல.

ஜே.வி.பி. குறைந்தளவு பேச்சுவார்த்தைக்கும் விருப்பம் இல்லையென்றால், அவர்களது எதிர்ப்பை கணக்கிலெடுக்காது. பேச்சுவார்த்தையை நடாத்தவேண்டும். ஜே.வி.பி. கூறுவதுபோல, இது தொடர்பாக மக்களிடம் எவ்வித எதிர்ப்புமில்லை. ஜனாதிபதியும் தற்போது இது குறித்து தெரிந்து கொண்டுள்ளார். சமாதான முயற்சியை முன்னெடுத்துச் செல்வதற்கு ஜே.வி.பி. தடையாக உள்ளதைத் தெரிந்து கொண்ட ஜனாதிபதி, நிட்டம்புவவில் உரையாற்றியபோது, ஜே.வி.பி. அரசிலிருந்து வெளியேறலாம் எனத் தெரிவித்தார். ஜனாதிபதியின் இந்த நிலைப்பாட்டிற்கு நான் மதிப்பளிக்கிறேன்.

அரசாங்கம் இதுவரை வெளியிட்ட அறிக்கைகளின்படி, இடைக்கால நிர்வாகசபை தொடர்பாகப் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு தேவையான பின்புலம் தற்போது தயார். ஜனாதிபதியோடு கடந்த காலத்தில் எமது தொடர்புகள் இல்லாதிருந்தாலும் , அவர் சமாதான முயற்சி தொடர்பாக செயற்படுகின்ற விதம் சரியானதென்பதால் நான் அதனை மதிக்கின்றேன்.

ஜே.வி.பி.யை வைத்து பலர் எதைக் கூறினாலும், ஜனாதிபதி தனது நிலைப்பாட்டிலிருந்து மாறக் கூடாதென நான் அவரைக் கேட்டுக் கொள்கின்றேன். தெற்கில் சிங்கள சமூகம் இந்தப் பிரச்சினை குறித்து கதைப்பதற்கு எதிர்ப்பில்லை. அரசுக்கு அதிகாரத்தைப் பங்கிடுவது பற்றிய பிரச்சினையைத் தீர்ப்பதற்கு கடினமான சந்தர்ப்பத்தில்-அதுபற்றி மக்களிடம் கருத்துக்கணிப்பிற்குச் செல்லலாம்.

விடுதலைப் புலிகளின் வேண்டுகோள்கள் மற்றும் அரசுக்கோ மக்கள் கருத்துக்கணிப்பை நடத்துவது அவசியமெனில், பிரச்சினையைத் தீர்க்க மக்களது அனுமதியைப் பெற முடியும். எனவே உத்தேசிக்கப்பட்ட இடைக்கால நிர்வாக சபை தொடர்பாகப் பேச்சு வார்த்தையை ஆரம்பிப்பதற்கு தற்போது பொருத்தமான சூழல் தோன்றியுள்ளது. எதனைப் பற்றியும் பேச்சுவார்த்தை நடத்தக்கூடாதெனக் கூறுவது ஜனநாயக அரசியல் சம்பிரதாயத்திற்குப் பொருந்தாது.

அரசிற்குள் இந்தப் பேச்சுவார்த்தையில் உடன்பட முடியாதவர்கள் இருக்கலாம். விடுதலைப் புலிகளுக்கும் உடன்பட முடியாத இடங்கள் இருக்கலாம். இந்த அனைத்துக் கோரிக்கை களையும் மக்கள் முன் விட்டு அவர்களுடன் பதிலைப் பெற முயற்சிப்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஜனநாயக முறையாகும். இது போன்ற சிக்கலான பிரச்சினையில் மக்களின் கருத்தை அறிவதை புலிகளும் எதிர்க்க மாட்டார்கள். மக்கள் எதையாவது வழங்குவதை விரும்பவில்லையென்றால், அரசு அது குறித்துப் புலிகளுக்குத் தெரிவிக்கலாம்.

அரசின் இந்தத் தீர்மானத்திற்கு புலிகள் உடன்படவில்லையெனில், இரண்டு தரப்பிற்கும் இருப்பது யுத்தமே. விடுதலைப் புலிகள் வேறொரு ராஜ்ஜியத்திற்கு யுத்தம் செய்யும் போது, அரசு தமது ராஜ்ஜியத்தின் இறைமையைப் பாதுகாத்துக் கொள்ள யுத்தம் செய்யமுடியும். ஜனநாயக ரீதியாகப் பிரச்சினைக்குத் தீர்வு காணவில்லையெனில், அதனைத் தீர்க்க வேண்டியது யுத்தம் மூலமாகவே.

சுனாமி பொதுக் கட்டமைப்பு தற்போது ஆலோசனையிலுள்ளது. அது குறித்தும் தற்போது வாத, பிரதி வாதங்கள் உள்ளன. இதுபற்றி மேலும் தாமதிக்க நேரமில்லை. அனர்த்தங்களுக்குள்ளான மக்கள் மிகவும் துன்பத்துடன் காலத்தைக் கடத்துகின்றனர். அவர்களுக்கு உதவிகள் வழங்குவதற்காக விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் அரச கட்டமைப்பிற்கு விடுவிக்கப்படாத பிரதேசங்களில் புலிகளும் செயற்பட முடியும்.

அது குறித்து நடைமுறையான தீர்வு விரைவில் ஏற்படுத்தப்பட வேண்டும். இல்லையெனில், அனர்த்தத்திற்குள்ளான மக்கள் மேலும் துன்பத்திற்கு ஆட்படுவர். இது குறித்து சர்வதேச சமூகமும் மிகவும் ஆர்வத்துடன் பார்த்துக்கொண்டிருப் பதைக் குறிப்பிட வேண்டும். அரசுக்கும் - புலிகளுக்குமிடையே சுனாமி உதவிகளைப் பங்கிடுவது தொடர்பாக உடன்பாடு ஏற்படவில்லையென்றால், உத்தேசிக்கப்பட்ட வெளிநாட்டு உதவிகளும் கிடைக்காமல் போகலாம் என்பது எனது தனிப்பட்ட கருத்தாகும்.

சர்வதேச சமூகத்திற்கு சுனாமியால் நிகழ்ந்த சேதங்கள் குறித்த மதிப்பீட்டிற்குப் பின், வடக்கு-கிழக்கில் நிகழ்ந்துள்ள மிகப்பெரிய அழிவுகளைக் கணித்து அந்தப் பிரதேசங்களின் அபிவிருத்திக்கு 60 வீதமும், தெற்கின் மறுசீரமைப்பிற்கு 40 வீதமும் உதவிகள் வழங்கப்பட வேண்டுமென தற்போது கணக்கிடப்பட்டுள்ளது.

சுனாமிக்காக இவ்விதமாக உதவிகளைப் பங்கிடுவதற்கு மூன்று மாதங்கள் கழிந்த பின்னரும் இயலாமல் உள்ளது கவலைக்குரிய விடயமாகும். சுனாமி உதவிகளை வழங்கும் சபை குறித்தும், ஜே.வி.பி. க்கும், ஜனாதிபதிக்கும் உடன்பாடு இல்லை. இவையனைத்தையும் எதிர்த்துக் கொண்டு ஜே.வி.பி. கொண்டு செல்கின்ற கருத்துக்கள், கொள்கைகளுக்குள் அரசு குறிப்பிட்டளவு சிறைப்பட்டிருப்பது அவர்களுக்கு நாடாளுமன்றத்தில் 39 உறுப்பினர்கள் இருப்பதனாலேயே ஆகும்.

இந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் 39 பேரும் அரசிலிருந்து உடனடியாக விலகினால், அரசை நடாத்திச் செல்வது கடினமாகும். ஜனாதிபதி இது குறித்து தெரிந்து கொண்டுள்ளமையால், அவர் முக்கால் அதிகாரத்திலேயே செயற்படுகிறார். ஜே.வி.பி. அரசு மீது குட்டுக்களை குட்டிக்குட்டி அரசை மட்டுப்படுத்தப் பார்க்கிறது.

தனது அமைதித் தன்மை ஆயிரக் கணக்கான சொற்களைக் கொண்ட அறிவிப்பு என்பதை அரசு புரிந்து கொள்ள வேண்டுமென, நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச ஒருதடவை கூறியிருந்தார். ஆனால், ஜே.வி.பி. அரசாங்கத்தை எவ்வளவு காலத்திற்கு குட்டிக்குட்டி சொல்லப் போகின்றதென்பது பிரச்சினையாகும். ஜே.வி.பி.யிடம் உள்ள அரசியல் கொள்கைப் பத்திரத்தின்படி, அவர்கள் அரசிற்கு எந்தளவு எதிர்ப்பைக் காண்பித்தாலும் அவர்கள் அரசிலிருந்து விலகமாட்டார்களென்பதே எனது தனிப்பட்ட கருத்தாகும்.

எனவே, இந்தப் பிரச்சினையில் தமது வாக்குகளை அதிகரிப்பதை மாத்திரமே மையமாகக் கொண்டு, ஜே.வி.பி தொழிற்படுகின்றதென கூறினால் அதில் எவ்வித பிழையுமில்லை.

ஐ.தே.கட்சி இது குறித்து தெரிந்து கொண்டு, அரசின் சமாதான முயற்சிக்கு ஆதரவு வழங்க வேண்டும். இல்லையென்றால், இந்த நாட்டிற்கு எதிர்காலமே இல்லை. ஜே.வி.பி. இந்த இடத்தில் தெரிந்து கொள்ள வேண்டிய விடயங்களையும் நினைவூட்ட வேண்டும். அவர்கள் பொது மக்களின் 39 நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளைப் பெற்றுக் கொண்டது. தனியாக ஜே.வி.பி.யின் வாக்குகளால் அல்ல. சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் விருப்பு வாக்குகளால்.

எனவே பிரச்சினை உக்கிரமடைந்து, ஜனாதிபதி அரசைக் கலைத்ததால் அவர்களுக்குத் தனியாகப் பொதுத்தேர்தலில் போட்டியிட்டுப் பெற்றுக்கொள்ளக்கூடிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதவி 12 தொடக்கம் 15 வரையான சிறிய தொகையாகும். அத்துடன் வட கிழக்கு பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மாத்திரம் ஜனாதிபதியும், ஐ.தே.கட்சி யும் உடன்பாட்டை ஏற்படுத்தினால், நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகள் அந்த இரண்டு பிரிவினருக்கும் கிடைக்கும். இதனால் ஜே.வி.பி எல்லை தாண்டிச் செல்லாமல் பொறுமையுடன் நடந்து கொள்வது மிகவும் முக்கியமானதாகும்.

திடீர் தேர்தல் நடந்தால் அவர்கள் தனியாகப் போட்டியிட்டு இன்றிருக்கும் பலத்தைப் பெற்றுக்கொள்வது எப்படியும் முடியாத காரியம். எனவே நாட்டின் அனைத்துப் பிரதான அரசியற்கட்சிகளும் பொறுப்புணர்வுடன் செயற்படவேண்டும். அதிகாரத்துக்கு ஆசைப்பட்டு, மக்களைத் தூண்டி நாட்டிலுள்ள பாரதூரமான பிரச்சினைக்குள் அரசியல் இலாபங்களைப் பெறுவதற்கு முயற்சிசெய்தது போதும்.

சுமார் 25 வருடகாலம் பிரச்சினைகளால் கழிந்துசென்றுள்ளது. ஆகவே ஐ.தே.கட்சியும், சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் யதார்த்தபூர்வமாகப் பார்க்கவேண்டும். ஏனெனில் இடைக்கிடை ஆட்சி அதிகாரம் கிடைக்கின்ற கட்சி என்ற விதமாக அவர்களுக்குத் தனியாக இந்தச் சிக்கலை முடிவுக்குக் கொண்டுவர முடியாதென்பதாகும்.


இந்த முக்கியமான பிரச்சினை குறித்து ஜனாதிபதி சந்திரிகா செயற்படக்கூடியவிதமாக முதலில் தெரிவித்தமைக்கு நான் மதிப்புக் கொடுக்கிறேன். நான் அவரது அரசியல் ஆதரவாளன் அல்ல. ஆனால் அரசு என்ற விதமாக வடக்கு - கிழக்கு பிரச்சினையைத் தீர்ப்பதற்கெனில் துணிச்சலான நடவடிக்கை எடுப்பது பாராட்டக் கூடி யதாகும்.

ஜனாதிபதி சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பாக வகிக்கின்ற நிலைப்பாட்டை நீக்கிக்கொள்ளக் கூடாது. சரியான வழியில் பயணிக்கும்போது, ஐ.தே.கட்சியின் உடன்பாட்டுடன் நாட்டுக்கு சமாதானத்தைத் தோற்றுவித்தால் அதில் தலையிடுகின்ற தலைவர்கள், இந்த நாட்டின் வரலாற்றைத் தோற்றுவிப்பதற்கு போதுமென்பதே எனது கருத்தாகும்.

எனவே ஜே.வி.பியின் பிற்போக்குத் தனமான எதிர்ப்பைக் கணக்கிலெடுக்காது, சமாதானத்தை நிதர்சனமாக்கிக் கொள்வதற்கு சக்தியும், தைரியமும் கிடைக்கவேண்டுமெனப் பிரார்த்திக்கிறேன்.

---

# நூல் அகம்



இதழின் பெயர் : கல்வியலாளன்

ஆசிரியர் : பரராஜசிங்கம் இரஜேஸ்வரன்

வெளியீடு : கல்வியியல் வெளியீட்டு நிலையம், 257, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

கல்வியியல் அபிவிருத்திசார் அணுகு முறைகள் தற்போது புதிய பரிமாணத்தையும், நவீன சிந்தனையையும் அவாவி நிற்கிறது. நாட்டினது பொருளாதாரம் என்பது இன்று உலகளாவிய ரீதியல் அறிவை விற்றல் என்ற நிலைக்கு மாற்றம் பெற்று விட்டது. இத்தகைய நிலைக்கு எமது பிரதேச கல்வியும் மாற்றமடைவது தவிர்க்க முடியாததாகிறது. இத்தகை மாற்றங்களுக்கு மாணவர்களைத் தயார்படுத்தும் பொறுப்பு ஆசிரியர் வசமாக உள்ளது. ஆசிரியர் சமூக அபிவிருத்திக்கு அடிப்படையாக இயங்கும் முக்கிய கருவியாக அமைகிறார். ஆசிரிய தொழில் வாண்மைத்துவமாக மாற்றம் பெற பல்வேறு முன்னெடுப்புகள் உடனடியாகத் தேவையாகவுள்ளது. அத்தகைய செயல் முன்னெடுப்பாக கல்வியியலாளன் இதழ் வெளியீடு அமைகிறது.

மாற்றங்களை ஏற்படுத்தும் சிந்தனையை கருத்தேற்றமாகக் கொண்டு, இரண்டாவது கல்வியியலாளன், நன்கு திட்டமிடப்பட்டு ஆசிரியர் பரராஜசிங்கம் இராஜேஸ்வரனால் வெளியிடப்பட்டுள்ளது. சமூக உளவியலும் குறியீட்டு இடைவினையும், கல்வியில் மத்திய கட்டுப்பாடும், அதிகாரப் பரவலாக்கமும், பாடசாலை மட்ட முரண்பாடும் முகாமையும், பெற்றோர் பாடசாலை எண்ணக்கரு, மாணவர் பாடத்தெரிவின் அடிப்படைகள், கற்போன் பற்றிய மதிப்பீடுகள், கல்வி முகாமையில் செயல்நிலை ஆய்வு, அறிவியலில் புத்தாக்கத் திறனியல், தண்டனை ஓர் ஊக்கல் உபாயம், முன்பள்ளி செயற்பாடுகள்,உலகமயமாக்கமும் கல்விச் சீர்திருத்தமும், தொடர்பாடலில் ஆங்கில மொழி போன்ற துறைசார் அறிஞர்களின் ஆக்கங்கள் தொகுக்கப்பட்டுள்ளன.

தமிழ்பேசும் சமூகத்தைப் பொறுத்த மட்டில் கல்வியாளனின் வருகை பெரும் வரப்பிரசாதமாக அமைவதுடன், கல்விசார் அபிவிருத்திச் செயற்பாடுகளில் ஒன்றாகவும் அமைகின்றது.

ஆசிரியர் எஸ்.நவகாந்தன்
கிளிநொச்சி கல்வி வலயம்.

# தமிழக அரசியல் ஈழத் தமிழர் பக்கமாகத் திரும்பப் போகின்றதா?



கலைஞருக்குப் பிறகு தி.மு.க தொண்டர்கள் ஓடிவரக்கூடிய ஒரே யிடம் ம.தி.மு.க அது தான் வைகோவின் பாசறை.

80 களில் ஈழத் தமிழருக்கு தமிழகத்தில் ஒரு நம்பிக்கை நட்சத்திரமாக எம்.ஜி. ஆர் என்ற மனிதர் (அரசியல்வாதியல்ல மனிதர் – நிஜ மான மனிதர்) இருந்தது போல தமிழக அரசியலில் மற்றுமோர் நம்பிக்கை நட்சத்திரத்திற்கு மவுசுவரும் காலம்வரும்போது தான், ஈழத்தமிழர் பற்றிய அடுத்த அத்தியாயம் தமிழக அரசியலில் ஆரம்பமாகும். அந்த நேரம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. அந்த நம்பிக்கை நட்சத்திரம் ஈழத் தமிழர் விவகாரத்தில் அதிக அக்கறை செலுத்துகிறார் என்ற குற்றச்சாட்டுடன் அவர் இருந்த கட்சியிலிருந்தே (தி.மு.க) விலக்கப்பட் டார். ஈழத்தமிழர் விடயத்தில் குரல் கொடுக்கிறார் என்ற காரணத்தினால் ஆளும் கட்சியினால் (அ.தி.மு.க) சிறையில் அடைக்கப்பட்டவர் என்றால், வழமையான இந்திய அரசியல்வாதிகள் போல உள்ளே வெளியே என்று வரும் சிறைத் தண்டனையல்ல.

நீண்டநாள் நிஜமான சிறைத்தண்டனை. வேறு சில அரசியல்வாதிகள்போல ஊழல் புரிந்துவிட்டு அல்லது சொத்துச்சேர்த்துவிட்டு உள்ளே போனவருமல்ல. கொள்கைக்காக சிறையில் இருந்தவர்.

அந்தக் கொள்கை ஈழத்தமிழருடன் சம்பந்தப்பட்ட கொள்கை.

நீண்ட சிறைவாசத்தின் பின்னரும் நீதிமன்றத்தில் நான் ஈழத்தமிழர் பற்றிப்பேசியது தவறல்ல. இனியும் பேசுவேன் என்று தைரியமாகக் கூறினார்.

இப்படிப்பட்ட ஒருவர் தமிழக அரசியலில் இருப்பது ஈழத்தமிழர்களுக்கு கிடைத்த ஒரு வரப்பிரசாதம் என்பது மாத்திரமல்ல, தமிழக மக்களுக்குக்கூட இதோ இப்படியும் ஒரு அரசியல்வாதி உங்களிடையே இருக்கிறார் பார்த்துக் கொள்ளுங்கள் என்று சொல்ல வைக்கக்கூடிய விடயம்.

வைகோவின் கைகள் தமிழக அரசியலில் ஓங்குவதற்கு சமயம் நெருங்கிக்கொண்டிருக்கிறது.

இன்று இருக்கும் தமிழக அரசியலை பொதுப்படையாகப் பார்த்தால் என்ன தெரியும்.

முதல்வராக ஜெயலலிதா. ஆளும் கட்சியாக அ.தி.மு.க. எதிர்க்கட்சியாக தி.மு.க. எதிர்க்கட்சியை நடத்துபவராக கலைஞர். இது ஒரு வெளிப்படையான தோற்றம் தான். நிஜமான தோற்றம் ஜெயலலிதாவிற்கு அடுத்தபடியாக யாருமே செல்வாக்கு பெறாத அ.தி.மு.க. கலைஞருக்குப் பிறகு வருவதற்கென்று கலைஞரால் வளர்க்கப்பட்டு கட்சிக்காரர்களிடையே 100 வீத ஆதரவைப்பெறாத ஸ்டாலின். மறுமுனையில் வைகோ.



கலைஞர் ஸ்டாலினை நம்புமளவுக்கு தி.மு.க தொண்டர்கள் நம்புவதாகத் தெரியவில்லை. தி.மு.கவின் அடுத்த தலைமையின் நிலை கொஞ்சம் தள்ளாட்டம்தான்.

ஜெயலலிதா அரசியலை விலகினாலோ அல்லது ஏதாவது குற்றச்சாட்டில் தண்டிக்கப்பட்டாலோ அ.தி.மு.க பொல பொலவென்று கொட்டிவிடும். ஆளாளுக்குக்காசு பண்ணுவார்கள்.

அடுத்த கட்டத் தலைவராக கட்சியை தாங்கிப்பிடிக்க யார் இருக்கிறார்கள்? பன்னீர்செல்வமா? ஓ பன்னீர்செல்வத்திற்கு 'ஓ போடு' பாட்டுக்கு இருந்த செல்வாக்குகூடஇல்லை. வேறு யார்? சசிகலா, தினகரன், இளவரசி எல்லோரும் Political Division இல்லை Financial Division.

வளர்ப்பு மகன் சுதாகரன் எப்போதோ கழட்டி விடப்பட்டுவிட்டார். பின்னர் பாத யாத்திரை, தண்ணீர்ப் பந்தல் என்று ஏதோ போக்குக் காட்டிக் கொண்டிருந்த ஜெயிலுக்குப் போய் அப்படியே காணாமற்போய்விட்டார்.

பொன்னையன் போன்ற மந்திரிகளுக்கு அவர்கள் காலை எழும்புபோது தாங்கள் இன்னும் மந்திரிதானா என்று உதவியாளரை கேட்டுக் கொள்வது என்பதான நிலைமை.

மொத்தத்தில் ஜெ இல்லாவிட்டால் அ.தி.மு.க. இல்லை. தி.மு.கவின் நிலைமையும் இப்படித்தான் என்பது மற்றுமோர் சோகம். இவர்களது நிலைமை அ.தி.மு.க. அளவுக்கு மோசமில்லை என்றாலும் கலைஞருக்கு பிறகு கட்சி இவ்வளவு கட்டுக் கோப் பாக இருக்காது.

கலைஞரை கண்மூடித்தனமாக பின்பற்றும் தொண்டர்கள் கூட ஸ்ராலின் நின்றவுடன் ஒரு முறைக்கு இருமுறை யோசிப்பார்கள். அது போதாதென்று தெற்கே மற்றுமோர் மகன் மு.க. அழகிரி அவ ருக்கென்று ஒரு ஆதரவுக்கூட்டம்.

கலைஞர் நினைப்பதனை டெல்கியில் நடத்திக் கொடுத்த முரசொலி மாறன் இப்போது இல்லை. அவரது இடத்தை கட்சியின் அடுத்த சீனியர் எம்.பிக்கு கொடுக்காமல் முரசொலிமாறனின் மகனை அதிகாரத்திற்கு கொண்டு வந்ததில் டெல்கியிலும் தி. மு.கவின் புகைச்சல்


டி.ஆர்.பாலு போன்றவர்களே புதியவர்களுக்கு ஜால்ரா அடிக்கவேண்டிய நிலை.

இவ்வளவு சிக்கல்களையும் சிதற விடாமல் ஒன்று சேர்த்துக் கொண்டிருக்கும் ஒரே ஒரே நூல் கலைஞர் கருணாநிதி

அந்த நூல் அறுந்தால்...?

இந்த இரு மெகா கட்சிகளையும் விட்டுவிட்டு பார்த்தால் வேறு யார் இருக்கிறார்கள்

காங்கிரசில் கோஷ்டி பூசல்களும் அதிகம் தொண்டர்களை விட தலைவர்கள் அதிகம் இருக்கும் விசித்திரம்.



அடிதடி ஹீரோ! இவரது மீட்டிங்குக்கு கூட்டம் வருமளவுக்கு வோட்டிங்குக்கும் கூட்டம் வருமா என்பது போகப் போகத் தான் தெரியும்.

பா.ஜ.க தனியே இயங்குமளவுக்கு செல்வாக்கும் இல்லை, சங்கராச்சாரியார் விடயத்திலும் மகா கெட்டபெயர்

பா.ம.க வன்னியர்களுக்கு வெளியே செல்வாக்கு இல்லை. விடுதலைசிறுத்தைகள் தலித் சமுதாயத்திற்கு வெளியே செல்வாக்கில்லை

மிகுதியெல்லாம் உப்புமாகட்சிகள்

இப்படியான நிலையில் விஸ்வரூபம் எடுக்க கூட சாத்தியம் தமிழக அரசியலில் இரண்டே இரண்டுபேருக்குதான் இருந்தது



ஓ.பன்னீர் செல்வத்திற்கு தமிழ்நாட்டிலிருந்த செல்வாக்கைவிட ஓ போடு பாடலுக்கு செல்வாக்கு அதிகம்!

ஒருவர் Missed the bus ரஜினிகாந். இனி விரும்பினாலும் அரியணை ஏறமுடியாது. நான் எப்போவருவேன், எப்படி வருவேன் என்று சொல்ல முடியாது. வரவேண்டிய நேரத்தில் வருவேன் என்று வசனம் பேசிக்கொண்டிருந்த வர் இனிமேல் இதோ வருகிறேன் என்று சொன்னால் கூட ஏன் வருகிறீர்கள் என்று கேட்பார்கள் தமிழக மக்கள் என்பதுதான் தற்போதையநிலை

மற்றையவர் வைகோ.

ஊழலில்லை, கெட்டபெயர் இல்லை, நீண்ட கால அரசியல் வரலாறு, டெல்கியிலும் செல்வாக்கு, கொள்கைக்காக சிறை சென்றவர்

ஜெயலலிதா அல்லது கலைஞர் தமிழக அரசியல் அரங்கிலிருந்து எப்போது எந்தக் காரணத்திற்காக விலகினாலும்

அப்போது உடனடியாக உயரப்பறக்க போவது வைகோவின் கொடிதான்

அந்தக்கணம்தான் தமிழக அரசியலில் ஈழத்தமிழருக்காக காத்திருக்கும் அடுத்தகணம்

(முற்றும்)

நன்றி : 'பரபரப்பு' கனடா 15.03.2005

# லெபனானில் குண்டுவெடிப்பு 2 இந்திய பிரஜைகள் உயிரிழப்பு!



லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் கிறிஸ்தவர்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதியில் இடம் பெற்ற குண்டு வெடிப்பில் இரண்டு இந்திய பிரஜைகள் உயிரிழந்ததுடன் எட்டுப்பேர் காயமடைந்தனர்.

இந்தக் குண்டுமெடிப்பையடுத்து கட்டடங்கள் பலவற்றில் பற்றிய தீ இங்கிருந்த உலோகத் தொழிற்சாலையிலும் பற்றிக்கொண்டது. இதனையடுத்து தீயணைப்புப் படையினர் சம்பவ இடத்திற்குச் சென்று பெரும் போராட்டத்தின் பின்னர் தீயை அணைத்ததாக பி.பி.ஸி செய்தியாளர் கிம்கற்றாஸ் தெரிவித்தார்.

அத்துடன் சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் அந்தப்பகுதியை பொதுமக்களின் போக்குவரத்திற்கு தடைசெய்துள்ளனர்.

இந்தக் குண்டுவெடிப்பு நடந்த பின்னர் சம்பவ இடத்திலிருந்து சென்ற காரை பொலிஸார் தேடிவருவதாக மாகாண மேயர் அந்தோனி ஜெபரா தெரிவித்தார்.

# கொழும்பிலிருந்து தூத்துக்குடி சென்ற கப்பல் நடுக்கடலில் தீப்பற்றியது

(கொழும்பு)

கொழும்பிலிருந்து தூத்துக்குடி சென்ற கப்பல் நடுக்கடலில் தீப்பிடித்தது.

சிங்கப்பூரைச் சேர்ந்த கப்பல் 'எக்ஸ்பிரஸ் காவேரி'. இந்தக் கப்பலை இந்தியாவைச் சேர்ந்த 'பட்வால்க்' என்ற கப்பல் ஏஜென்சி நிறுவனம் ஒப்பந்த அடிப்படையில் நடத்தி வருகிறது.

கொழும்புத் துறைமுகத்தை மையமாகக் கொண்டு அங்கிருந்து தூத்துக்குடி, சென்னை, கொச்சி ஆகிய துறைமுகங்களுக்கு பொருட்களை எடுத்துச் செல்லும் (பீடர்வெசல்) பரிமாற்றக் கப்பலாக இது செயற்பட்டு வருகிறது.

நேற்று முன்தினம் அதிகாலை கொழும்புத் துறைமுகத்தில் இருந்து எக்ஸ்பிரஸ் காவேரி கப்பல் 498 சரக்குப் பெட்டிகளை ஏற்றிக்கொண்டு தூத்துக்குடி துறைமுகம் நோக்கிச் சென்றுகொண்டிருந்தது. கப்பலில் கப்டன் உட்பட 22 ஊழியர்கள் பணியில் இருந்தனர். கப்பல் தூத்துக்குடி துறைமுகத்தில் இருந்து 35 கடல் மைலுக்கு அப்பால் வரும்போது காலை 11.00 மணிக்கு இயந்திரத்தில் திடீரென தீப்பிடித்தது. கப்பலில் தீப்பிடித்தது பற்றி கப்டன் தூத்துக்குடி, கொழும்பு ஆகிய துறைமுகங்களுக்கு தகவல் தெரிவித்தார்.

அதன்பேரில் தூத்துக்குடி கடலோர காவல்படை அதிகாரிகள் நாக தேவி என்ற கப்பலில் விரைந்தனர். இதில் தீயணைப்பு படைவீரர்களும், மருத்துவக் குழுவினரும் சென்றனர். மேலும் தூத்துக்குடி துறைமுகத்தில் இருந்து 3 இழுவைக் கப்பல்களும் விரைந்தன.


தீயணைப்பு வீரர்கள் பிற்பகல் 1 மணிக்கு, கப்பலின் இயந்திரத்தில் பற்றிய தீயை முழுமையாக அணைத்துக் கட்டுப்படுத்தினார்கள். தூத்துக்குடி துறைமுகத்தில் கப்பலில் பழுதான இயந்திரத்தைத் திருத்தும் வசதி இல்லாததால், தூத்துக்குடி துறைமுக இழுவை கப்பல் மூலம் கொழும்பு துறைமுகத்துக்கு சரக்கு பெட்டக கப்பல் கொண்டு வரப்படுவதாக, பட்வால்க் கப்பல் ஏஜென்சி நிறுவனத்தினர் தெரிவித்தனர்.

# சுனாமிக்குப்பின் பூமியில் பல்வேறு மாற்றங்கள்

கடந்த டிசம்பர் ஏற்பட்ட சுனாமி பேரலைகளின் பின்னர் பூமியில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இது குறித்து புவியியல் வல்லுநர்கள் தொடர்ச்சியாக ஆய்வுகள் மேற்கொண்டு வருகின்றனர்.

ஹைதராபாத்தில் தேசிய புவி இயற்பியல் ஆராய்ச்சி மையம் நடத்திய ஆய்வுகளின் முடிவில் பல அதிர்ச்சித் தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

பெங்களூருக்கும் சுமாத்ரா தீவில் உள்ள மடான் நகருக்கும் உள்ள தூரம் 12 சென்ரிமீற்றர் குறைந்திருப்பது உறுதிசெய்யப்பட்டுள்ளது. அத்துடன் இந்தியா இந்தோனேசியாவை நோக்கி 12 சென்ரிமீற்றர் நகர்ந்துள்ளது.



இந்திய – பர்மிய தட்டில் ஏற்பட்டுள்ள விரிசலே இதற்குக் காரணம் என்று ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். சுனாமி பேரலைகளுக்கு முன்னர் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் பர்மிய தட்டு – இந்திய தட்டு இடையேயான பகுதியில் 15 மீற்றர் ஆழத்துக்கு விரிசல் ஏற்பட்டுள்ளது. இந்த விரிசல் காரணமாக பர்மிய தட்டு, இந்திய தட்டை அழுத்திக்கொண்டு இருப்பது உறுதிசெய்யப்பட்டுள்ளது. அது எப்போது வேண்டுமானாலும் பூமிக்குள் சரிய வாய்ப்பு இருப்பதாக அதிர்ச்சி தரும் தகவல் வெளியாகியுள்ளது.

இந்த விரிசல்காரணமாக அந்தமானில் தொடர்ந்து நில நடுக்கங்கள் ஏற்படுகின்றன. சுனாமிக்குப் பிறகு 200 முறை இந்தப் பகுதியில் நில அதிர்வு ஏற்பட்டுள்ளது.

இந்திய துணை கண்டத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்களால் பூமி எந்த நேரத்திலும் சரிய வாய்ப்பு இருக்கிறது. அதுபோன்ற நிகழ்வு ஏற்படும்போது, தமிழக கடலோர பகுதி பெரும் பாதிப்பைச் சந்திக்கநேரிடும்.

அதாவது சென்னை முதல் கன்னியாகுமரி வரை உள்ள கடலோர பகுதிக்குள் கடல்நீர் புகுந்துவிடும் வாய்ப்பு ஏற்படும். அந்த நிலை ஏற்பட்டால், குமரி, தூத்துக்குடி, நெல்லை மாவட்ட கடலோர பகுதிக்கும் பெரும் சேதம் ஏற்படும்.

மேலும் அரபிக்கடல் சார்ந்த கேரள கடலோர புதிய நிலப்பரப்புக்கள் தோன்றிவிடும். நிலநடுக்கத்தைத் தொடர்ந்து மலைப்பகுதியிலும் மாற்றம் ஏற்பட்டிருக்கலாம் என அஞ்சப்படுகிறது. குறிப்பாக சேலம், ஏற்காடு, நீலகிரி, கொடைக்கானல் உள்ளிட்ட மலைப்பகுதிகளில் நிலப்பரப்புகளில் மாற்றங்கள் ஏற்பட்டிருக்கிறதா என்பது குறித்து இந்திய புவியியல்துறை ஆய்வு நடத்தினால் உண்மை நிலைமை தெரியவரும். மலைப்பகுதிகளில் நிலச்சரிவு ஏற்பட வாய்ப்பு உள்ளதால், இது தொடர்பாக ஆய்வு அவசியமானது என இந்த ஆராய்ச்சி மையம் எச்சரித்துள்ளது.

## உலக நோக்கு

# சீனாவுக்கு எதிராக தாய்வானில் ஆர்ப்பாட்டம்!



தாய்வான் சீனாவின் ஒரு மாகாணமே தவிர சுதந்திர நாடல்ல எனவும், அவ்வாறு பிரிந்து சென்றால் அதன் மீது இராணுவ நடவடிக்கை எடுக்கப்படுமெனவும், இந்த மாத தொடக்கத்தில் சீனா நிறைவேற்றிய சட்டமூலத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து தாய்வானில் நேற்றுமுன்தினம் மாபெரும் ஆர்ப்பாட்டம் இடம்பெற் றது.

சீனா நிறைவேற்றிய சட்டத்தினால் தாய்வான் தாக்கப்படலாமென தாம் அஞ்சுவதாகவும் ஆனாலும் சீனாவிலிருந்து பிரிந்து செல்லவேதாம் விரும்புவதாகவும் ஆர்ப்பாட்டப்பேரணியில் கலந்து கொண்ட தாய்வானின் பிரதான கட்சியின் அமைப்பாளர் ஜோசம் வூ தெரிவித்தார்.

நேற்றுக்காலை நடந்த இந்த ஆர்ப்பாட்டப்பேரணி சுமார் 10 இடங்களிலிருந்து ஆரம்பமாகி தாய்வான் ஜனாதிபதி மாளிகைமுன் முடிவடைந்தது.

ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட வர்கள் சமாதானமே தேவை சரணடையமாட்டோம் என கோஷங்களை எழுப்பினர். இந்த ஆர்ப்பாட்டத்தில் தாய்வான் ஜனாதிபதி சென்சூய்-பியானும் கலந்துகொண்ட போதும் அவர் எவ்வித உரையையும் ஆற்றவில்லை.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# அரசியலிலிருந்து சந்திரிகாவை அகற்ற சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் முயற்சி!

## எஸ்.பி.திஸநாயக்க சொல்கிறார்

ஜனாதிபதி சந்திரிகாவை அரசியலிலிருந்து அகற்ற பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் சுதந்திரக் கட்சியினர் திட்டம் தீட்டிவருவதாக – சிறையில் இருக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் அதில் மேலும் கூறியுள்ளதாவது –

சர்வஜன வாக்கெடுப்பை சந்திரிகா நடத்தினால் இவரது கட்சி உடைந்துவிடும். பெரும்பான்மையான சுதந்திரக் கட்சியினர் இந்த வாக்கெடுப்புக்கு எதிராகவே உள்ளனர். அதிகாரத்தை சந்திரிகா தக்கவைத்துக்கொள்ள முயல்கிறார். ஆனால், அவரது கட்சியினர் அதை விரும்பவில்லை.

சந்திரிகாவிற்குப் பின்னர் ஐந்தே நபர்கள்தான் உள்ளனர். மங்கள சமரவீர, லக்ஷ்மன் கதிர்காமர், ரத்னசிறி விக்கிரமநாயக்க, அனுரா பண்டாரநாயக்க மற்றும் சந்திரிகா குமாரதுங்க ஆகியோர்தான் அந்த ஐவர்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட சுதந்திரக் கட்சியினர் சந்திரிகா அரசியலிலிருந்து ஓய்வுபெற வேண்டும் என்றே எண்ணி வருகின்றனர்.

ஜனநாயகம் குறித்தோ நாகரிகத்தன்மை குறித்தோ சந்திரிகாவுக்கு எதுவும் தெரியாது. அவர் ஒரு முரண்பாடானவர்.

ரணில் விக்கிரமசிங்க கூட முதலில் சந்திரிகாவுடன் இணக்கப் போக்கை மேற்கொள்ள முயன்றார். நாடாளுமன்றக் கலைப்புக்குப் பின்னரே சந்திரிகா யார் என்பதை அவர் தெளிவாகப் புரிந்து வைத்திருக்கிறார்.

எதிர்வரும் ஒக்ரோபர் அல்லது நவம்பரில் நாடு இன்னொரு பொதுத் தேர்தலை கண்டிப்பாகச் சந்திக்கும். நான் அதற்கு இப்போதே தயாராகி வருகின்றேன்.

சந்திரிகாவுடன் என்னை சமாதானமாக்க பலர் முயற்சித்து வருகின்றனர். ஒரு பிரிவினர் எனது தாயாரை சந்திரிகாவுடன் சந்திக்கவைக்க முயற்சித்தனர்.

இப்போதும் கூட சந்திரிகா தரப்பினர் சிலர் ரகசியமாக என்னை சிறையில் சந்தித்து வருகின்றனர். எந்தச் சூழ்நிலையிலும் சந்திரிகாவுடன் எந்தவொரு இணக்கத்தையும் உருவாக்கிக்கொள்ள நான் விரும்பவில்லை.

ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினராக இருப்பதிலேயே தற்போது பெருமடைகிறேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## அமைச்சரவை...

படுவது குறித்து ஜே.வி.பி கடும் விசம் அடைந்துள்ளது. இந்த நெருக்கடியான சூழலில் அடுத்து என்ன செய்வது என்பது குறித்து ஜே.வி.பியின் அரசியல் குழு நேற்றுமுன்தினம் கூடி ஆராய்ந்தது.

இந்தக் கூட்டத்தில் இன்றைய அமைச்சரவை தீர்மானத்தின்படி ஜே.வி.பிஎடுக்கும் முக்கிய முடிவு குறித்து தீர்மானிக்கப்படும் என்று கட்சியின் உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தனியார் மயப்படுத்தலை தாம் எதிர்ப்பதாக ஜே.வி.பி தேர்தல் வாக்குறுதி கொடுத்ததாலேயே – தாம் இந்த முடிவை எடுக்கநேரிட்டதாக ஜே.வி.பி வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை, இன்று நடைபெறவுள்ள விசேட அமைச்சரவைக் கூட்டத்தில் மின்சார சபை மற்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபனங்களை தனியார் மயப்படுத்தும் தீர்மானங்கள் எடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சர்கள் இந்த பிரேரணைகளை நிராகரிக்க வேண்டுமென தொழிற்சங்கங்கள் வேண்டுகோள் விடுத்துள்ளன.

நேற்று கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் மின்சார சபை, பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினதும் இணைந்த தொழிற்சங்க கூட்டமைப்பின் பேச்சாளர் இது பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில் –

மின்சார சபையையோ அல்லது பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தையோ தனியார்மயப்படுத்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்திற்கு எந்த தார்மீக உரிமையும் கிடையாது. இந்த அரசாங்கம் தொழிலாளர் வர்க்கத்தால் ஆட்சிக்குக் கொண்டுவரப்பட்ட அரசாங்கம் என்பதை இன்று அங்கு அமரும் அமைச்சர்கள் அனைவரும் நினைவில் கொள்ள வேண்டும்.

எம்முடன் சேர்ந்து 134 தொழிற்சங்கங்கள் இந்த விடயத்தை கூர்ந்து கவனித்துக்கொண்டிருக்கின்றன. இன்று அரசாங்கம் தனியார் மயமாக்கத்தை ஆதரித்து தீர்மானம் எடுக்குமானால் அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கான நடவடிக்கைகளை தொழிற்சங்கங்கள் மேற்கொள்ளும் என்றார்.

## பொதுமக்களின்...

கடமைகளில் ஈடுபட்டு வந்தனர்.

இரவு வேளைகளில் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் இராணுவ சிறப்புப் படையணியின் நடவடிக்கையாலேயே அப்பாவி பொதுமக்கள் இருவர் சுட்டுக்கொல்லப்பட்ட துக்ககரமான சம்பவம் இடம்பெற்றதாகச் சந்தேகிக்கிறோம்.

இது ஒரு அப்பட்டமான யுத்த நிறுத்த மீறல். இந்தச் சம்பவத்தை மிகவன்மையாகக் கண்டிப்பதோடு, ஆழ்ந்த சோகத்தில் இருக்கும் இரு குடும்பங்களுக்கும் தம்முடைய அழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதாகவும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆயுதக்...

இவர்கள் இருவரினதும் உடல்கள் உறவினர்களால் எடுத்துவரப்பட்டு ஏறாவூர் வைத்தியசாலையில் பிரேத பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு மரணவிசாரணை நடத்தப்பட்டது.

## புலிகளுடன்...

களை மேற்கொள்வதற்கும் விடுதலைப் புலிகளுடன் ஒரு பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்துவது அவசியமாகும். இதனை நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதுடன், அதற்கான நடவடிக்கைகளையும் ஆரம்பித்துள்ளது.

விடுதலைப் புலிகளுடன் இணைந்து பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்தும்போது, உள்நாட்டில் ஏற்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பதற்கான ஆலோசனைகளையும் அரசு ஆராய்ந்துள்ளது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களது அடிப்படைப் புனரமைப்புப் பணிகளை அரசாங்கம் முன்னெடுத்துள்ளது. அடுத்த கட்டமாக நிரந்தர புனரமைப்புப் பணிகளை முன்னெடுக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதுடன் அதற்கான ஆரம்ப நடவடிக்கையையும் எடுத்துள்ளது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கான புனர்நிர்மாணப் பணிகளை முன்னெடுப்பதற்கென சர்வதேச நாடுகள் உதவிகளை வழங்குவதற்கு முன்வந்துள்ளதுடன் வாக்குறுதிகளையும் வழங்கியுள்ளன. இந்த உதவிகள் நிச்சயம் கிடைக்கும் என்பதில் அரசாங்கம் உறுதியாக இருக்கிறது.

சர்வதேச நாடுகளும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக விடுதலைப் புலிகளுடன் பொதுக்கட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்தவேண்டுமென விரும்புகிறது எனத் தெரிவித்தார். (01)

# குடும்பஸ்தர் இருவர் வெட்டிப் படுகொலை!

வவுனியா – செட்டிகுளம் பொலிஸ் நிலையப் பிரிவுக்குள் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற சம்பவமொன்றில் ஒருவர் வெட்டிக்கொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

செட்டிக்குளம் மணிக்பண்ணைப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 9.45 மணியளவில் 53 வயதுடைய கே.சாமிக்கண்ணா என்பவர் – அவருடைய மருமகன் முறையான முத்து விஜயகுமார் என்பவரால் கோடரியால் வெட்டிக்கொலை செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொலைச் சந்தேகநபர் தலைமறைவாகியுள்ளார். அவரை பொலிஸார் தேடி வருகின்றனர்.

இந்தச் சந்தேகநபர் மதவாச்சி மற்றும் ஓமந்தைக்கு அப்பால் தப்பியோடி விடாமல் தடுப்பதற்காக உறுதியான நடவடிக்கை எடுக்குமாறு நேற்றுமுன்தினம் சம்பவ இடத்திற்கு விஜயம் செய்து விசாரணைகளை மேற்கொண்ட வவுனியா மாவட்ட நீதிபதி எம்.இளஞ்செழியன் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

இதேவேளை, வவுனியா- வீரபுரம் பகுதியில் இடம்பெற்ற மற்றொரு சம்பவத்தில் சிதம்பரம் வேலுச்சாமி என்பவரும் நேற்று முன்தினம் இரவு வெட்டிக் கொல்லப்பட்டார்.

இந்த இரண்டு கொலைகளுக்கும் குடும்பத் தகராறே காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# புலிகளின் வசமுள்ள...

அத்துடன், கிளைடர் ரக விமானங்களை விடுதலைப் புலிகள் அவுஸ்ரேலியாவிலிருந்தே வாங்கியுள்ளனர்.

இதனைத்தவிர விடுதலைப் புலிகள் தமது இராணுவக் குழுவொன்றை வைத்து ஐரோப்பிய, வடஅமெரிக்க, தென்கிழக்காசிய நாடுகளில் வியாபார, அரசியல் வலைப்பின்னலை மேற்கொண்டு வருகின்றனர்.

1990 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளின் சிறிய குழுவொன்று தாய்லாந்தில் நோர்வேயின் முன்னாள் கடற்படை அதிகாரிகளிடம் நீருக்கடியில் சென்று தாக்குதல் நடத்துவதற்கான பயிற்சியைப் பெற்றது.

விடுதலைப் புலிகளின் கடற்புலிகளில் 3 ஆயிரம் முதல் 4 ஆயிரம் வரையிலான உறுப்பினர்கள் உள்ளனர். இவர்கள் கடல்நீரேரி தரைப் பகுதி மற்றும் சர்வதேச கடற்பகுதிகளில் செயற்படும் வகையில் உள்ளனர். கடற்புலிகளில் 13 பிரிவுகள் உள்ளன.

அவைகள், கடல் தாக்குதல் பிரிவு, நீருக்கடியில் சென்று இலக்கைத் தாக்கும் பிரிவு, தாக்குதல் படையணி, பொறியியல் மற்றும் படகு கட்டுமானப் பிரிவு, ராடர் மற்றும் தொலைத்தொடர்பு பிரிவு, ஆயுதக்களஞ்சியப் பிரிவு, கல்வி மற்றும் ஆட்சேர்ப்புப் பிரிவு, அரசியல், நிதி மற்றும் பிரசாரப் பிரிவு, முக்கியத்துவம் வாய்ந்த பொருளாதார வலயம் மற்றும் உதவிப் பிரிவு, புலனாய்வுப் பிரிவு, நலன்புரி பிரிவு, பதிவுப் பிரிவு என்பனவாகும்.

இவற்றைவிட பெண்கள் பிரிவு (இது கடற்புலிகளில் 30 வீதம்) கடற் புலனாய்வு நடவடிக்கைப் பிரிவு, மற்றும் கரும்புலிப் படையணி என்பனவும் உள்ளன.

விடுதலைப் புலிகளின் வர்த்தகக் கப்பல்கள் எவ்வித கட்டுப்பாடும் இன்றி சுதந்திரமாகச் செயற்பட்டு வருகின்றன. இந்தக் கப்பல்கள் பனாமா, கொண்டூரஸ், லைபீரியா, சைப்பிரஸ், கிறீஸ், மோல்ரா மற்றும் நியூஸிலாந்து ஆகிய நாடுகளின் கொடிகளைப் பறக்கவிட்டுள்ளன. இந்தக் கப்பல்களில் இலங்கைத் தமிழர்களும், வெளிநாட்டவர்களும் மாலுமிகளாகப் பணியாற்றிவருகின்றனர்.

விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் – இலங்கை கடற்படையினரின் அரைவாசிக்கும் மேலான ரோந்துக் கப்பல்களை அழித்துள்ளனர். மிகப் பெரிய போர்க்கப்பலான சாகரவர்த்தனவை கரும்புலித் தாக்குதல் நடத்தி மூழ்கடித்து அந்தக் கப்பல் கப்டனையும் சிறைப்பிடித்தனர்.

1991 ஆம் ஆண்டு ஆனையிறவு முகாமைக் கைப்பற்ற எடுத்த முயற்சி தோல்வியில் முடிந்த நிலையில், அதனைப் படிப்பினையாக வைத்துக் கொண்டே விடுதலைப் புலிகள் வேவுப் படையணியொன்றை அமைத்தனர்.

இந்தப் படையணி நீண்டகாலமாக இராணுவ இலக்குகள் குறித்த தகவல்களைத் திரட்டியது. இதனை அடிப்படையாக வைத்து விடுதலைப் புலிகளின் படவரைவுப் பிரிவு மாதிரி இராணுவ முகாமை தயாரித்தது. இதனை வைத்தே விடுதலைப் புலி உறுப்பினர்கள் பயிற்சியை மேற்கொண்டனர். விடுதலைப் புலிகளின் யுத்த வெற்றிகளுக்கு அவர்களது தலைமைத்துவமும் தொலைத்தொடர்புக் கருவிகளை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தமையுமே காரணமாகும்.

விடுதலைப் புலிகள் தமக்கான நிதியுதவிகளை பல்வேறு வகையில் பெற்றுக்கொள்கின்றனர். இவ்வாறு இவர்கள் இந்த நிதியை பெற்றுவரும் வேளை எதிர்காலத்தில் அவர்கள் எவரிடமும் நிதியுதவிகளை பெறவேண்டிய தேவையே இல்லாமல் வளர்ச்சியடைந்தவர்களாக தனித்து செயற்படுவர்.

சீனா மற்றும் ரஷ்ய நாடுகளின் தயாரிப்பான 130 மி.மீற்றர் ஆட்லறி பீரங்கிகளை இனந்தெரியாத விநியோகஸ்தர்களிடமிருந்து விடுதலைப் புலிகள் பெற்றுள்ளனர்.

அதுபோலவே சர்வதேச வலைப்பின்னல் ஊடாக பல்குழல் பீரங்கிகளையும் பெற்றுள்ளனர். 1994 ஆம் ஆண்டு உக்ரைனிடமிருந்து 60 தொன் வெடிபொருட்களையும், சிறிய ரக ஹெலிகொப்ரரை அவுஸ்ரேலியாவிடமிருந்தும் விமான எதிர்ப்பு ஏவுகணைகளை பல்கேரியாவிடமிருந்தும் பெற்றுள்ளனர்.

இவற்றைவிட 1993 ஆம் ஆண்டு பூநகரி முகாமைத் தாக்கிய விடுதலைப் புலிகள் அங்கிருந்து ரி.55 ரக டாங்கியை எடுத்துச் சென்றனர். இந்த டாங்கி தற்போது வடபகுதி கடற்கரையோரமாக நிறுத்தப்பட்டுள்ளது. ஏனெனில் – இலங்கை கடற்படை படகுகளைத் தாக்கவாகும்.

இலங்கை – இந்திய மற்றும் தமிழ் குழுக்களிடமிருந்து 10 ஆயிரம் துப்பாக்கிகளைப் புலிகள் கைப்பற்றியுள்ளனர். 500 தொடக்கம் ஆயிரம் வரையான கண்ணாடி இழைப்படகுகளை வைத்துள்ளனர். நீருக்கடியில் செல்லும் 10 ஸ்கூட்டர்கள் மற்றும் 50 தொடக்கம் 100 வரையான சுழியோடும் சாதனங்களையும் வைத்துள்ளனர்.

இவற்றுடன் சிறிய ரக நீர்மூழ்கிக் கப்பலொன்றை வெளிநாட்டிலிருந்து வாங்குவதற்கு விடுதலைப் புலிகள் முயற்சி செய்து வருகின்றனர்.

கடந்த காலத்தில் விடுதலைப் புலிகள் கம்போடியா, தாய்லாந்து மற்றும் பர்மா ஆகிய நாடுகளிடமிருந்து சிறிய ரக ஆயுதங்களையும், குரோஷியாவிலிருந்து 32 ஆயிரத்து 400 மோட்டார் செல்களையும் மலேஷியாவிலிருந்து விரைவுப் படகுகள் மற்றும் வெளியிணைப்பு இயந்திரங்களையும் சிங்கப்பூரில் இருந்து தகவல் தொடர்பு உபகரணங்களையும், அவுஸ்ரேலியாவிலிருந்து கிளைடர்ஸ் விமானங்களையும், டென்மார்க்கிலிருந்து கடல் ஸ்கூட்டர்களையும், ஜேர்மனியிலிருந்து தொலைநோக்கிகளையும், இங்கிலாந்திலிருந்து தொலைத்தொடர்புக் கருவிகளையும் வாங்கியுள்ளனர்.

போர்நிறுத்தம் ஏற்படுத்தப்பட்ட பின்னரும், இந்திய மற்றும் இலங்கை ஆகியவற்றுக்கு விடுதலைப் புலிகளின் கடற்படையால் அச்சுறுத்தல் இருந்தவண்ணமே உள்ளது. என்னதான் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருந்தாலும் இராணுவ முகாம்களையும், கொழும்பிலும் தாக்குதலை வெற்றிகரமாக நடத்தும் வல்லமை புலிகளிடமுள்ளது.

அத்துடன், சிலமணி நேரத்துக்குள்ளாகவே 5 ஆயிரம் விடுதலைப் புலி உறுப்பினர்களை ஒன்றிணைத்து வடக்கு – கிழக்குப் பகுதிகளில் தாக்குதல் நடத்தவும் தற்கொலைத் தாக்குதலையோ அல்லது கொமாண்டோ பாணியிலான தாக்குதலை நடத்தவோ விடுதலைப் புலிகள் வலிமை பெற்றவர்களாக உள்ளனர்.

என்னதான் இருந்தாலும் விடுதலைப் புலிகளின் இந்த வளர்ச்சியை இராணுவமோ, அதன் புலனாய்வுப் பிரிவோ கட்டுப்படுத்துவதில் தோல்வியையே கண்டுள்ளன என அந்தச் சஞ்சிகை மேலும் தெரிவித்துள்ளது.

## சர்வஜன...

கீடு செய்யப்படாமல் – வாக்கெடுப்புக்கு அரசு பணத்தைச் செலவிடுவது வீண் விரயமே.

1994 ஆம் ஆண்டிலேயே ஜனாதிபதி அதிகாரம் குறித்து மக்கள் தீர்ப்பளித்துவிட்டார்கள். மீண்டும் எதற்காக இன்னொரு வாக்கெடுப்பு? தமிழீழ விடுதலைப் புலிகளுடன் விவாதிக்காமல் இதுபோன்ற வாக்கெடுப்புக்களை நடத்துவது அர்த்தமற்றது என அவர் மேலும் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இதுகுறித்துக் கருத்துத் தெரிவிக்கையில் –

தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காணாத நிலையில், வாக்கெடுப்பு நடத்துவதென்பது தமிழ்மக்களைப் பொறுத்தவரையில் முற்றிலும் அர்த்தமற்றது.

அத்துடன், அரசாங்கமானது மக்கள் முன்வைக்கவுள்ள வாக்கெடுப்பு தொடர்பான விடயங்களும் தெளிவானதாக இல்லையெனக் குறிப்பிட்டார்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பொதுச்செயலாளர் ஹசன் அலி இது குறித்துக் கூறியதாவது –

சந்திரிகா அரசு கூறுகின்ற இந்த சர்வஜன வாக்கெடுப்புக் குறித்து முஸ்லிம் மக்கள் மத்தியில் ஒருவித குழப்பமான நிலையே நீடிக்கிறது. அரசியல் விளையாட்டுக்களில் இதுவும் ஒன்றென நான் கருதுகிறேன். இதை நாங்கள் ஏற்கமுடியாது.

நிறைவேற்று அதிகாரமுறை ரத்து மற்றும் சமஷ்டி உள்ளிட்ட எதுவானாலும் மக்களுக்கு உரிய விளக்கத்தை அளிக்காதவரை இதனை ஏற்க இயலாது. இந்த வாக்கெடுப்புக் குறித்து ஜனாதிபதி மீள்பரிசீலனை செய்வதோடு, இலங்கைத் தீவின் இனச்சிக்கலுக்கு உரிய தீர்வைக் காணுவதில் அக்கறை செலுத்தவேண்டும் என்று குறிப்பிட்டார்.

## மரண அறிவித்தல்

### திருமதி வல்லிபுரம் சாவித்திரிதேவி

வீமன்காமம் – தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும், சண்டிலிப்பாய் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட **திருமதி வல்லிபுரம் சாவித்திரி தேவி** (27.03.2005) அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற வல்லிபுரத்தின் மனைவியும், யோகராணி, காலஞ்சென்ற சத்தியசீலன், தேவரஞ்சினி, விமலாதேவி ஆகியோரின் தாயாருமாவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் (28.03.2005) இன்று பி.ப. 3.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். இவ் அறிவித்தலை எல்லோரும் ஏற்றுக்கொள்ளவும்.

சண்டிலிப்பாய்
வடக்கு,
சண்டிலிப்பாய்.

தகவல்
மகள் – விமலாதேவி
பேரன் – சஞ்சீவன்

(இ)

கூல் லெமனேற்றிங்
$A_4$ சைஸ் 1/= மட்டுமே
சிவரஞ்சனம் ஓவ்செற் பிறிண்டேர்ஸ்
183, பலாலி வீதி, கோண்டாவில். T.P:- 222 6722

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 28.03.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர) பரீட்சை 2005 ஏப்ரல்

## தமிழ்மொழி (பகுதி I)

ஆசிரியர் : N.பாலா
யா/மானிப்பாய் மெமோறியல்
ஆங்கில பாடசாலை

ஒரு மணித்தியாலம்

**முதலாம் பகுதியிலுள்ள இரு வினாக்களுக்கும், இரண்டாம் பகுதியிலுள்ளவற்றில் எவையேனும் நான்கு வினாக்களுக்கும் எல்லாமாக ஆறு வினாக்களுக்கு விடை தருக.**

### பகுதி (I)

01. பின்வரும் செய்யுட் பகுதிகளுள் எவையேனும் மூன்றினைத் தெரிவு செய்து
(அ) அவற்றின் பொருளை தற்கால உரைநடையில் எழுதுக.
(ஆ) தடித்த எழுத்திலுள்ள பகுதிகளின் சிறப்பைத் தெளிவாக விளக்குக.

(I) கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத்தும்பி
காமஞ் செப்பாது கண்டது மொழிமோ
பயிலுயது கெழீஇய நட்பின் மயிலியற்
செறியெயிற் ளுரிவை கூந்தலின்
நறியவும் உளவோ நீயறியும் பூவே.

(II) ஆற்றார்க் கொன் றாற்றாதான் செல்வமிக நலம்
பெற்றான் தமியள் மூத்தற்று
அமரகத்து வன்கண்ணா போலத் தமரகத்து
மாற்றுலார் மேற்றே பொறை.

அன்பொரீ இத்தற் செற்றற நோக்கா தீட்டிய
வொண் பொருள் கொள்வார் பிறர்

நிலத்திற் கிடந்தமை கால்காட்டும் காட்டும்
குலத்திற் பிறந்தார் வாய்ச்சொல்

(III) கண்முதற் காட்சிய கரையினீளத்த
ஒண்முதற் பொருட்கெலா மூற்ற மாலன
மண் முதற் பூதங்காண் மாயு மென்றயோ
தொண் முதலுயிர்க்கு நீ யிரங்கல் வேண்டுமோ

புண்ணிய நறுநெய்யிற் பொருவில் காலமாம்
திண்ணிய திரியினில் விதியென்றியினி
லெண்ணிய விளக்கலையிரண்டும் மெஞ்சினா
லலண்ணலே யலிவதற்கையம் யாலதோ

(IV) இது அலாது எனைச் சூழ்தர உனக்கு இணையாய்
இயற்றிய உத்துகளினை வைத்து
அதிவித வணக்கம் புரிந்தனர் கொடியோர்
ஆகையால் அழுதனர்

துறவினர் உயிரே பின்னநாள் உன்னைச்
சுசூது இரு நெற்றிகள் கொண்டு
நிறைவு செய்து அருள்வேன் எண்திரு ஒளியாய்
நிலத்தில மாமயில் வடிவாய்
பொறை தரு நபிகள் எவர்க்கும் நாயகமாய்
புண்ணியப் பொருளின் உட்பொருளாய்
அறைதகு கபூபு முகம்மது நபியை
அனுப்புவேன் உனது பால்

2. (அ) பகுதியிலுள்ள கவிதையைப் படித்து அதன் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.
(ஆ) பகுதியிலுள்ள உரைப்பகுதியை வாசித்து அதன் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

தேயிலைத் தோட்டத்திலே....
புழுதிப் படுக்கையில் புதைந்த எம் மக்களை
போற்றும் இரங்கற் புகல்மொழி இல்லை
பழுதிலா அவர்க்கோர் கல்லறை இல்லை
பரிந்தவர் நிறைவு நாள் பழகுவார் இல்லை

ஊனையும் உயிரையும் ஊட்டி இம் மண்ணை
உயிர்த்தவர்கிங்கே உளம் கசிந்து அன்பும்
பூணுவார் இல்லை அவர் புதை மேட்டில் ஓர் கானகப்
பூவைப் பறித்து போடுவார் இல்லையே

ஆழப் புதைந்த தேயிலைச் செடியின்
அடியிற் புதைந்த அப்பனின் சிதைமேல்
ஏழை மகனும் ஏறி மிதித்து
இங்கெவர் வாழவோ தன்னுயிர் தருவன்

என்னே மனிதர் இவரே இறந்தார்க்கு
இங்கோர் கல்லறை எடுத்திலர் வெட்கம்
தன்னை மறைக்கத்தானோ அவ் இறைவனும்
தளிர்பசும் புல்லால் தரை மறைத்தனனே

வாடிய றோசா மலரிதழ் போல
வாடியே அன்னார் வாழ்க்கையும் கழிந்தது
கூடிய வழக்கக் கொடுமைகள் யாவும்
கூர்முள் எனவே குடிகுடி தொடர்ந்தன.

ஓர் நூற்றாண்டு உதயமும் மறைவும்
ஓங்குறு பேரிகை ஒலிக்கக் குமுறலில்
உருவுமழிந்து ஒன்றன்பின் ஒன்றென
உருண்டன புரண்டன ஓழிந்தன கண்டீர்.

1. இக்கவிதைகள் புலப்படுத்தும் உணர்வினை விளக்குக?
2. தேயிலைத் தோட்டத்துக்குத் தம் உழைப்பினை நல்கியவர் கவிஞர் கூறுவதை விபரிக்குக?
3. கவிதை ஊடாக கவிஞர் எதனை வேண்டுகின்றார்?

அல்லது

2. ஒரு பெண் வந்து தன்னுடன் பேசிவிட்டாள் என்பதால் அவன் கூச்சமடையவில்லை. கல்லூரியிலும், வெளியிலும் படித்த பெண்கள் பலருடன் பேசிப் பழகினவன் தான் அவன் அது அவனுக்குப் பழக்கமாயிருந்தது. இந்தப் படிக்காத பெண் தன்னுடன் பேசினது தான் அவனுக்கு குழப்பத்தை உண்டாக்கிவிட்டது. படித்த பெண்களுடன் கூட புது மனிதனர்களுடன் பேசுவது எளிதல்லவே. அப்படி இருக்க நவநாகரிக முறையில் ஆண்களுடன் பழகுவது என்பதை அறியாத இடத்தில் பிறந்து வளர்ந்த பெண் வேறு ஆடவருடன் பேசுவது என்றால், அது ராமுவுக்கு விபரீதமாகப்பட்டது. ஆனால் அவள் பேசிய சொற்கள் மெல்லிய தொனியுடன் தான் வெளிவந்தன. அவனது முகத்தைப் பார்த்துக்கூடப் பேசவில்லை. அவள் தலை குனிந்த வண்ணமாகவே இருந்தாள். இருந்தாலும் அவன் மனம் என்னவோ சமாதானப்படவில்லை.

1. இவ்வுரைநடைப்பகுதியில் விபரிக்கப்படும் ராமுவின் மன உணர்வு யாது?
2. அவனது மன உணர்வுக்கு ஆட்படுத்திய பின்னணியை விளக்குக.
3. இவ்வுரைநடைப்பகுதியில் வெளிப்படும் ஆசிரியரின் நடைமுறைச் சிறப்பினை மதிப்பிடுக.

### பகுதி (II)

3. நல்குரவு என்னும் அதிகாரத்தில் வள்ளுவன் கூறுவனவற்றை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.
(அ) வறுமையின் கொடுமை எவ்வாறு காட்டப்பட்டுள்ளது?
(ஆ) வறுமையினால் ஏற்படும் துன்பங்கள் பற்றி வள்ளுவன் கூறியவற்றைத் தெளிவு படுத்துக.

4. கருபத்துல்லாவின் குறுபான் கொடுத்த படலத்தை ஆதாரமாகக் கொண்டு
(அ) கருபதுல்லா தன் வாயைத் திறந்து அழுதமைக்கான காரணங்களையும்
(ஆ) அதற்கு ஆறுதல் தரும் வகையில் இறைவன் அளித்த பதில்களையும்
(இ சுலைமான் நபி மக்கா நகரில் இறங்கி ஆற்றிய பதில்களையும் விளக்குக.

5. தசரதன் இறந்த செய்தியைப் பரதன் வாயிலாகக் கேட்பது முதல் இராமன் தந்தைக்கு நீர்க்கடன் செய்யப் புகுந்தது வரையுள்ள பகுதியில்
(அ) தசரதனிடம் இராமன் கொண்டிருந்த பாசம்
(ஆ) தசரதனின் பெருமை
(இ வசிட்டனின் பெருமை ஆகியன வெளிப்படுமாற்றைத் தெளிவுபடுத்துக.

6. நாகம்மாள் நாவலில் இடம்பெறும் பாத்திரங்களான
(அ) செல்லக்காள்
(ஆ) காளியம்மாள்
(இ) கெட்டியப்பன்
(ஈ) மணியக்காரரின் பெரியப்பா ஆகியோரின் குணப்பண்புகளைச் சுருக்கமாகக் காட்டி, அப்பாத்திரங்கள் கதை வளர்ச்சிக்கு உதவுமாற்றைப் பரிசீலிக்குக.

7. பாரதியார் காணவிழைந்த சமூக மாற்றங்கள் எவை என்பதையும், இந்தியப் பண்பாட்டின் மீது அவர் கொண்டிருந்த பற்றினையும் உயிர் பெற்ற தமிழர்பாட்டு என்ற கவிதையை ஆதாரமாகக்கொண்டு விளக்குக.

8. புதுமைப்பித்தனின் ஒருநாள் கழிந்தது கதை முருகதாசருடைய வறுமை நிலையை எவ்வாறு புலப்படுத்துகிறது என்பதைத் தெளிவுபடுத்துக.

9. பின்வருவனவற்றில் எவையேனும் மூன்றினை விபரிக்குக.
(அ) திருப்பள்ளியெழுச்சி பாடல்கள் புலப்படுத்தும் காலைக் காட்சிகளும் அந்நேரச் செயற்பாடுகளும்
(ஆ) தவப்பயனில் நிர்மலானந்தரின் மறுபிறப்பு எவ்வாறு நியாயப்படுத்தப்படுகின்றது.
(இ) மாமலர் முண்டகம் எனும் கலித்தொகைப் பாடல் தரும் செய்திகள்.
(ஈ) பிச்சமூர்த்தியின் பெட்டிக்கடை நாரணன் பாடலிலே காணப்படும் சிறப்புகள்.
(உ) இராம நாடக கீர்த்தனத்தில் இராவணன் கொலு வீற்றிருக்கும் காட்சி.

# தமிழ்மொழி (பகுதி II)

ஆசிரியர் : N.பாலா
யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை

ஒரு மணித்தியாலம்

**முதலாம் பகுதியிலுள்ள மூன்று வினாக்களுக்கும், இரண்டாம் பகுதியிலிருந்து ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு வினாவேனும் உள்ளிட்ட மூன்று வினாக்களுக்கும் எல்லாமாக ஆறு வினாக்களுக்கு விடை தருக.**

## பகுதி (I)

01. கீழ்வருவனவற்றுள் யாதேனுமொரு தலைப்பைத் தெரிவு செய்து 350, 400 சொற்கள் கொண்ட கட்டுரையை வரைக.

1. பேராசிரியர் வித்தியானந்தன் தமிழ்ப்பணிகள்
2. புலம்பெயர் காலத்து இலக்கியங்கள்
3. விஞ்ஞானமும் சமூகமும்
4. இலக்கியக் கல்வியின் அவசியம்
5. தகவல் தொழில்நுட்பமும் அதன் பயன்பாடுகளும்
6. செய்யும் தொழிலே தெய்வம்

02. பின்வரும் (அ) உரைப்பகுதியையும் (ஆ) செய்யுளையும் படித்து அவை ஒவ்வொன்றின் கீழும் தரப்பட்ட வினாக்களுக்கு விடை எழுதுக.

(அ) புத்தி, உணர்ச்சி என்று மனிதனுக்கு இரண்டு வகைச் சக்திகள் உண்டு. மோட்டார் வண்டிக்கு பெற்றோல் எவ்வளவு அவசியமோ, அவ்வளவு அவசியமானவை அவைகள் உடலுக்கு. மோட்டாரை இழுத்துச் செல்லும் சக்தி பெற்றோலில் இருக்கின்றது. மனிதனை இழுத்துச்செல்லும் சக்தி உணர்ச்சிக்கு உண்டு. உணர்ச்சி தான் மனிதனுடைய மூலவளம். உணர்ச்சி மனிதனை வாழ்வில் இழுத்துக்கொண்டு சென்றாலும் அதை அடக்கியாள ஒரு சமாதானம் வேண்டும். மோட்டாருக்கு பிரேக் எவ்வளவு தேவையோ அவ்வளவு தேவை மனிதனுக்கு புத்தி, புத்தியின் ஆட்சிக்குக் கட்டுப்பாடாத உணர்ச்சியின் தாங்கமுடியாத வேகத்தால் மனிதன் தேய்ந்து மாய்ந்து போய்விடுகிறான். புத்தியையும் உணர்ச்சியையும் பக்குவமாய் இணைத்து அவைகளை மனிதனுக்கு பெருந்துணையாகச் செய்வதே படிப்பின் நோக்கம், பழக்கத்தின் பயன்.

1. இப்பகுதியில் ஆசிரியர் கூறவந்த பிரதான கருத்து யாது?
2. கூறவந்த கருத்தை ஆசிரியர் எவ்வாறு விளக்குகின்றார்?
3. இப்பகுதியில் ஆசிரியர் கூறியுள்ளவற்றை பதினைந்து சொற்களுக்கு மேற்படாமற் சுருக்கி எழுதுக.

(ஆ) பூவாதே காய்க்கும் மரமுள்ள மக்களும்
ஏலாதே நின்றுணர்வார் தாமுளரேதூவா
விதைத்தாலு நான்றாகா வித்தெனவே பேதை
குரைத்தாலுந் தோன்றாணர்வு.

1. இச் செய்யுளில் ஆசிரியர் பொதித்த வைத்துள்ள கருத்தை ஏறத்தாழ முப்பத்தைந்து சொற்களில் ஒரு பந்தியாக எழுதுக.
2. இச்செய்யுளில் இடம்பெறும் உவமைகளை எடுத்துக் காட்டுக.
3. இச் செய்யுளில் இடம்பெறும் எதிர்மறைகளை எடுத்துக்காட்டுக.

3. அ), (ஆ), (இ), (ஈ) பகுதிகளில் உள்ள வினாக்களில் எவையேனும் பத்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.
சந்தி பிரித்தெழுதுக.
(அ) 1. உற்பலித்தெழுந்த ஞானத்தொருமை
2. மார்பிலணிந்ன்னருகடல்

(ஆ) பின்வரும் வாக்கியங்களிலுள்ள மயக்கத்தை எடுத்துக்காட்டி, அவற்றை மயக்கமுற்ற முறையில் எழுதுக.
3. மழை பெய்ததன் காரணமாக பயிர் விளைந்தது.
4. இராமன் எனக்கு நேரமில்லை என்றான்.

(இ) பின்வரும் வாக்கியங்களிலுள்ள வழுக்களை எடுத்துக்காட்டி அவற்றைத் திருத்துக.

5. அப்படிப்பட்ட ஒருவர்தான் நம்முடைய தேசியக் கவிஞர்
6. நாவலர் யாழ்ப்பாணத்து நல்லூரிலே அவதரித்தார்கள்.
7. நமது நாட்டில் துன்பமும் துயரமும் தாண்டவமாடுகின்றன.
8. ஒரு மனிதன் என்னைச் சந்திக்க வந்தான்.
9. அவர்தான் மகனை இழந்தார்.
10. மலை, மழை, கடல், பனை இவற்றுள் பன்மை விருத்தி பெறாத ஒரு சொல்.
11. வந்து, உண்ண, ஓடி, செய, உண்ணனின் இவற்றுள் செய்து என்னும் வாய்பாட்டு வினையெச்சங்கள் எவை?
12. கத்தியால் வெட்டினான், தெருவால் போனான், தடியால் அடித்தான், காலால் நடந்தான் இவற்றுள் மூன்றாம் வேற்றுமைக்குப் பொருத்தமற்ற தொடர்.
13. உண்டான், நின்றான், வந்தான், படித்தான், ஓடினான் இவற்றுள் செயற்படு பொருள் குன்றிய வினைகள் எவை?
14. தொடுத்தான், தொடுக்கிறான், தொட்டான், தொடான் இவற்றுள் பகுதியிரட்டித்து காலம் காட்டம் சொல் எது?
15. கடித்தான், போன்றான், பாய்ந்தான், உண்டான் இவற்றுள் பெயராகவும் வினையாகவும் வந்த வினைச்சொல் யாது?

## பகுதி (II)

1. (அ) சங்க இலக்கியங்களில் காணப்படும் அகத்திணை மரபு தழுவிய இலங்கியங்களைத் தருக.
(ஆ) இவ்விலக்கியங்களில் அகத்திணை மரபு எவ்வாறு தழுவப்பட்டுள்ளது என்பதைச் சுருக்கமாகத் தருக.

2. சோழர்கால இலக்கியங்களில் பல்லவர்கால இலக்கியங்கள் எத்தகைய செல்வாக்குச் செலுத்தியுள்ளது என்பதை ஆராய்க?

3. சோழர்கால இலக்கியங்களுக்கும், நாயக்கர்கால இலக்கியங்களுக்குமிடையே உள்ள வேற்றுமைகளைத் தெளிவுபடுத்துக.

## பகுதி (III)

1. (அ) 19 ஆம் நூற்றாண்டில் ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்குப் பெரும்பணி புரிந்தவர் எனக் கருதப்படுபவர்களில் முக்கியமான ஐவரைக் குறிப்பிடுக.
(ஆ) 19 ஆம் நூற்றாண்டின் இலக்கியப் பண்பினைச் சுருக்கமாகத் தெளிவுபடுத்துக.

2. (அ) ஈழத்து எழுச்சி பெற்ற சிற்றிலக்கியங்களைத் தருக?
(ஆ) இச்சிற்றிலக்கிய மரபு எவ்வாறு வளர்ச்சி பெற்றது?

3. சுதந்திர இலங்கையில் ஈழத்து நாவல் வளர்ச்சி பற்றித் தெளிவுபடுத்துக.

4. பின்வருவோர் எவரேனும் இருவர் ஈழத்து தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பினை மதிப்பீடு செய்க.
1. பேராசிரியர் தனிநாயகம் அடிகள்
2. டானியல்
3. மங்களம் தம்பையா
4. அரசகேசரி
5. நவாலியூர் சோமசுந்தரப் புலவர்.

# வீரசிங்கம் மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்ற மகளிர்தின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபையின் மாவட்ட மகளிர் குழுவினர் நடத்திய அனைத்துலக பெண்கள் தின விழா நேற்று முன்தினம் காலை 10 மணியள வில் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் கூட்டுறவுச்சபையின் மாவட்ட மகளிர் குழுத் தலைவி ரதி சோதிலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

இந்தநிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் நாச்சியார் செல்வநாயகமும், சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் கலைவிழி, யாழ். மாவட்ட கூட்டுறவுச்சபைத் தலைவர் பெ.கனகசபாபதி மற்றும் யாழ். மாவட்ட கூட்டுறவுப்பகுதி பொறுப்பாளர் பொடிஸ்குமார் ஆகியோர் கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்தார்கள்.

யாழ்.மாவட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களும் கலந்து சிறப்பித்தனர்.





